www.tamilarangam.net


# களத்தில்




தலைவர் பிரபாகரன் அவர்கள்,பீ.பீ.சி. க்கு அண்மையில் வழங்கிய செவ்வியின் விபரம் உள்ளே ⇒


திருவள்ளுவர் ஆண்டு 2026 மேழம் 21 (05.05.95) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் அன்பளிப்பு: 40p


# மீண்டும் களத்தில்

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்குமிடையே கட்டங்கட்டமாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையானதுகாலவதியான காலக்கெடுவுடன் முடிவடைந்தது, காலங்காலமாக சிங்களத் தலைமைகள்பேச்சுவார்த்தைகளின்போது நடந்துகொண்டது போலவே சனாதிபதி சந்திரிகா அவர்கள் நடந்து கொண்டதோடு மட்டுமல்லாமல் "பாரிஸ் பணத்திலும்" "இராணுவ குணத்திலுமே"நம்பிக்கை கொண்டு, ஏமாற்ற முனைந்ததனால் தலைவர் பிரபாகரன் அவர்கள் கொடுத்திருந்த காலக்கெடுவுங் கடந்து முறிவடைந்தது. சிறீலங்கா இராணுவ வெறியாட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய சூழ்நிலையில் புலிகள் மீண்டும் களத்தில் நிற்கவேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததா? அன்றி முடிவடைந்ததா? என்ற நிலைப்பாட்டில் "நல்ல முடிவுகளை எடுத்து நடைமுறைப்படுத்த முன் வந்தால் போரைநிறுத்தத் தயார் எனத் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பீ.பீ.சி.க்கு அளித்துள்ள செவ்வியிற் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில்தமிழீழமெங்கும்3 ஆம் கட்டப் போர் வெடித்துள்ளது. ஈழத்தின் பகுதியெங்கும் உக்கிரமான சண்டைநடை பெறுவதாக அங்கிருந்து வருஞ்செய்திகள் கிடைக்கின்றன.

## திருமலையில் 2 பீரங்கிக் கப்பல்கள் மூழ்கடிப்பு !

### சுழியோடித் தாக்குதலில் 4 கரும்புலிகள் வீரச்சாவு

"காலக்கெடு முடிவடையப் போகின்றது, எதற்கும் தயாராக இருங்கள்" என சிறீலங்கா இராணுவத்தின் தலைமைத் தளபதி ஜெரி. டி. சில்வாவால் உத்தரவிடப்பட்டு தயார் நிலையில் திருகோணமலை துறைமுகத்துள் நின்ற 'சூரயா', 'ரணசுரு' என்ற அதிவேக பீரங்கிக்கப்பல்கள் இரண்டு விடுதலைப் புலிகளினால் மின்னல் வேகத்தில் தாக்கி அழிக்கப்பட்டன. மிகவும் பாதுகாப்பான காவலுடன் இருப்பதாக சிறீலங்காப் படையினரால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட இடங்களுள் ஒன்றான திருமலைத் துறைமுகப்

தொடர்ச்சி: 12 ஆம் பக்கம்

## கட்டுமுறிவு முகாம் நள்ளிரவில் வீழ்ச்சி 37 இராணுவம் பலி

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கட்டுமுறிவு அதிரடிப்படை இராணுவமுகாம், 22-04-95 அதிகாலை விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சியுற்றது. சுமார் 7 மணித்தியாலங்கள் நடைபெற்ற உக்கிரமான சண்டையின்பின் இம்முகாம் விடுதலைப்புலிகளால்நிர்மூலமாக்கப்பட்டது. இத்தாக்குதல் ஆரம்பமானபொழுது இம்முகாமில், கெரில்லா எதிர்ப்புப் போரில் விசேட பயிற்சி பெற்ற 60 சிறீலங்காப் படையினரும் சாதாரண சிறீலங்காப் படையினர் 100 பேரும் இருந்ததாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இரவு 10.55 முதல் மறுநாள் அதிகாலை 6.00 மணி வரை நடைபெற்ற இச்சண்டையில் 37 இராணுவத்தினர் கொல்லப்பட்ட

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்...

### 16 மணி நேரத்துள் புலிகள் ஏற்படுத்திய வீரச்சாதனை

## குண்டு போட்ட 2 விமானங்கள் துண்டு துண்டாகின 100 இற்கு மேற்பட்ட படையினர் பலி

தமிழீழ மண் மீட்புப் போரில் மற்றொரு மகத்தான வீரச்சாதனை! சிறீலங்கா விமானப்படையின் இரு பாரிய விமானங்கள், பதினாறு மணித்தியாலங்களில் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் பீரங்கிக்குஇலக்கானது.கடந்த28ஆம்நாள்மாலை4.30மணிக்கும், 29 ஆம் நாள் காலை 8.30 மணிக்கும் இடைப்பட்ட பதினாறு மணித்தியாலங்களிலேயே இரண்டு விமானங்களும் விடுதலைப் புலிகளின்விமானஎதிர்ப்புஅணியால்சுட்டுவீழ்த்தப்பட்டன.

"சிலஉயர்படைஅதிகாரிகள் உட்பட, நூற்றுக்கு மேற்பட்ட படையினர் இவ்விரு தாக்குதல்களிலும் உயிரிழந்துள்ளனர். பலாலியிலிருந்து இறந்த இரு இராணுவத்தினரின் உடல்களுடன், விடுமுறையில் செல்வதற்கிருந்த படையினரையும் ஏற்றிக் கொண்டு 28-04-95 வெள்ளி புறப்பட்ட விமானம் சொற்ப நேரத்துள் புலிகளின் தாக்குதலுக்குஉள்ளாகி,ஒரு பக்கச் சிறகு தீப்பிடித்த நிலையில் வீழ்ந்து நொருங்கியது. இதில் ஐம்ப திற்கும் மேற்பட்ட ஆளணியினரை சிறீலங்காப்படைஇழந்துள்ளது.

மறுநாட்காலை பலாலி நோக்கி வந்துகொண்டிருந்த 'அவ்ரோ' விமானம், மாதகல் பகுதியின் மேலாகப் பறந்து கொண்டிருக்கையில், விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புக்கு இலக்காகியது. இத் தாக்குதலின்போது ஏவுகணை ஒன்று,தமது விமானத்தைப்பின்தொடர்ந்து துரத்துகின்றது என விமானஓட்டி அலறியுள்ளதை சிறீலங்காவின் கட்டளைமையம் பதிவு செய்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. விமானஓட்டி அலறிய மறுவினாடியே விமானம் தீப்பிளம்பாகி வெடித்துச் சிதறி உள்ளதாகவும் அச்செய்தி மேலும் கூறியுள்ளது. இதில் 30 இராணுவத்தினர், 12 விமானப் படையினர், 05 கடற்படையினர், 02 பொலிசார் உட்பட 'லேக்கவுஸ்' பத்திரிகை

தொடர்ச்சி: 12 ஆம் பக்கம்

## அராலித்துறையில் அதிரடி நடவடிக்கை 20 இராணுவத்தினர் பலி

தமிழீழ விடுதலைப் புலிகள், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள அராலித்துறை இராணுவக் காவலரண்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில், ஒரு இராணுவ அதிகாரி உட்பட மூன்றுஇராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

இத் தாக்குதலை முறியடிக்கவென வேலணைப் பக்கமாக இருந்து உதவிக்குவந்த சிறீலங்கா இராணுவ அணியை,

தொடர்ச்சி: 12 ஆம் பக்கம்

## அச்சுவேலியில் பாரிய இராணுவத் தரைநகர்வு முயற்சி முறியடிப்பு

பலாலிஇராணுவமுகாமிலிருந்து இடைக்காடு வளலாய் ஊடாக அச்சுவேலிநோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினரின் முயற்சி புலிகளால் முறியடிக்கப்பட்டது. 24-04-95 காலை 6.00 மணியளவில்

தொடர்ச்சி: 12 ஆம் பக்கம்

### நல்லமுடிவெடுத்து நடைமுறைப்படுத்த முன்வந்தால்

## சமாதானத்திற்கு ஆயத்தம்

–தலைவர் பிரபாகரன் பி.பி.சி க்கு ஆணித்தரமான விளக்கம்

"எமது சமாதானக் கதவுகள் இன்னும் திறந்தே இருக்கின்றன, சிறீலங்காஅரசின் அணுகுமுறையில்நாம் அதிர்ச்சியும்ஏமாற்றமும்கொண்டிருக்கிறோம் என்பது உண்மை. ஆனால் சமாதானத்தில் நாம் நம்பிக்கை இழக்கவில்லை. சமாதான வழிமுறைமூலமாகத் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குசுமுகமான தீர்வு காணமுடியும்



என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு. சமாதானத்திற்கான முழுமுயற்சிகளை அரசாங்கமே எடுக்கவேண்டும். எமது மக்கள் மீது மீண்டும் திணிக்கப்பட்டுள்ள பொருளாதார, மீன்பிடித் தடைகளை

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்..

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கட்டுமுறிவு முகாம் மீது..

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

தாகவும் 50 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன. மிகுதியானோர் காடுகளுள்ஓடியதாகவும்அவர்களின்நிலை இன்னதெனத் தெரியவில்லையெனவும்விமர்சகர்கள்விமர்சித்துள்ளனர்.

இவ் அதிரடிப்படை முகாம் தாக்குதலுக்கு உள்ளாகிக்கொண்டிருந்த அதேவேளை,வாகரைமுகாம்மீதும் தாக்குதல் நடாத்தி அம் முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் உதவிக்கு விரைய முடியாதவாறு புலிகள் தடுத்து நின்றனர். கதிரவெளி முகாமிலிருந்துபுறப்பட்ட நூற்றிற்கு மேற்பட்ட ஆட்பலமுடைய சிறீலங்கா இராணுவ அணியும், உதவிக்கு வரமுடியாதவாறு விடுதலைப்புலிகளின் வேறொரு அணியினால் இடைமறித்துத் தாக்கப்பட்டது. உதவிக்கென சிறீலங்காவின் பல முகாம்களிலிருந்தும் அனுப்பப்பட்டபடையணிகள்அவ்விடத்தை அணுகமுடியாதநிலையில்,பலமைல் தொலைவிலிருந்து கட்டுமுறிவு இராணுவமுகாம் அழிக்கப்படும் சத்தத்தைக்கேட்டுக்கொண்டும் அசையமுடியாத பரிதாபநிலையில் இருந்தனர். விடுதலைப்புலிகள் தாக்குதலை முடித்து, முகாமை நிர்மூலமாக்கி, இலக்கை வெற்றிகரமாக எய்தி வெளியேறிய பின்னரே, சிறீலங்காப் படையணிகளால் அவ்விடத்திற்குநகரமுடிந்தது.

இத்தாக்குதல் நடைபெறுகையில் உதவிக்கு வந்த விமானங்கள் மீதும் உலங்குவானூர்திகள் மீதும் விடுதலைப்புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டதினால் அவைகளாலும்தமதுபாதிப்புற்றமுகாமிற்குஉதவ முடியாதுபோயிற்று.

இத்தாக்குதலில் மேஜர்.அச்சுதன், லெப்.கண்ணதாஸ், லெப்.சிவம், லெப்.இராஜேந்திரன், லெப்.சைதார், 2ம் லெப்.சிவராஜ், 2ம் லெப். இலக்கியன், வீரவேங்கை தனபாலசிங்கம், வீரவேங்கை ஈழவர்மன், வீரவேங்கை மாவேந்தன், வீரவேங்கை யேசு, வீரவேங்கை ஞானமூர்த்தி,வீரவேங்கை இசைவாணன், வீரவேங்கை தனபாலசிங்கம் ஆகிய பதினான்கு விடுதலைப்புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இவர்களில் 10 விடுதலைப்புலிகள் தாக்குதல் நேரத்திலும், 4 விடுதலைப்புலிகள் பின்னர் நடைபெற்ற விமானத் தாக்குதலிலும் வீரச்சாவுஅடைந்துள்ளனர்.

இத்தாக்குதலில் மிக நவீன ஆயுதங்கள் உட்பட, ஏராளமான இராணுவ ஆயுத தளபாடங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் விபரங்கள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| GPMG | 2 |
| TRIPOD | 3 |
| TKLMG | 1 |
| 60mm MORTAR | 2 |
| TRIPOD & BASE PLATE | 2 |
| SILENCER | 2 |
| SNIPER | 1 |
| AK LMG | 4 |
| MAGAZINE | 22 |
| T56 | 12 |
| T56 - NEW MODEL | 2 |
| T56 MAGAZINE | 56 |
| T81 | 2 |
| MAGAZINE | 7 |
| 40mm MORTAR | 1 |
| 40mm MORTAR SHELL | 6 |
| CLAYMORE MINES | 15 |
| டப்பிமைன் | 65 |
| புகைக்குண்டு | 4 |
| T81 - MORTAR SHELL | 71 |
| குண்டுகள் | 65 |
| 60mm MORTAR SHELL | 31 |
| AKLM தோட்டா | 1002 |
| நடுத்தர ரவைகள்<br>ஏனைய ரவைகள் | 8130<br>13345 |
| Premier Vision | 1 |
| Night Vision | 2 |
| Camera | 2 |
| பரா லைட் | 6 |
| பைனகுலோர் | 2 |
| Kitbag | 32 |
| Generator | 1 |
| சப்பாத்து | 22 சோடிகள் |
| புளட் புருவ் வெஸ்ட் | 2 |
| AK Holster | 11 |

# நீதியான சமாதானம் நோக்கி சுவிசில் மாநாடு

## விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினர் திரு. திலகர் உரை



கடந்த 8 ஆம் நாள் சுவிஸ் பேர்ண் நகரில், 'நீதியான சமாதானம் நோக்கி' என்ற தலைப்பில், மாநாடு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. சுவிஸ் நாட்டு மத அமைப்புக்கள்சிலவும்அகதிகள் பாதுகாப்பு அமைப்புக்கள் சிலவும் இணைந்தே இதனை நடத்தியுள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்து வருகைதந்திருந்த தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த அருட்தந்தை ஜெபநேசன் சிறப்புரை ஆற்றினார். உப்சாலா பல்கலைக்கழகப் பேராசிரியர்பீற்றர்சால்க்,செய்தித்தாளர் திரு. எறிக் சமிட், அரச பயங்கரவாதத்திற்குஎதிரான அமைப்பைச்சேர்ந்த செல்வி டியட்ரி மக்கொனல், 'யாழ்ப்பாணத்திற்குத் திரும்புதல்' என்ற நூலை எழுதிய இத்தாலியரான திரு. பிலிப்போ ஜிகாந்தி ஆகியோருடன் விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினர் திரு. லோரன்ஸ் திலகர் அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார். தமிழ் மக்கள் நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டுவருவதுஅனைத்துப் பேச்சாளர்களாலும் சுட்டிக்காட்டப்பட்டது. பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறவேண்டும் எனவும், தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் சிறீலங்கா அரசால் உடன் தீர்க்கப்படவேண்டும் எனவும், அனைத்துலக நாடுகள் குறிப்பாக உதவிவழங்கும் மேற்குலக நாடுகள், இதற்கென சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. சமாதானம் ஏற்படும்வரை சுவிஸ் நாட்டில் இருந்து தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பக்கூடாது எனக்கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இம்மாநாட்டில் நூற்றுக்கணக்கில் சுவிஸ் மக்களும்கலந்துகொண்டனர்.

# மூன்று பிரிகேடியர்கள் மீது இராணுவ சதி விசாரணை

கடந்த பொதுத்தேர்தல் சமயத்தில் இராணுவச் சதிப்புரட்சி ஒன்றை மேற்கொள்ள இருந்தமை தொடர்பாக இராணுவத்தைச் சேர்ந்த மூன்று பிரிகேடியர்கள்விசாரிக்கப்படவுள்ளனர். இதேசமயம், முன்னாள் இராணுவத் தளபதி சிசிலிடமும் தற்போதைய இராணுவத் தளபதி ஜெரி டீ சில்வாவிடமும் மற்றும் இராணுவத் தலைமைஅதிகாரிலக்கிஅல்கமவிடமும் வாக்குமூலம் பெறப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

கடந்த பொதுத்தேர்தலின்போது இராணுவத்தளபதிலெப்.ஜெனரல்சிசில் வைத்தியரட்ணா மற்றும் இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம ஆகியோர் இராணுவச்சதி ஒன்றிற்குத் திட்டமிட்டதாகச் செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே. இச்சதியின்போது அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல்கமில்டன்வணசிங்காவையும் இராணுவத் தளபதி ஜெரி டீ சில்வாவையும் கொல்லத்திட்டம் தீட்டப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்ராணுவச்சதி குறித்து நடைபெறும் விசாரணை தொடர்பாகவே மூன்று பிரிகேடியர்கள் விசாரணை செய்யப்படவுள்ளனர்.

# கல்விதான் எமது அடிப்படைச் சொத்து

## தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் ரவி

கல்விதான் எமது அடிப்படைச் சொத்து. கடந்தகாலங்களில் எமது மாணவர்களின் கல்வி தரப்படுத்தல் நிலையினாலேயேதான்இங்குஆயுதப் போராட்டம் உருவாகியது. எமது சொந்தக் காலில் நிற்பதற்கு நாம் முனையவேண்டும். கல்வியின் அடித்தளம்நல்லமுறையில்இடப்படவேண்டும். நாம் தனித்துவ மானவர்கள். இதுவரை எமது சிறார்களுக்குப் போதித்த கல்வி வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கல்வி. இந்தக் கல்வியால் நாம் முன்னேற முடியாது. எமது மண்ணிற்கு ஏற்ற பாடத்திட்டத்தை உருவாக்கும் நோக்குடனே முன்பள்ளிக் கல்விக் கலைத்திட்டத்தினை ஏற்படுத்தியுள்ளோம்.

இவ்வாறு அண்மையில் அராலி வள்ளியம்மை வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற வலிமேற்கு சங்கானை முன்பள்ளி களின் ஆசிரியர் சங்க மாதாந்தக் கூட்டத்தின்போது கலந்து கொண்ட தமிழீழப் புனர்வாழ்வுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. சி. ரவி அவர்கள் உரையாற்றுகையில்தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், இக்கலைத்திட்டம் ஒன்றிணைக்கப்பட்ட முறையிற் கற்பிக்கப்பட்டு நிறைவாக்கப்பட வேண்டும்என்பதே எமது அவாவும் எதிர்பார்ப்புமாகும். இக்கல்வித் திட்டத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சேவை மனப்பான்மையுடன் செயற்பட முன்வர வேண்டும். வெறும் வகுப்பறைக் கற்பித்தல் முறையைப் பின்பற்றலாகாது. இத்திட்டத்தின்மூலம் சிறந்த பெறுபேற்றை நாம் பெறுவதற்கு, ஆசிரியர்கள் சிறந்த பயிற்சியும், திறமையும், விருப்பும் உடையவர்களாக இருத்தல் அவசியமாகும். எமது மண்ணில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் இலட்சியக் குழந்தைகளாக, ஆளுமை பெற்றவர்களாக, சுதேச உணர்வுடைய, ஐம்புலன்களையும் சிறப்பாகப் பயன்படுத்தக்கூடிய, தன்னம்பிக்கையுடைய குழந்தைகளாக மலர வேண்டும் என்ற நோக்குடன் அடிப்படைக் கல்விக் கொள்கையை ஏற்படுத்தி எமது கல்வியில் மாற்றமொன்றை காண வேண்டும் என்ற கட்டாயத் தேவைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இதற்குத் தங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பும் அவசியமான தொன்றாகும் என தெரிவித்துக்கொண்டார்.

மேலும் வலிமேற்குப் பிரதேச உதவித் திட்டமிடல் அதிகாரி திருமதி. கா. கைலாயநாதன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டுநிலையமாகாண பிரதிநிதி திரு. க. சிவா, தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் திரு. க. இலங்கேஸ்வரன், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய யாழ் மாவட்ட இணைப்பாளர் செல்வி. கா. திலகராணி, ஆகியோர் உரையாற்றினார்கள்.

# மீண்டும் பொருண்மியத் தடை

பொருளாதாரத் தடையையும், மீன்பிடித் தடையையும் தாம் மீண்டும் அமுலாக்கியுள்ளதாகச் சிறீலங்கா அறிவித்துள்ளது.

தமது அரசியல்நலன்களுக்குதமிழீழ மக்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தும் சிறீலங்காவின் இராணுவ, பௌத்த, சிங்கள பேரினவாத மேலாண்மைப்போக்கே, இத் தடைகளைச் சிறீலங்கா அரசு மீண்டும் அமுல் நடத்தியுள்ளதன் மூலம் உறுதியாகியுள்ளது.நினைத்தவுடன் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து விளையாடும் சிறீலங்கா, தனது ஆட்சியை ஜனநாயகம் எனக் கூறியும்வருவதுவேடிக்கையானது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்கள் மீதான போர்

போரை முடிவுக்குக் கொண்டுவந்து இலங்கைத்தீவில் அமைதியை ஏற்படுத்துவேன் என சிறீலங்கா மக்களுக்குத் தேர்தல் வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த சந்திரிகா, "தமிழ்மக்கள் மீதான யுத்தத்தை" மீண்டும் முடுக்கிவிட்டதினால் தனது தேர்தல் வாக்குறுதியை காற்றிலே பறக்கவிட்டு இலங்கைத்தீவின் அமைதியைச்சீர்குலைத்துள்ளார்.

சர்வதேச முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காக, சிறீலங்கா ஒரு பயங்கரவாத நாடு அல்ல எனக்காட்டுவதற்காகவும், சிறீலங்காவுக்கு உதவிவழங்கும் நாடுகளுக்கு தனது அரசாங்கம் சமத்துவத்தன்மையான (Equalitarian) தாராண்மைவாத (Liberal) போக்கைக் கொண்டுள்ளது என மாயாஜாலம் செய்வதற்காகவும் அரங்கேற்றிய நாடகம்தான் "விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தை" எனும் நான்கு அங்க நாடகம்.

ஆனால் இக்காலகட்டத்தில், மக்களின் அன்றாட வாழ்வுக்கு சிறீலங்காவின் ஆயுத அச்சுறுத்தலால் ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் பேசப்பட்ட விடயங்கள் அலட்சியப்படுத்தப்பட்டதுடன், அவை இராணுவ வாதிகளின் பின்னணியிலேயே விடுதலைப்புலிகளினால் பார்க்கப்பட்டது. மேலும் இணக்கம் காணப்பட்ட விடயங்களைக்கூடப் பிரச்சாரப்படுத்துவதில்தான் அதிக அக்கறை காட்டப்பட்டதே தவிர, நடைமுறையில் அவற்றை அமுலாக்குவதை இராணுவத்தலையீடுகள் தடுத்தன. போரைத் தொடர்ந்து சர்வதேசஆயுத தரகுகளாலும் மக்களிடம் அபகரிக்கும் கப்பப்பணத்தாலும் வாழநினைக்கும் இராணுவவாதிகளின் நலன்களு க்கு முக்கியத்துவம் கொடுத்த சிறீலங்கா அரசு, தமிழ் மக்களின் அடிப் படை உரிமைகளான தொழில்செய்யும் உரிமை, வாழும் உரிமை, நடமாடும் உரிமை, தமிழ் மக்களின் தேசியபாதுகாப்பு (ஆயுதபாணி களாக உள்ள குழுக்களிடையே நடமாடுவதற்காக கிழக்கில் ஆயுதங்களுடன் போராளிகள் நடமாட இணக்கம் கேட்டதை மறுத்தமை) என்பவற்றை நிராகரித்தது. மோதல்தவிர்ப்புக்காலத்தில் இராணுவம், சமாதானத்தைச் சீர்குலைக்கக்கூடிய முறையில் தமது முகாம்களைப் பலப்படுத்தியதோடு, நீண்டகாலப் போரொன்றுக்கு தயாராவதற்கானகாலநீடிப்பாகவேமோதல்தவிர்ப்பைபயன்படுத்தியது.

இவைகள் உணரப்பட்ட நிலையிலும் சமாதானத்தின் மேலுள்ள விருப்பை வெளிக்காட்டிப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்த விடுதலைப்புலிகள், மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைக்கூடத் தீர்க்காத சந்திரிகாவால் நீதியான தீர்வொன்றைக்காண முடியுமா? எனஇயல்பாகவேஎழுந்தசந்தேகத்தின்அடிப்படையிலேயேமக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான காலக்கெடுவை விதித்தனர். பொருளாதாரத்தடையை நீக்குவதாகவும், மீன்பிடித்தலை அனுமதிப்பதாகவும், சந்திரிகா கடிதம் எழுதியபோதிலும் பொருளாதாரத்தடைநீக்கம் அமுலாக்கப்படவில்லை என்பதுடன் மீன்பிடித்தலுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் மீன்பிடித்தலை நடைமுறையில் முடமாக்கும் தன்மையினையே கொண்டிருந்தது. விடுதலைப்புலிகள் மோதல் தவிர்ப்பைக் கைவிடுவதற்கு 72 மணிநேர அவகாசமே போதியதாக இருந்த போதிலும் முதலில் பங்குனி 28 வரையும் பின்னர் சித்திரை 19வரையும் மிக நீண்ட அவகாசம் கொடுத்தனர். அவற்றை சிறீலங்கா அலட்சியம் செய்ததும் அல்லாமல் தமிழ் மக்களுடைய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய சோதனைகள், சித்திரவதைகள் என்பவற்றைத் தொடங்கியமையால், விடுதலைப்புலிகள் மீண்டும் போராடியே தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர்.

சிறீலங்கா ஆயுதப்படைகளின் மேலேயே விடுதலைப்புலிகள் தாக்குதல்களைத் தொடுக்க, சிறீலங்கா அரசாங்கமோ சாதாரண தமிழ் மக்கள் மீதே போரை ஆரம்பித்துள்ளது. வரலாற்றின் விபத்தால் தமிழ் மக்களுக்கும் அரசு தாம் எனக்கூறிக்கொள்ளும் சிறீலங்கா, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்பையும் வழங்க விரும்பாத நிலையில் இருப்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறது. இதனால் அரசியல் அறிஞர் அந்தனி எச். பேர்ச்சின் கூற்றுப்படி "பிரதேசத்தின் சட்டரீதியான அரசியல், பொருண்மிய அக்கறைகளை ஈடுசெய்யாது விடப்படும் பொழுது அப்பகுதி இயல்பாகவே அத்தகைய அரசியல் ஒழுங்கின்மீது வெறுப்படைந்து தனிநாடாக மாறும். அல்லாமல் அப்பகுதி மக்களின் அரசியல் பேச்சுவார்த்தைக்கான அழைப்புகளையும் அரசு மறுக்கும் பொழுது இயல்பாகவே அப்பகுதி தன்னாட்சி உள்ளநாடாகிறது".

இதுதான்இன்றையதமிழீழத்தின்நிலை.

## நல்லமுடிவெடுத்து நடைமுறைப்படுத்த முன்வந்தால் சமாதானத்திற்கு .....

சிறீலங்கா அரசாங்கம் முதலில் அகற்றிவிட வேண்டும். இத் தடைநீக்கத்தை நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டும். இதனைப் புலிகளுக்கு வழங்கும் சலுகைகளாக நோக்காமல், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகக் கருத வேண்டும்.எமது கோரிக்கைகள் குறித்து சந்திரிகா அரசு நல்ல முடிவுகளை எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்த முன்வந்தால், நாம் போரை நிறுத்தி சமாதான வழிமுறைக்குத் திரும்பஆயத்தமாகஇருக்கிறோம்"

இவ்வாறு, தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் பி.பி.சி சர்வதேச செய்தி முகவர் நிறுவனத்திற்கு 27-04-95 இல் அளித்த விசேட செவ்வியில் விளக்கிக் கூறினார்.

**இச்செவ்வியின் முழுவிபரமும் பின் வருமாறு:-**

◆ **கேள்வி:-** தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட, வடக்கிலும்கிழக்கிலும்அமைதிசமாதானம்ஏற்படும்என்றஒரு நம்பிக்கை நாட்டில் தளிர்த்திருந்த நிலையில், மோதல் தவிர்ப்பு உடன் படிக்கையிலிருந்தும் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்தும்ஏன்விலகிக்கொண்டீர்கள்?

◆ **பதில்:-** தமிழர்பிரச்சினைக்குத்தீர்வுகாணப்பட,தமிழர் தாயகத்தில் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை எமது மக்களிடையே இழந்து போன சூழ்நிலையில்தான், நாம் இந்த வேதனைக்குரிய முடிவை எடுத்தோம். வடக்கு-கிழக்கில்



சமாதானம் ஏற்படும், இயல்புநிலை தோன்றும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் ஆரம்பத்தில் எமக்கு இருந்தது. இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான், நாம் சமாதானப் பேச்சுவார்த்தையில் இறங்கினோம். இந்த நம்பிக்கையில்தான், ஆயுதப்போராட்டத்தை இடைநிறுத்தி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டோம். சமாதானப்பேச்சுக்கள் கட்டம் கட்டமாக நகர்த்தப்பட வேண்டும் என்றும், ஆரம்பக்கட்டப் பேச்சுக்கள் தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் அவசரமான அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாக அமைய வேண்டுமெனவும் நாம் வலியுறுத்தினோம். அரசும் அதற்கு இணங்கியது. பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை, மீன்பிடித் தடை என்ற ரீதியில் முந்திய சிங்கள அரசு விதித்த தடைகளால் நீண்ட காலமாக எமது மக்கள் பெரும்துன்பத்திற்குஆளாகிவந்தனர்.இந்தத் தடைகளை நீக்கி, எமது மக்களின் துன்பத்தைத் துடைத்துவிடுமாறு நாம் கேட்டுக்கொண்டோமேதவிர, வேறுஎதையும்கேட்கவில்லை. தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவோமென்ற கோசத்துடன் ஆட்சிக்கு வந்த சந்திரிகா அரசு, முன்னைய ஆட்சியாளர்கள் விதித்துவிட்ட இந்த அநீதிகளைத் தாமாகவே நீக்கி விட்டிருக்கலாம். ஆனால் சந்திரிகா அரசு அப்படிச் செய்யவில்லை. நாம் முன்வைத்த கோரிக்கைகள், தமிழ் மக்களின் பிரச்சினைகள் என்று பார்க்காமல், அவற்றை விடுதலைப்புலிகளின்நிபந்தனையாகக்கருதியது.

◆ அதுமட்டுமல்ல, இந்தப் பிரச்சினைகளை இராணுவக் கண்ணோட்டத்துடன் அணுகியது. இந்தப்பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தால் பாரதூரமான இராணுவ விளைவுகள் ஏற்படலாம் எனவும், தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் தோன்றலாம்என்றும்எமக்குக்கூறியது.இந்தப்பதில்கள் எமக்குஏமாற்றத்தைத்தந்தன.அரசின்போக்கில்எமக்கு அவநம்பிக்கைதோன்றியது.இந்தச்சூழ்நிலையில்தான் நாம் அரசாங்கத்திற்கு ஒரு காலக்கெடுவை வழங்கினோம். எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காத பேச்சுக்களைத் தொடர்வதில் அர்த்தமில்லை என்பதைச் சுட்டிக்காட்டினோம். இந்த அழுத்தத்தின் விளைவாகச் சிலதடைகளை நீக்கப்போவதாகஅரசாங்கம் உறுதி தந்தது. இந்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதற்காக நாம் காலக்கெடுவை நீடித்து, அரசாங்கத்திற்கு மூன்று வாரகால அவகாசம் கொடுத்தோம். ஆனால் அரசு சில பிரச்சினைகளைப் பின்போட்டு இழுத்தடித்ததுடன், முடிவுகளை நடைமுறைப்படுத்தவும்தயங்கியது.இந்த விடயத்தில் அரசாங்கம் நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்துகொள்ளவில்லை. பழைய சிங்கள அரசினைப் போன்று ஏமாற்று வித்தையைக் கடைப்பிடித்தது. இதனால் எமக்கும் எமது மக்களிற்கும் சந்திரிகா அரசுமீதிருந்த நம்பிக்கை இழந்துபோயிற்று. இதனால் சமாதானப்பேச்சுக்களைத்தொடர்வதில்அர்த்தமில்லை என்றமுடிவுக்குநாம்வந்தோம்.

◆ **கேள்வி:-** ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் பொருளாதாரத் தடை, மீன்பிடித் தடை ஆகியவற்றை நீக்கி மேலும்பல சலுகைகளை வழங்க முன்வந்திருந்தார். அப்படியிருந்தும் நீங்கள் ஏன் சமாதானப் பேச்சுக்களிலிருந்து விலக முடிவு செய்தீர்கள்.

◆ **பதில்:-** நான் இங்கு ஒரு விசயத்தை வலியுறுத்த விரும்புகிறேன். அதாவது வாக்குறுதிகள் வேறு, அவற்றை நடைமுறைப்படுத்துவது வேறு. ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் சில வாக்குறுதிகளைத் தந்தார் என்பது உண்மை. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. வாக்குறுதிகளைத் தருவது- பின் செயல்படுத்தாமல் இழுத்தடிப்பது, ஒப்பந்தங்களைச் செய்வது- பின் மீறுவது, இப்படியாகத்தான் காலம் காலமாகச் சிங்கள அரசுகள்தமிழ்மக்களைஏமாற்றிவந்தன.இதுவரலாறு. சந்திரிகாஅரசும்இதற்குவிதிவிலக்கானதல்ல.கொடுத்த வாக்குறுதிகளையும், எடுத்த முடிவுகளையும் ஒரு குறித்த காலகட்டத்திற்குள் நிறைவேற்றிக்



காட்டவேண்டும் என்பதற்காகவே நாம் அரசிற்குக் காலக்கெடுவை விதித்தோம். நாம் எதிர்பார்த்ததுபோல, சந்திரிகா அரசு எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்தாமல் காலத்தை இழுத்தடித்தது. எனவே காலக்கெடுவை பாரதூரமான விடயமாக அவர்கள் கருதவில்லை. அதைத் தட்டிக் கழிப்பதிலேயே கண்ணும் கருத்தமாக இருந்தனர். அடுத்ததாக, புலிகளுக்குச் சலுகைகள் வழங்கியதாக சந்திரிகாஅரசுகூறுவதுதவறு.நாங்கள்எமதுமக்களின் பிரச்சினைகளை முன்வைத்தோமே தவிர, சலுகைகள் எதையும் கேட்கவில்லை. மக்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளை வழங்குவதைச் சலுகைகள் என்று கூற முடியாது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### நல்லமுடிவெடுத்து நடைமுறைப்படுத்த முன்வந்தால்

# சமாதானத்திற்கு .....

**கேள்வி:–** பொருளாதாரத் தடைநீக்கம் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதில், நிர்வாகச்சிக்கல்கள் காரணமாகத் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். ஏன் நீங்கள் மேலும் கொஞ்சம் பொறுமையாக இருந்திருக்கலாம் அல்லவா?

◆ **பதில்:–** நாம் பொறுக்கும் அளவிற்குப் பொறுமையின் விளிம்பிற்கே வந்துவிட்டோம் என்றே சொல்லலாம்.தமிழ்மக்களின்அன்றாடப் பிரச்சினைகள் பற்றிய விவகாரம் ஆறு மாதங்களிற்கு மேலாக இழுபட்டு வந்திருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் குறித்து நான்கு சுற்றுப் பேச்சுக்களும், நாற்பதுக்கு மேற்பட்ட கடிதங்களும் பரிமாறப்பட்டன.அது போதாது என்று இருவாரகாலக்கெடுவும்அதன்பின்னர் மூன்று வார காலக்கெடுவுமாக கால அவகாசம் கொடுத்தோம். இவ்வளவு காலமும் போதாதா? போதாதென்றா சொல்கிறீர்கள்! அரசாங்கத்திற்கு உண்மையில் மனமிருந்தால் 24 மணிநேரத்தில் தடைகளை நீக்குவதுடன், அதனைச் செயற்படுத்தியும் இருக்கலாம். அரசாங்கம் மனம்வைத்துச் செயற்படுத்திருந்தால், எந்தவித சிக்கல்களோ தாமதங்களோ ஏற்பட்டிருக்காது என்றுதான்எண்ணுகின்றேன்.

◆ **கேள்வி:–** அரசாங்கம் இந்தத் தடைகளைமீண்டும்திணித்திருப்பது பற்றிஉங்கள்உணர்வலைகள்என்ன?

◆ **பதில்:–** இந்த நடவடிக்கை, ஒன்றைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது. அதாவது தமிழர் பிரச்சினை சம்பந்தப்பட்ட மட்டில், சந்திரிகா அரசிற்கும் பழைய ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கும் மத்தியில் அடிப்படை வேறுபாடு இல்லை. முந்தைய அரசு செய்த அநீதியையே இந்த அரசும்தொடர்கிறது.தமிழர்மீது பொருளாதார, இராணுவ அழுத்தங்களைத் திணித்து, அதில் அரசியல் இலாபங்கள் தேடுவதில் இரு அரசுகளுக்கும் மத்தியில் கொள்கை வேறுபாடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.தமிழ்மக்களின்நலனில் இந்த அரசிற்கு உண்மையான அக்கறையிருந்திருந்தால் இந்தத் தடைகளை மீண்டும் திணித்திராது. தமிழரின் அவலமான பிரச்சினைகளை அரசியல் நலன்களுக்குப் பயன்படுத்துவதிலும் இராணுவ நலன்களைப் பேணுவதிலுமே அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்பதையே, இந்த நடவடிக்கை எடுத்துக்காட்டுகிறது.

◆ **கேள்வி:–** மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையின் கீழ் உடன்பாட்டிலிருந்து விலக,72மணிநேரகால அவகாசம் கொடுத்திருக்க வேண்டும். அந்தக் கால அவகாசத்தை அரசிற்கு ஏன்நீங்கள்கொடுக்கவில்லை.

◆ **பதில்:–**நாம்அரசாங்கத்திற்குப் போதிய கால அவகாசம் கொடுத்தோம். காலக்கெடுவை விதித்து, பின்னர் அதை நீடித்து, கிட்டத்தட்ட ஐந்து வாரங்கள் வரை கால அவகாசங்களை வழங்கியிருக்கிறோம். எமது காலக்கெடுவின் அர்த்தத்தையும் நோக்கத்தையும் புரியாமல், காலக்கெடுவை அலட்சியம் செய்துவிட்டு இப்போது எம் மீது வீண் பழியைச் சுமத்தமுனைகிறதுஅரசு.

◆ **கேள்வி:–** மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையிலிருந்தும், சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்தும் நீங்கள் விலகிக் கொண்டிருப்பதை அனைத்துலக நாடுகள் பல கண்டித்துள்ளன. புலிகள் சமாதானத்தை விரும்பவில்லை என்ற ஒரு கருத்து உலக அரங்கில் எழுந்துள்ளது. இது பற்றி என்ன சொல்கிறீர்கள்.

**பதில்:–** சர்வதேச உலகம், தமிழர் பிரச்சினையில் மிகுந்த அக்கறை காட்டிவருகிறது என்பதை நாம் அறிவோம். சமாதான வழிமூலம் அரசியல் தீர்வு ஏற்படவேண்டும் என்பதிலும், அனைத்துலக நாடுகள் அக்கறைகாட்டி வந்தன எனபதையும் நாம் அறிவோம். ஆயினும் சமாதானப் பேச்சுக்களில் எழுந்த பிரச்சினைகள், பின்னடைவுகள்.இழுபறிகள்பற்றியோ, சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்த காரணங்கள் பற்றியோ. உண்மையான தகவல்கள் வெளியுலகத்திற்குச் சென்றடையவில்லை என்றே நினைக்கிறேன்.எமது நிலைப்பாட்டின் நியாயத்தைத் தெரிந்த கொள்ளாது அரசின் ஒரு தலைப்பட்சமான தகவல்களை மட்டும் நம்பி, சில வெளிநாட்டு அரசுகள் விடுதலைப்புலிகளைக் கண்டித்துள்ளன. நிலைமையை ஆழமாகப் பார்க்காமல் அவசரப்பட்டு விடுக்கப்பட்ட இக்கண்டனங்கள் எமக்கு ஆழ்ந்த கவலையைத்தருகின்றது.

**கேள்வி:–** புலிகளின் ஒத்துழைப்புக் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும்சரிசமாதானம்கொண்டுவரப்படுமென ஜனாதிபதி சந்திரிகா அவர்கள்தெளிவாகக்கூறியிருக்கிறார். இதற்குஉங்கள்பதில்என்ன?

**பதில்:–** புலிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் சமாதானத்தைக் கொண்டுவருவது நடைமுறைச் சாத்தியமாயின், அதனை முயற்சி செய்துபார்க்கட்டுமே.

**கேள்வி:–** 'சமாதானக் கதவுகளைப் புலிகள்முற்றாகமூடிவிடவில்லை'என உங்கள் சர்வதேசச் செயலகம் வெளியிட்ட அறிக்கையொன்று குறிப்பிட்டுள்ளது.சமாதானமுயற்சிகள் மீண்டும்தொடங்குவதற்குஅரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் எனநீங்கள்எதிர்பார்க்கின்றீர்கள்.

**பதில்:–** எமது சமாதானக் கதவுகள் இன்னும் திறந்தே இருக்கின்றன. அரசின் அணுகுமுறையில் நாம் அதிருப்தியும், ஏமாற்றமும் கொண்டிருக்கிறோம் என்பது உண்மையே. ஆனால் சமாதானத்தில் நாம் நம்பிக்கையிழக்கவில்லை. சமாதானவழிமுறைமூலமாகதமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியும் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு. சமாதானத்திற்கான முழு முயற்சிகளையும் அரசாங்கமே எடுக்கவேண்டும். எமது மக்கள் மீது மீண்டும் திணிக்கப்பட்டுள்ள பொருளாதார, மீன்பிடித் தடைகளை அரசாங்கம் முதலில் அகற்றிவிட வேண்டும். இந்தத் தடை நீக்கத்தை நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டும். இதனைப் புலிகளுக்கு வழங்கும் சலுகைகளாக நோக்காமல், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகக் கருத வேண்டும்.மற்றும் எமது கோரிக்கைகள் குறித்தும் சந்திரிகா அரசு நல்ல முடிவுகளை எடுத்து, அவற்றை நடைமுறைப்படுத்த முன்வந்தால், நாம் போரை நிறுத்தி சமாதான வழிமுறைக்குத் திரும்பஆயத்தமாகஇருக்கிறோம்.

# ஆட்சியாளர்கள் மாறினாலும்...

பலமானதும் நிலையானதுமான இடமும் ஒரு காரணமாகும். இதனால் அரசு சமாதானத்தீர்வு என அறிவிப்புச் செய்தபோதும் அதில் முன்னேற முடியாதுள்ளது. ஆனால், இதற்கு தனியாக இராணுவத்தின் வலுவான நிலைமட்டும் காரணமல்ல. புதிதாக ஆட்சியில் அமர்ந்தவர்களதும் முன்னைய ஆட்சியினர் போன்று தீர்வைப் பௌத்த–சிங்கள பேரினவாதத்தை அடியொற்றிச் சிந்திப்பதும் காரணமாகும்.

பொ.ஐ.முன்னணி ஆட்சிபீடம் ஏறும் முன்னரே சிறீலங்கா அரசியலில் இராணுவம் நிலையானதொரு இடத்தைப் பிடித்துக்கொண்டிருந்தமை சந்திரிகா அரசைப் பொறுத்து அறியப்படாத–விளங்கப்படாத விடயம் ஒன்றாக இருந்திருக்க நியாயமில்லை. அதாவது இராணுவத்தரப்பை இனப்பிரச்சனை விடயத்தில் புறக்கணிக்க முடியாது என்பதைச் சந்திரிகா அறிந்தே இருப்பார்.

ஆனால் பிரதமர் பதவிக்கு வந்த பின்னர்கூட, அவர் இராணுவத்தைக் கடுமையாக விமர்சித்தமைக்கு இராணுவ உயர் மட்டத்தில் இருந்த சிலரின் மீதான வெறுப்பே காரணமாகும். அவர்கள் நீக்கப்படும்–வெளியேறும் பட்சத்தில் இராணுவத் தரப்பினரின் நிலைப்பாட்டைச் சந்திரிகா ஏற்றுக் கொள்ளும் நிலையிலேயே இருந்தார். இதனைச் "சமாதானத் தீர்வு தோல்வியடையும் பட்சத்தில், இராணுவத் தீர்வே காணப்படும்" என்ற அவரின் பேச்சே வெளிப்படுத்தியிருந்தது.

அதேசமயம், சனாதிபதிப் பதவிக்கு இராணுவம் தனது அதிகார வரம்பிற்குள் முழுமையாகக் கட்டுப்பட்டு நிற்கும் என்ற எண்ணம் இருந்திருக்க வேண்டும். ஆகையினால், இராணுவத்தைத் தனது தேவைக்கு ஏற்ற வகையில் பயன்படுத்த முடியும் என அவர் திட்டமிட்டிருக்கக்கூடும்.

அத்தோடு சந்திரிகா கூறிக்கொண்டது போல் இனப்பிரச்சனைக்கான தீர்வைப் பொறுத்து ஐ.தே.க கொண்டிருந்த கொள்கையிலிருந்து பெரிய அளவில் மாறுபாடான கொள்கைத் திட்டம் எதையும் கொண்டிருக்கவில்லை. இனப்பிரச்சனைக்கான தீர்வாக ஐ.தே.க இராணுவத்தீர்வின் அடிப்படையில், மாகாண சபைத்திட்ட மூலமே தீர்த்து வைக்க விரும்பியது. அதேவேளை பொ.ஐ.முன்னணி பேச்சுவார்த்தை மூலம் மாகாணசபைத் திட்டம் ஒன்றையே முன்வைக்க விரும்பியது போன்றே தெரிகின்றது.

அதாவது, இனப்பிரச்சனையை தீர்க்க இருதரப்பினரும் வெவ்வேறு வழி எனக் கூறிக்கொண்டாலும் கிட்டத்தட்ட ஒரே அளவிலான திட்டத்துடனேயே இருந்துள்ளனர். அத்தோடு, பொ.ஐ.முன்னணியும் சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடைந்தால், இராணுவத் தீர்வு என்பதை நிராகரிக்காமை இராணுவத் தீர்வில் அதுவும் நம்பிக்கை கொண்டிருந்ததையே வெளிப்படுத்தியது.

இந்தவகையில், இனப்பிரச்சனைக்கான தீர்வென்பது, பௌத்த–சிங்கள பேரினவாதத்தின் வரம்பிற்குட்பட்டதாகவே பொ.ஐ.முன்னணியிலும் சிந்திக்கப்பட்டது. ஆகையினால் தீர்வானது இராணுவ அழுத்தத்துடன் கூடியதாக இருக்கக்கூடிய ஒன்றாகவே அதன் சிந்தனையிலும் இருந்தது.

இதைத் தொடர்ந்தே, இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் தமக்கு விரோதமானவர்களை வெளியேற்றும் முயற்சியில் மட்டும் குறியாக இருந்த சனாதிபதி சந்திரிகா இராணுவத்தை மறுசீரமைக்கவும், புனரமைக்கவும் முற்பட்டார். இதற்காக இவர் வரவு செலவுத்திட்டத்தில் செய்த நிதி ஒதுக்கீடானது இவரின் சமாதானம் குறித்த அறிவிப்புக்களையே விமர்சனத்துக்குரியதாக ஆக்கியிருந்தன.

இந்த வகையில் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு இனப்பிரச்சனைக்குச் சமாதானப் பேச்சு வார்த்தைகளை தொடங்கியிருப்பினும் இராணுவத்தில் செலுத்தும் நாட்டம் உயர்வாகவே இருந்தது. சமாதானப் பேச்சுக்கள் இராணுவ ரீதியான எதுவித விட்டுக்கொடுப்பும் இன்றி நடைபெற வேண்டும் என்றே கருதுவதாக உள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது பொ.ஐ.முன்னணி புலிகளுக்குத் தாம் ஒரு சந்தர்ப்பம் வழங்கியுள்ளதாகவே கருதுவதாகத் தெரிகின்றது: ஐ.தே.க வழங்காத இச்சந்தர்ப்பத்தை புலிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது போல் உள்ளது. அதாவது தமிழ் மக்கள் அரசு வழங்கும் சிறிய சலுகைகளைப் பெற்றுக் கொண்டு சமாதானத் தீர்வை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாக பொ.ஐ.முன்னணி கருதுவதாகத் தெரிகிறது.

இதன் பிரகாரம் பேச்சிற்கான சந்தர்ப்பம் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு வழங்கப்பட்டு விட்டது. பயன்படுத்தாது விட்டால் இராணுவத்தீர்வு மேற்கொள்ளப்படும் என்பதே அரசின் நிலைப்பாடாகத் தெரிகிறது. இதற்கு ஏற்றாற் போன்று தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரச்சார சாதனங்களையும் அரசு திட்டமிட்டுப் பயன்படுத்த முனைந்தது எனலாம்.இப்பிரசார சாதனங்களின் மூலம் அரசதரப்பிற்கு வழங்கப்படும் பாதுகாப்பானது அரசின் தாக்குதல் தொடுப்பை நியாயப்படுத்தும் என அரசதரப்பு எண்ணுகிறது. இது "தனது தலைமையில் ஒரு இராணுவ வெற்றியை ஈட்டவேண்டும்" என்ற பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையின் விருப்பிற்குப் பேருதவி புரியக் கூடியதாகும்.

இந்த வகையில் பொ.ஐ.முன்னணி அரசானது, ஐ.தே.கவில் இருந்துபெரும் மாற்றம் எதையும் செய்துவிட விளைகின்றது என்று கூறிவிட முடியாது. ஏனெனில் இவர்களின் கொள்கையும், சிந்தனையும் மட்டுமல்ல, அவர்களின் வழியும் மாறவில்லை. ஆனால் சில யுக்திகள் மட்டுமே மாறியுள்ளன. இந்த வகையில், ஐ.தே.கவில் இருந்து பொ.ஐ.முன்னணியின் வேறுபாடு கட்சியின் கொடியும், ஆட்சியிலிருக்கும் உருவங்களும் மட்டுமே எனலாம்.

# அரசின் சிக்கல்கள் வெளிப்படுத்தப்படவில்லை

அரசியற்சிக்கல்களைஅரசின் கடிதங்கள் வெளிப்படுத்தவில்லை

சண்டேரைம்சின்யூட்பெர்ணான்டோ

அரசியற் சிக்கல் தன்மையையும், விடுதலைப் புலிகளின் இராணுவத் தந்திரோபாயங்களையும் விளங்கிக் கொண்ட நிலையில் இருந்து எழுதப்பட்ட கடிதங்களாக அரசதரப்பில் இருந்து இதுவரை அனுப்பப்பட்ட கடிதங்கள் காணப்படவில்லை என ஒரு விமர்சகர்குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு சண்டே ரைம்ஸ் இதழில் யூட் பெர்ணான்டோ கூறியுள்ளார். அவர்மேலும் குறிப்பிடுகையில், பூநகரிமுகாமிற்காக பேரம்பேசுவதை விட்டுவிட்டு அம்முகாமை மீளப்பெறுவது பற்றிய சிந்தனைக்கு முதலிடம்கொடுத்திருக்கலாம். விடுதலைப் புலிகளைவிட அரசிற்கு மாற்றுவழிகள் குறைவாக இருக்கும் நிலையை உணர்ந்து கொண்டு அரசு செயற்படவேண்டும் எனவும்குறிப்பிட்டுள்ளார்.


அத்துடன் தென்பகுதியைவிட விடுதலைப்புலிகளின்கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சட்டமும், ஒழுங்கும், நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது எனவும், போதைப்பொருள் பாவனை போன்ற தீய பழக்கங்கள் இப்பகுதியில் முற்றாக இல்லையெனவும் அவர் மேலும்குறிப்பிட்டுள்ளார்.

www.tamilarangam.net




# மேலாண்மையிலிருந்து விடுவித்தல் என்பது அரசியல் யதார்த்தமாக மாறி வருகிறது

– விடுதலைப் புலிகளின் மேதினச் செய்தி



மேதினம் என்பது உலகெங்கும் வாழும்உழைக்கும்மக்களின்தினம். வாழ்வின் மேம்பாட்டிற்கும், சுதந்திரத்திற்கும், ஜனநாயகத்திற்குமான மக்களின் போராட்டம் உணர்ச்சியுடன் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. உழைக்கும் மக்களின் போராட்டமானது மக்களின் மனதில் உழைக்கும் மக்களின் உரிமைகள் பற்றியஉணர்வைஆழமாகப்பதித்து வருகின்றது. அடக்குமுறையின் அபாயத்தை உணரவும் அதற்கு எதிராகப்போராடவும்அறிவு ஊட்டும் தீப்பொறியாக சிக்காகோவில் மூண்ட தீப்பொறி உலகெங்கும் பரந்து விளங்குகின்றது.



உழைக்கும் மக்களின் போராட்டமானது ஜனத்தொகையில் சிறிய அளவினராக உள்ள தேசியங்கள் ஒடுக்கு முறைக்கெதிராக உலகெங்கும் நடாத்தி வரும் போராட்டங்களுக்கு வலுவூட்டி வருகிறது. மக்களின் உரிமையான, தங்களின் அரசியல் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமையினைப் பயன்படுத்தி மக்கள், மேலாண்மைகளிலிருந்து தம்மை விடுவித்தல் என்பது அரசியல் யதார்த்தமாக மாறிவருகிறது. இந்தப்போக்கைத் தடுத்து நிறுத்த முடியாது. இது உலகின் புவியியல் நாடகபாத்திரங்களை மாற்றுவது போல்மாற்றிவருகின்றது.சர்வதேசச் சட்டங்களிலும் உலக விவகாரங்களின் வழமைகளிலும் நடைபெறக்கூடிய மாற்றங்களுக்குக் கட்டியம் கூறிநிற்கிறது.பனிப்போரின் முடிவில் அடக்குமுறைத் தொகுதிகளிலிருந்தும் சமத்துவமற்ற பொருளாதாரச் சீர்கேடுகளிலிருந்தும் விடுபடுவதற்கு மூன்றாம் உலக நாடுகள் நடாத்தும் போராட்டங்கள் கூர்மையடைந்து வருகின்றன.உழைக்கும் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யவென ஏற்படுத்தும் இடங்களும்மாற்றாரின் ஆட்சியின் கீழ்உள்ள மக்கள் விடுதலை அடைவதற்கு செய்யும் முயற்சிகளும் உலக அரங்கில் புதியதோர் பரிணாமமொன்றைத்தோற்றுவித்துள்ளது. அமைதி என்பது, இவ்வுலகில் சமத்துவமின்மையும் ஒடுக்குமுறையும் அகற்றப்பட்டு விடுதலை நிலை நாட்டப்பட்டாலே தோன்றும் வாழ்வின் மேம்பாட்டிற்காக உழைக்கும் உழைப்பாளர் மக்களின் போராட்டங்களுக்கு வாழ்த்துக்கள். சுயநிர்ணய உரிமைக்காக போராடும் எல்லாமக்களுக்கும்வாழ்த்துக்கள்.

# தமிழரும் புலிகளும்

இலங்கையின்வடக்கேஉள்ளவர்கள் தமிழர்கள் மட்டும்தானா? அல்லது தமிழ்மக்களும் விடுதலைப் புலிகளுமா? அன்றி புலிகள் மட்டும் தானா? இவ்வாறான பல கேள்விகளை சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகள், அறிவிப்புகள் என்பன பலமாகவே கேட்க வைக்கின்றன. ஏனெனில் சிறிலங்கா அரசாங்கத்தின் அறிவிப்புகள் பெரும்பாலான சமயங் களில் வடக்கில் தமிழர்களும், விடுதலைப் புலிகள்இயக்கமும்உள்ளது என்பது போல் உள்ளது. ஆனால் நடவடிக்கைகளோ, வடக்கில் விடுதலைப் புலிகள் மட்டுமே உள்ளனர் வேறு எவரும் இல்லை என்பது போல் உள்ளது. இதற்கு சிறப்பான எடுத்துக்காட்டாக சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்த பின்னர் ஜனாதிபதி சந்திரிகா எடுத்த நடவடிக்கைகளைக்குறிப்பிடலாம்.

அதாவது தமிழ் மக்கள் தன் மீது நம்பிக்கை வைத்துள்ளதாகக் கூறுவதுடன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டுக்கு எதிராக உள்ளனர் எனவும் கூறியிருக்கிறார். இதன் மூலம் புலிகள் வேறு தமிழர் வேறு என கலர் காட்ட முயல்கிறார்.ஆனால் அவரது நடவடிக்கைகளோ தமிழ் மக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்துள்ளதையோ, அவர் தமிழ் மக்கள் மீது நம்பிக்கை வைத்தள்ளதையோ காட்டுவதாக இல்லை. தமிழ் மக்களே அவர்மீது நம்பிக்கையற்ற நிலையில் இருப்பதை அவர் நோக்குவதாகத் தெரிகிறது. ஏனெனில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளையே அவர் மேற்கொண்டு வருகிறார். இல்லாவிடின் வடபகுதி மீதான பொருளாதாரத் தடையும், மீன்பிடித்தடையும் அரசாங்கம் மீண்டும் பிரகடனப்படுத்தியிருக்க வேண்டிய தேவை ஏற்படுத்தி இருக்காது. அதாவது முற்றிலும் போர்ச்சூழ்நிலைக்கு ஏற்றவிதத்தில் அரசாங்கம் நடந்துகொண்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் புலிகள் வேறு, தமிழ்மக்கள் வேறு எனக் கூறும் அரசாங்கம் ஏன் தமிழருக்கு எதிரான தடையை மிக அவசரப்பட்டு அமுல்படுத்தியிருக்க வேண்டும். அரசாங்கம்பிரச்சாரம் செய்வது போல் தமிழ்மக்கள் வேறு, புலிகள் வேறு எனக்கருதியிருக்குமானால் ஏன் போரில் தமிழ் மக்கள் பாதிப்புக்குள்ளாகும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். இராணுவ முற்றுகைக்கு உள்ளாகி இருக்கும் மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதையான கிளாலி கடற்பரப்பின் மீது தடைவிதித்திருக்க மாட்டாது. ஆனால் இவ்வாறான முடிவுகளை தற்போதைய ஜனாதிபதி மட்டும்தான் விடுத்தார் என்பதல்ல, ஜனாதிபதிகளான ஜே. ஆர், ஆர். பிரேமதாச போன்றோரும் இவ்வாறான வழிமுறைகளைக் கைக்கொண்டார்கள். இதன் காரணமாக புலிகளுக்கு எதிரான போர் என்ற ரீதியில் தமிழ் மக்களுக்கு,இதுபுலிகளுக்கெதிரான நடத்தினார்கள். அதேசமயம் தமிழ் மக்களுக்கு,இது புலிகளுக்கெதிரான போர் அல்ல தமிழ் தேசியத்தை அழிப்பதற்காக என்பதை உணர்ந்த புலிகளின் தலைமையின் மீது போரை நடத்தினார்கள். ஆனால் தமது நடவடிக்கைகள்தவறானது என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். விடுதலைப் புலிகள் இயக்கம் ஓர் அமைப்பாக இருப்பினும், மக்களின் உணர்வுகளை அது பிரதிபலிக்கின்றது என்பதும் அவர்களுக்கு புரியும்.

இதன்காரணமாகதமிழ்மக்களையும் புலிகளையும் வேறுபடுத்திப் பார்க்க முடியா தென்பதும் தெரியும். அவ்வாறு இல்லாவிட்டால் அவர்களினால் ஒரு இராணுவ வெற்றியைஈட்டியிருக்கவேண்டும். இவர்களால் தான் முடியாவிட்டாலும் இந்திய இராணுவத்தால் ஒரு இலகுவான வெற்றியைஈட்டியிருக்க முடியும். ஆனால் முன்னையவர்கள் தோற்றுப் போயுள்ள விடயத்தில் சந்திரிகா தனது பங்கிற்கு தற்பொழுது செயற்படத் தொடங்கியுள்ளார். புலிகளுக்கெதிரான தடை என்ற ரீதியில் தமிழ்மக்கள் மீதான தடைகளை பிரகடனப்படுத்தியுள்ளர். தமிழருக்கெதிரான இப்போரை புலிகளுக்கெதிரான போர்எனக் காட்ட முயல்கிறார். சந்திரிகாவிற்கு தமிழ் மக்கள் என்பதற்கும் விடுதலைப் புலிகள் என்பதற்கும் இடையிலான குழப்பம் ஆரம்பமுதல் இருந்து கொண்டு வந்தது. இதன் காரணமாகவே தமிழ் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள்மீதானதடைகளைசற்று தளர்த்தியபோது அதை புலிகளுக்கு வழங்கிய சலுகைகள் எனக் கூறினார். அதுபோல் மோதல் தவிர்ப்பு நிலை முடிவிற்கு வந்த போது அவர் தமிழ் மக்களுக்கு எதிரான இத்தடைகளை புலிகளுக்கெதிரான தடைகள் எனக் கூறுகிறார். அதாவது சந்திரிகா தமிழ் மக்களையும் புலிகளையும் தனித் தனியாக சுட்டிக்காட்ட முயன்ற போதும் அவரால் அவற்றை இனம் காணமுடியாது என்பதே உண்மை நிலையாகும்.

இந்த வகையில் தமிழர்களும் புலிகளும் ஒருவருடனொருவர் இணைந்தவர்களாகவே, ஒருவரை ஒருவர் பிரதிபலிப்பவர்களாகவேயுள்ளனர்.இந்தநிலையில்விடுதலைப் புலிகள் உதவினாலும் சரி உதவாவிட்டாலும் சரி தமிழ் மக்களின் பிரச்சனைகளை அரசாங்கம் தீர்த்து வைக்கும் என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் கூற்று அவரின் அறியாமையையே வெளிப்படுத்துவது என்றே கூறமுடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மேற்குலகு சற்றுப் பொறுத்திருக்க வேண்டும்

இலங்கைத் தமிழ் அகதிகள் விடயத்தில் மேற்குநாடுகள் கடும் போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளன. சுவிற்சலாந்தில் தொடங்கிய இக்கடும் போக்கு இன்று கனடா வரையிலும் சென்றுவிட்டதைத் தற்பொழுது வெளியாகிக் கொண்டிருக்கும் தகவல்கள் உறுதிப்படுத்துபவையாகவுள்ளன.

இலங்கை அகதிகள் விவகாரத்தில் அனைத்துலக விதிமுறைகளுக்கும்–மனிதநேயத்திற்கும் அப்பாற்பட்டு நடவடிக்கைகளை மேற்கொண்ட முதல் நாடு இந்தியாவே ஆகும். இந்தியாவின் இந்நடவடிக்கைக்கு முற்றுமுழுதாக அரசியற் காரணிகளே பின்னணியில் இருந்தன. அத்தோடு மனிதாபிமான அணுகுமுறைஎன்பது இந்தியாவிடம் எதிர்பார்க்கக் கூடிய ஒன்றாகவும்இருக்கவில்லை.

மேற்கு நாடுகளின் முடிவுகளுக்கு முதலில்சுவிஸ்அரசேவழிகோலியது. ஆனால் சுவிஸ் அரசின் முடிவானது பொருளாதாரக் காரணியின் அடிப்படையில் ஆனது. ஆயினும் இந்திய அரசின் நடவடிக்கை அதற்குத்தூண்டுகோலாகமாறியது. ஆனால் உலகில் மனிதாபிமானமும், மனிதநேயமும் உயர்வாகப் பேசும் இந்நாடு இப்படியானதொரு முடிவிற்கு வந்தமை தான் வேதனை தருகின்றது.

இந்நிலையில்தற்பொழுது இலங்கையில் எழுந்துள்ள புதிய அரசியற் சூழ்நிலையில், சுவிற்சலாந்தைப் பின்பற்றிப் பல ஐரோப்பிய நாடுகளும், கனடாவும் இலங்கைத்தமிழ் அகதிகள் விடயத்தில் கடும் போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளதாகஊகிக்கமுடிகின்றது.

இக்கடும் போக்கானது சுற்றிவளைத்து அகதிகளைக் கைது செய்வதில்இருந்து,அரசியல்தஞ்சம் வழங்குதலைத் தவிர்த்தல், விசாரணைகளைத் தாமதம் செய்தல் வரை நாடுகளுக்கு நாடு வேறுபாடு உடையவையாக உள்ளன. ஆனால் ஒட்டுமொத்தமாக, மேற்குலகத்தில் கடும் போக்குக் காணப்படுகின்றது என்பதே யதார்த்த நிலையாகவுள்ளது.

ஆனால், இவற்றிற்கெல்லாம் மேற்குலகால் சமாதானத்தீர்வை நோக்கி இலங்கை சென்றுகொண்டிருக்கின்றது எனக் காரணம் கற்பிக்கப்படுகின்றது. அதாவது,தமிழருக்கு இலங்கையிற் பாதுகாப்புடன் வாழக்கூடிய சூழல் உருவாகி வருகின்றது என்பதே அதுவாகும்.

ஆனால், மேற்குலகு கூறும் இக்காரணம் தற்பொழுது எந்தளவிற்குப் பொருத்தப்பாடு உடையது என்பது இப்போது அம்பலத்துக்கு வந்துவிட்டது. பேச்சுவார்த்தை முறிந்ததும், மக்கள் மீதான தாக்குதல்களை சிங்கள அரசு கட்டவிழ்த்து விட்டதும் உலகறியும்.

அதேசமயம் அரசு இராணுவத்தின் மூலம் வெற்றியைப் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையில் கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்டதன் மூலம் தனது இராணுவத் தீர்விலான நம்பிக்கையை சனாதிபதி சந்திரிகா தெரிவித்திருந்த பின்னும் தமிழ் அகதிகளைஅனுப்ப முற்படுவது சரியானதொரு முடிவல்ல. சற்றுப் பொறுத்துஆராய்ந்து முடிவுகள் எடுப்பதேவிரும்பத்தக்கதாகும்.

அகதிகளை வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்புவதாக இருப்பின், அது மனித நேயத்திற்கு மாறான செயலாகவும், சிறீலங்கா அரசின் செயல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியதான செயலாகவுமே இருக்கும்.

# சொந்த இடமே வந்த இடமாம்

## மீளக் குடியமர அனுமதி மறுப்பு

அம்பாறை மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் இடங்களுக்கு திரும்ப இராணுவத்தினர்அனுமதிக்கவில்லை. இது குறித்து மேலும் தெரியவருவதாவது, கடந்த காலங்களில் அம்பாறை மாவட்டத்தின் கந்தவேலாயுதம், கஞ்சிக்குடிச்சாறு, மகுடம்பிட்டி, தோணிக்கரை, தொப்பிமடு பகுதிகளில் இருந்து தமிழ்மக்கள் வெளியேறி இருந்தனர். தற்போது இடம்பெயர்ந்த மக்கள் பல சிரமங்களைச்சந்திப்பதால்மீண்டுந்தம் சொந்த இடங்களுக்குச் செல்ல விரும்புகின்றனர். ஆனால் சிறீலங்கா இராணுவத்தினர் இவர்களை மீண்டும் அவ்விடங்களுக்குச் செல்லவிடாது தடுத்து வருகின்றனர். மேற்படி தமிழ்மக்கள் வெளியேறிய இடங்களில் சிங்களவர்களைப் படையினர் குடியேற்றியுள்ள காரணத்தினால் தமிழ் மக்களைக் குடியமர இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை.இது தொடர்பாக பலபத்த பென்டிக்குச் சமாதானப்பேச்சு வார்த்தைகள் நடைபெற்றவேளைகளில்பலவாறாக எடுத்துரைக்கப்பட்டபோதிலும், அறிவிக்கப்பட்டபோதிலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லைஎனத்தெரிவிக்கப்படுகிறது.

# மோதற்தவிர்ப்பு வேளையிலும்

# மீனவர் மேல் துப்பாக்கி பிரயோகம்

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒருபுறம் இருக்கத்தக்கதாகவே, சிறீலங்காப் பாதுகாப்புப் படைகள் மீண்டும் தமது கைவரிசைகளைப் பொதுமக்கள் மீதுகாட்டினர்.

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மேல் மண்டைதீவுச் சந்தியில் நின்ற இராணுவத்தினர் திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதனால் அச்சமுற்ற மீனவர்கள்படகுகளை விட்டு விட்டுக் கடலிற் குதித்து நீந்திக் கரையேறியுள்ளனர். இருந்தபோதிலும் இரவானதும், 'பரா' வெளிச்சத்துடன் உலங்கு வானூர்திகள் இப்பகுதிகளில் தேடுதல் நடாத்தியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மன்னார் பேசாலைப் பகுதியில் மீண்டும் தேடுதல் நடவடிக்கையில் இறங்கிய இராணுவத்தினர், வீடுவீடாகப் புகுந்து பொதுமக்களைச் சோதனையிட்டதுடன்,இருவரை விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனக் கூறி முகாமுக்குக்கொண்டுசெல்லமுயன்றபோதிலும்சிலஅதிகாரிகளின்பணிப்பால் அவர்களைவிடுதலைசெய்துள்ளனர்.

மேலும் அவ்ரோ விமானம் ஒன்று வடமராட்சிக் கிராமங்கள் மீது பறந்து, மீண்டும் நோட்டம் விடும் நடவடிக்கையையும் செய்துள்ளதாகத்தெரிகிறது.

மட்டக்களப்பில் பல இடங்களிலும் தேடுதல் நடவடிக்கையில் இறங்கிய சிறீலங்கா இராணுவ–பொலிஸ் கூட்டுப்படையினர் பொதுமக்களையும் பயணிகளையும் அச்சத்திற்குள்ளாக்கியுள்ளார்கள். இருதயபுரம் பகுதி, மாமங்கம், கூளாவடிப் பகுதி ஆகிய பகுதிகள் பொலிசாரின் தேடுதலுக்கு உள்ளாகின. மட்டுநகருக்கு அருகே உள்ள வீடொன்றில் மிதிவெடியொன்று இருந்ததாகக் கூறி, ஒரு பெண்ணை விசாரணைக்குட்படுத்தியும்உள்ளனர்.

இதற்கிடையே, மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் ஒட்டப்பட்டிருந்த போராளிகளின் அஞ்சலிச் சுவரொட்டிகளை அகற்றும் பணியிலும் படையினர் ஈடுபட்டனர்.

அத்துடன், படையினர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இராணுவ முகாம்களைப் பலப்படுத்துவதில் துரிதகதியில் ஈடுபட்டுவருகின்றனர். பொலிசார் நகரின் நுழைவாயிலில் மோதல்தவிர்ப்பு ஒப்பந்தத்தின்பின் புதிய காவலரண்களைஅமைத்துள்ளனர். கஞ்சிக்குடிச்சாறு, களுவாஞ்சிக்குடி, திருக்கோவில், நீலாவணை, அக்கரைப்பற்று, கோமாரி, காஞ்சீரன்குடா, சாகாமம், காரைதீவு, கல்முனை, கும்புறுமுனை, செட்டிப்பாளையம், கண்ணகி நகர், உன்னிச்சை, நாற்பத்தாவில், நான்காம் முச்சந்தை, கரவை இராணுவ அதிரடிப்படை முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருவதுடன் பயிற்சிகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

## 12,000 தமிழ் அகதிகளை திருப்பியனுப்புவதில் சுவிஸ் உறுதி

சுவிஸ்அரசின்அகதிகள்பணியகத்தின் அதிகாரிகள் சிறீலங்காவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர். ஸ்ரீபன்பாக், கிறிஸ்தோவ் எரில்மன் என்னும் இவ்விரு அதிகாரிகளும் சுவிசில் 24,000 தமிழ் அகதிகள் உள்ளனர் எனவும் இவர்களில் 6000 பேருக்கு அந்நாட்டுக் குடியுரிமை வழங்கப்பட்டுவிட்டதாகவும், 1990 ஆம்ஆண்டுக்குமுன்னர்வந்தமேலும் 6000 பேருக்குக் குடியுரிமை வழங்கப்படும் எனவும் மிகுதியான 12,000 பேரும் திருப்பி அனுப்பப்பட வேண்டியவர்கள் எனவும் இது குறித்து நிலைமைகளை ஆராயவே தாம் சிறீலங்காவுக்கு வந்துள்ளதாகவும்தெரிவித்துள்ளனர்.

இவர்களிடம் கடந்த மார்கழியில் நிலவிய சூழ்நிலைக்கும் இன்றைய சூழ்நிலைக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை எனவும், குறிப்பாக கிழக்கில் தேடுதல் வேட்டைகள், பிரயாணிகள் சோதனை, இராணுவ முகாம்களைப் பலப்படுத்தல்என்பனவழமைபோலவே உள்ளதென அப்பகுதிப் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

# பிரான்ஸ் மருத்துவர்கள் சேவையைத் தொடர...

சிறீலங்காவில்நிலைமைவழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகக் கூறி, பிரான்சின் எம்.எஸ்.எப் (MSF) வைத்தியர்களை வடக்கு கிழக்கில் இருந்து திருப்பியழைக்க எம்.எஸ்.எப் சர்வதேச நிறுவனம் முடிவு செய்துள்ளது. இது குறித்து ஆராயவென மட்டக்களப்புக்குச் சென்ற எம்.எஸ்.எப் அதிகாரிகள் மொணிக்டோல், பிறஸ்கோயஸ் டயஸ் ஆகிய இருவரிடமும் சேவையை நிறுத்தவேண்டாமெனவும் மோதல் தவிர்ப்பு ஏற்பட்டாலும் வழமையான நிலையில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லையெனவும் சிறீலங்காவின் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் உட்படப் பல பிரமுகர்கள்வலியுறுத்தியுள்ளனர்.

# உழுத்த மாளிகையின்..

கூறுவது இதுதான் – இனச்சிக்கலுக்கான தீர்வுத்திட்டம் தயாராகிவிட்டது – வருகின்ற பங்குனிமாதத் தொடக்கத்திலிருந்து வடக்கில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பம் – இவற்றோடு சனாதிபதி சந்திரிகா அம்மையார் ஏப்ரல் மாதமுடிவில் சிறீலங்காவிற்கு உதவி வழங்கும் உலக வைப்பகம் உட்பட – அனைத்துலக நாடுகள் பாரிசில்கூடி (Aid Club) சிறீலங்காவுக்கு வழங்கும் உதவிபற்றி முடிவெடுக்கும்போது, தானே நேரடியாகச்சென்று உரையாற்றி வெற்றியுடன் திரும்ப அம்மையார் முடிவெடுத்துவிட்டதாகத் தெரிகின்றது. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும் வித்தையிது. அமெரிக்கா சென்று திரும்பிய கதிர்காமர் அவர்கள் "அமெரிக்காவிடமிருந்து ஆசீர்வாதம்" பெற்று வந்ததாகக் கூறப்படுவதன் பொருளும்இதுவே.

### மோதல்தவிர்ப்பின் முறுகல்நிலை

எனவே இப்படியான சாதகமான அனைத்துலகச் சூழ்நிலையிருக்கும்போது,மக்களிடம்வெள்ளைத் தாளிற் பெற்ற கையொப்பம் போன்ற மாபெரும் ஆணை இருக்கும் போது, அம்மையார் "அடைமொழிகளை', 'குறியீட்டு மொழிகளை' பயன்படுத்துவதன் பொருள் என்ன? இங்கேதான் ஐயம் தோன்றுகின்றது. சிங்களவரின் திட்டமிட்ட குடியேற்றங்கள் எனும் மண்பறிப்பால் – மண்மீட்பாக மனித குலம் காணாத ஈகங்களால் தனித்துவமான விடுதலைப் போராட்டமாக உருவெடுத்த நிலையில், தமிழரின் இதயபூமியாம் மணலாறு தொட்டு தென்தமிழீழம் வரையிலான மண் பறிப்பினை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட அடைமொழிகளே இவை. வடக்கோடு கிழக்கின் சில பகுதிகளை இணைத்தல் என்றால், பட்டிப்பளை (கல்லோயா) தொட்டுக் கந்தளாய் வரை,மணலாற்றைத்தவிர்ந்தநிலை என்று பொருள்படும். பெரும்பான்மை மக்கள் நலன்களுக்குப் பாதகமில்லாத கௌரவத்தோடுகூடிய சமாதானம் என்றால், காலங்காலமாக இன்றுவரை தொடரும் சிங்களக் குடியேற்றங்கள் பாதுகாக்கப்படும் என்று பொருள். 'அதிகாரப்பரவலாக்கம்' என்றால், இத்தகைய சிங்கள மக்கள் நலன்களுக்குப் பாதிப்பின்றிச் சில அதிகாரங்களை வழங்கல்என்றுபொருள்.

இவ்வாறு அடித்துச் சொல்லுவதற்குத் தென்தமிழீழத்தில் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டின் இன்றைய நிலையே போதுமான சான்று பகரும். இருதரப்பினரின் இராணுவ ஆயத்த நிலைகள் போன்ற பல விடயங்களை உள்ளடக்கிய விரிவான போர் நிறுத்த உடன்பாடொன்றை உருவாக்க வேண்டிய அவசியத்தைப் புலிகள் வலியுறுத்தும்போது அதைத் தட்டிக் கழிக்கும் இவர்கள் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டினைத் தமது மேலாதிக்கஆக்கிரமிப்புநிலையினை உறுதிப்படுத்தும் ஆவணமாகக் கருதித் தாமே உருவாக்கிய போர் நிறுத்த விதிகளைப் புலிகள் மீறுவதாக எண்கணக்குக் காட்டுகின்றனர். தாம் பிறந்த மண்ணில், தமது தாயக பூமியில் விட்டு வீதியாகத்திரிய, தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த, இராணுவம் அங்கு தடையாக நிற்பதன் பொருளும் சந்திரிகா அம்மையார் சிறப்பான அடைமொழிகளுடன் கூறுவதன் பொருளும், ஒன்றேயாம். இவையொன்றும் தமிழீழ மக்களுக்குப் புதியவை அல்ல. "எண்ணித் துணிக கருமம்" என்பதன் பொருளை உணர்ந்த எம்மக்கள் சந்திரிகா அம்மையார் தடம் புரள்வதைக் கவலையோடு கவனிக்கின்றார்கள்.

இத்தகைய நிலைகள் இருந்த போதும் சந்திரிகா அம்மையாருக்கு இன்னமும் வாய்ப்பு இருக்கின்றது என்பதைத் தமிழ்த் தேசியத்தின் தலைவன் அமைதியாகக் கூறும் நிலையே இன்றுள்ளது. ஏனென்றால் அண்மைக்கால வரலாற்று நிகழ்வுகள்,தமிழரின்விடுதலைப்போராட்டம் அனைத்துலகத் தகுதிகாண் நிலையைத் தாண்டிவிட்டது என்பதை

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்...

www.tamilarangam.net



# இராணுவ நலன் சார்ந்த சந்திரிகாவின் கடிதமும் தலைவர் கொடுத்த காலக்கெடுவும்

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஒரு நெருக்கடியான கால கட்டத்தை அடைந்த நிலையில், சில தினங்களுக்குள் போரா? சமாதானமா? என்பது குறித்து தீர்க்கமான முடிவு ஒன்றைக் கூற வேண்டிய நிர்ப்பந்தம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நிலையில், 3 ஆம் சுற்றுப்போர் வெடித்துள்ளதெனலாம்.

சுருக்கமாகக் கூறுவதானால் இது வரை சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தனது எண்ணத்திற்கு நடத்திச்செல்லலாமெனச் செயற்பட்டு வந்த ஜனாதிபதி சந்திரிகாவிற்கு, நீங்கள் போரையா? சமாதானத்தையா? எதைத் தெரிவுசெய்யப் போகின்றீர்கள் என்பதற்குப் பதில் கூறுங்கள் எனக் காலக்கெடு ஒன்று விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகாவின் முன் வைக்கப்பட்ட காலக் கெடுவானது, விடுதலைப் புலிகளினால் நீண்டதொரு அவதானிப்பின் அடிப்படையிலும்,ஜனாதிபதிசந்திரிகாவின்நிலைப்பாட்டில் வெளிப்படும் முரண்பாட்டின் அடிப்படையிலு மானது என்பதும் தலைவர் பிரபாகரனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவிற்கு எழுதிய கடிதத்தில் தெளிவாகவே சுட்டிக் காட்டப்பட்டது.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைக்குரியதீர்வானது,திட்டவட்டமாக இராணுவப் போருபாயத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை ஜனாதிபதி சந்திரிகா, தலைவர் பிரபாகரனுக்கு கடந்த பங்குனி மாதம் 9ம் திகதி எழுதிய கடிதத்தில் தெளிவாகவெளிப்படுத்தியிருந்தார்.

இக்கடிதத்தில், "விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ்ப் பிரதேசங்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும், பூநகரி இராணுவமுகாம் அகற்றப்படவேண்டும், வடக்கு-கிழக்கு கடலிலுள்ள மீன்பிடித் தடை முற்றாக நீக்கப்படல் வேண்டும், கிழக்கில் புலிகள் ஆயுதபாணிகளாக நடமாட அனுமதிக்க வேண்டும் என முன்வைத்துள்ள நான்கு கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் பாரதூரமான இராணுவ விளைவுகள் ஏற்படும். அரசு தேசிய பாதுகாப்பை விட்டுக் கொடுக்காது. இயன்றளவு சலுகைகள் வழங்கப்பட்டுவிட்டன" என ஜனாதிபதி சந்திரிகாவாற்குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் இக்கடிதமானது மூன்றுமுக்கியவிடயங்களைச்சுட்டிக்காட்டியுள்ளது என்றே கொள்ளலாம். ஒன்று, சமாதானப் பேச்சுவார்த்தையின் சகல அம்சங்களும் இராணுவத்தின் போர்த்தந்திரோபாயத்திற்கு விரோதமில்லாத வகையிலேயே மேற்கொள்ளப்படும்.

**தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடிய யாவும் வழங்கப்பட்டு விட்டன. அதாவது இதற்கு மேல் தமிழருக்கு வழங்குவதற்கு எதுவுமில்லை.**

இரண்டு, தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்சனைகளின் தீர்வானது தேசிய நலனுக்கு விரோதமானது. மூன்றாவது, தமிழ் மக்களுக்கு வழங்கக் கூடியயாவும்வழங்கப்பட்டுவிட்டன. அதாவது இதற்கு மேல் தமிழருக்கு வழங்குவதற்கு எதுவுமில்லை என்பதே ஆகும்.

ஜனாதிபதி சந்திரிகா எடுத்த இந்நிலைப்பாடானது, அவர் சமாதானப் பேச்சுவார்த்தையை ஒரு இராணுவ அழுத்தத்துடன் கூடியதான திணிப்பு ஒன்றாக மேற்கொள்ள முனைவதையே வெளிக்காட்டியுள்ளது. இதேசமயம் தேவை ஏற்படும் பட்சத்தில் இராணுவ அழுத்தத்தைப் பிரயோகிக்க அவர் தயாரான நிலையில் உள்ளார் என்பதைக் காட்டுவதாகவும் இருந்தது.

இதனைப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த தெளிவாகவே வெளிக்காட்டி யுள்ளார். கடந்த பங்குனிமாதத்தொடக்கத்தில்கிழக்கு மாகாணத்திலுள்ள இராணுவ நிலைகளுக்கு விஜயம் செய்த கேணல் அனுருத்த ரத்வத்த, "விடுதலைப் புலிகளுடன் போரிடுவதற்குஇராணுவம் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். தேவை ஏற்பட்டால் நானும் சீருடை அணிந்து களத்தில் இறங்குவேன்" எனவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறாக ஜனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கம் இராணுவ போருபாயங்களுக்குப் பாதுகாப்பும், இராணுவத்தினருக்கு உற்சாகமும் அளிக்க



முற்பட்ட அதேவேளை, தமிழரின் அன்றாட அத்தியாவசியத் தேவைகளைப் புறக்கணித்ததோடு, அவை போதியளவு நிறைவு செய்யப்பட்டு விட்டது என்ற ரீதியிலும் ஒரு போலியான தோற்றத்தை வெளியுலகில்காட்டமுனைந்தது.

இதில், முக்கியமான விடயங்கள் இரண்டு சுட்டிக் காட்டப்படக் கூடியவையாகும்.ஒன்றுவிடுதலைப் புலிகள் கோரிக்கைகள் – அதாவது பொருளாதாரத்தடை, மீன்பிடித்தடை, போக்குவரத்துப்பாதை, கிழக்கில் ஆயுதங்களுடன் நடமாடுதல் – தீர்க்கப்பட்டு விட்டன அல்லது இணக்கம் காணப்பட்டு விட்டன என்பது போன்ற நிலையை உருவாக்குதல், இரண்டாவது, அனுமதிக்கப் படாமல் உள்ளவை, இராணுவத் தேவைக்குப் பயன்படுத்தக்கூடியவை. அவை அன்றாடத் தேவைக்கு அவசியமற்றவை என்பதாகும்.

இந்த வகையில், அரசாங்கத்தால் புலிகளின் தற்போதைய கோரிக்கைகளும், தமிழ் மக்களின் தேவைகளும் நியாயமற்றவை, விதண்டாவாதமானவை என்ற ரீதியிலேயே பிரசாரப் படுத்தப்பட்டன எனலாம். அரசாங்கத்தின் இப்பிரசாரத்தை, பங்குனி மாதம் 6ம் திகதி ஜனாதிபதிச் செயலகம் விடுத்த அறிக்கையிலேயே

**தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் மிக அவசியமானவை, அவசரமானவை.**

தெளிவாக அவதானிக்கக் கூடியதாயுள்ளது– இதற்காகச் சில புத்திசாலித்தனமற்ற புள்ளிவிபரங்களைக் கூட அரசாங்கம் வெளியிட்டதுஎனக்கூறலாம்.

அவ்வறிக்கையில் வழமைபோல, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் தொடர்பாக அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்ற ரீதியிலும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளை புலிகள் மூடி மறைக்கப்பார்க்கின்றனர் என்ற ரீதியிலும் குற்றச் சாட்டுகள் புலிகள் மீதுசுமத்தப்பட்டன.

ஆனால் அவ்வறிக்கையே தமிழ் மக்களின் அன்றாட, அத்தியாவசியப் பிரச்சனைகளில் அரசாங்கத்தின் குறுகிய நோக்கைப் பறைசாற்றுவதாக இருந்தது – அத்தோடு கடந்த ஐ. தே. க. அரசாங்கம் செய்தவற்றைவிட மேலதிகமாக எதையும் செய்துவிடவில்லை என்பதையும் உணர்த்துவதாக இருந்தது. எரிபொருள் என்ற ரீதியில் 1994 ஆவணி 15ம் திகதியில் இருந்து 1995 மாசி 25 ஆம் திகதிக்கும் இடையில் யாழ் மாவட்டத்திற்கு 1031 பரல் டீசலும், 69 பரல் பெற்றோலும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 11 பரல் டீசலும் 01 பரல் பெற்றோலும், மன்னார் மாவட்டத்திற்கு 20 பரல் டீசலும் 12 பரல் பெற்றோலும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 05 பரல் டீசலும் 01 பரல் பெற்றோலும் அனுப்பி வைத்ததை தனது பொருளாதாரத்தடை நீக்கத்தின் பெருமையாகச் சுட்டிக்காட்டி பொருளாதாரத்தடையின் இறுக்கத்தை



உலகிற்குக் காட்ட உதவி புரிந்ததெனலாம்.

அதாவது தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் எனவும், மிக அவசியமானவை, அவசரமானவை எனவும் விடுதலைப்புலிகளால் சுட்டிக்காட்டப்பட்ட நான்கு அம்சங்களிலும் அரசாங்கம் ஒரு தெளிவான வரையறையைக் கொண்டே செயற்பட்டது.– சிலசமயம் முன்னர் நடைபெற்ற பேச்சுக்களின் போது அவ்வரையறைகள் தாண்டப்பட்டால் கூட, அரசாங்கம் மீளவும் அதே நிலைக்கு விரைவிலேயே மீண்டுவந்துள்ளது.

பொருளாதாரத் தடைநீக்கம் என்பதில் இராணுவத்தேவைக்குப் பயன்படுத்தப்படுபவை என்பதே அரசாங்கத்தின் வரையறையாகும். இந்தவகையில் எரிபொருள் குறிப்பாகப் பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்கள், வாகனங்கள், உதிரிப்பாகங்கள் யூரியா போன்ற உரவகைகள் என்பன அடங்குப்படுகின்றன – இந் நிலையில் பெற்றோல் டீசல் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் தமிழ்மக்களின் அன்றாடத்தேவைகளின் பட்டியலில் இருந்து நீக்கப்படுகின்றன. போக்குவரத்திற்குத் தேவையான வாகனங்களும், விவசாய உற்பத்திக்குத்தேவையான உரவகைளும் தடுக்கப்படுகின்றன.

இதேசமயம் பொருளாதாரத்தடை விவகாரத்தை, அரசாங்கம் வேறு ஒருவகையில் முனைப்புப்படுத்த முனைந்தது. இதன் பிரகாரம், "வடபகுதி மீதானப் பொருளாதாரத்தடை நீக்கப்பட்டு விட்டது. ஆனால் பொருட்கள் சென்றடைவதில் சிலதாமதங்கள், சிரமங்கள் உள்ளன, அவை தீர்க்கப்படின் இப்பிரச்சனை தீர்ந்துவிடும்" என்பதே அதுவாகும். அதை வலியுறுத்துமாப்போன்று வடபகுதி க்குள் அனுமதிக்கப்படும் லொறிகள் மீதான சோதனைக்கென பூனானையில் திறக்கப்பட்ட புதிய இராணுவச்சோதனைச் சாவடியால் பிரச்சனை தீர்க்கப்பட்டுவிடும் எனப்பிரசாரம் செய்தது. அதுமட்டுமல்ல, அரசாங்கம் இராணுவ நோக்கில் மட்டும் ஏற்றுக்கொண்டுள்ள இவ்விடயத்தை, தமிழ்மக்களும் புலிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும், உலகம் அங்கீகரிக்க வேண்டும் என்பது அரசின் இன்னொரு நிலைப்பாடாகும். ஆனால் சுமார் 12 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் போக்குவரத்து, பொருளாதாரம் என்பவற்றிற்கு விதிக்கும் தடை ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. புலிகளின் இராணுவ நடவடிக்கைகள், எரிபொருள் தடையால் முடக்கப்பட்டுள்ளது என்றவாதமும் ஏற்புடையதல்ல. அத்தோடு உலகின் எப்பகுதியிலும் எரிபொருள் அத்தியாவசியப் பொருட்களில் ஒன்றாகச் சேர்க்கப்படுகின்றதேயொழிய,இராணுவப் பொருள்களில் ஒன்றாகச் சேர்க்கப்படவில்லை.

அடுத்ததாக, மீன்பிடித் தொழிலுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியை வழங்கவே அரசு முனைந்தது. அதாவது அரசாங்கம் கரையோர மீன்பிடியை அனுமதிப்பதற்கான நிலையில் இருந்ததேயொழிய, ஆழ்கடல் மீன்பிடியை அனுமதிப்பதாக இல்லை. கரையோர மீன்பிடியையும் பலஇடங்களில் கட்டுப்படுத்தவே முனைந்தது. இவ்விடயத்தில் அரசாங்கத்தரப்பினர் பேச்சுவார்த்தை மேசையில் சற்று திறந்த மனத்துடன் இருந்திருப்பினும்,கொழும்புசென்றவுடன்அது மாற்றத்திற்குள்ளாகிவிட்டது என்றே கூறவேண்டும்.இதன்காரணமாகவே மோதல் தவிர்ப்பு நிலையைப்பொறுத்து, உடன்பாட்டிற்கு விரோதமாகச்செயற்படும்நிலையைக் கூடஅரசுஎடுத்ததெனலாம்.

வடக்கின் மொத்த சனத்தொகையில் சுமார் 20 வீதமான மக்கள் மீன்பிடித் தொழிலை நம்பியுள்ளனர். இவர்களின் ஜீவனோபாயத்துடன் இத் தொழில் பிணைக்கப்பட்டுள்ளது. கடந்த5ஆண்டுகளாகத்தொழிலின்றி இவர்கள் வாடுகின்றனர். ஆனால் இவர்களின் பிரச்சனையைத் தீர்க்க அரசாங்கம் தயாராக இல்லாத அதேவேளை, புனர்வாழ்வு புனரமைப்பைப்பற்றியே பேசிக்கொண்டது. இது கடற்படையினரின் போர் வியூகத்தையும், கடல் முற்றுகையையும் மனதிற்கொண்ட

தொடர்ச்சி பக்கம்-12

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உழுத்த மாளிகையின் இடுக்குகள் எங்கும்

# போராட்டம் விதைத்த ஆலம் விழுதுகள்

**விடுதலைப்புலிகள், ஒரு நிலையான நிலைப்பாட்டினைக் கொண்டிருக்க, சிறீலங்கா அரசதரப்பினர் அன்றிலிருந்து இன்றுவரை காலத்திற்குக் காலம் வளைவதும், நெளிவதுமாகத் தடம்புரண்டு வந்துள்ளனர். இதற்குச் சந்திரிகாவின் பௌத்த, சிங்கள பேரினவாத ஆட்சியே காரணமாகும். இப்போக்கு பேச்சுவார்த்தையில் பெரும் தேக்கநிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்க வேளையில் ஆக்கப்பட்ட கட்டுரையே இது.**

தமிழ்மக்களின் தேசிய இனச்சிக்கல் தொடர்பான சந்திரிகா அம்மையாரது செயற்பாடுகளையும் அறிக்கைகளையும் பார்க்குமிடத்து, "இல்லாத ஊருக்குப் போகக்கிளம்பிய பயணமாகி விடப்போகின்றதோ அவரது போக்கு" எனச் சிந்திக்கத் தோன்றுகின்றது. நேர்வழி இருக்கும்போது அதனைவிடுத்துப் பாதைகளை மாற்றிவைத்துப் பயணம்செய்ய முயலும் அவர், தனது பயணத்திற்குப் புலிகள் தடையாகவுள்ளனர் எனச்சொல்லவும் முனைகின்றார். தனது பெயர் சந்திரிகா விஜயகுமாரதுங்கா அல்ல; சந்திரிகா பண்டாரநாயக்கா விஜயகுமாரதுங்கா என்று வலியுறுத்தும் அவர், பதவிக்கு வருவதற்காக அவ்வப்போது அணிந்துகொண்ட வாக்குறுதிகள் எனும் முகமூடிகளை இப்போது எவ்வித தயக்கமுமின்றிக் கழற்றிவருகின்றார். இத்தகைய அவரது போக்குக்கண்டு, அவரைத் தெரிவுசெய்த சிங்கள மக்கள் திடுக்கிடும்போது, தமிழீழ மக்களோ இனச்சிக்கல் தொடர்பான அவருடைய உண்மைமுகம் எதுவென ஐயுறுவதில் தவறேது? சிங்கள மக்களின் நீண்டகால அரசியற்போக்கினை ஆராய்ந்து வருபவர்கள், சிங்கள மக்கள் தமக்கு நன்மையயக்காத ஆட்சியினைத் தோற்கடிப்பதில் காட்டும் அக்கறையைப் புதிதாகப் பதவிக்கு வருவோர் குறித்துக் காண்பிப்பதில்லை என்கின்றனர். ஆனால் தமது 48 ஆண்டுகால சுதந்திர நாளை சிங்களவர் பெயருக்காயினும் நினைவுகொள்ளும்போது, தமிழ் மக்கள் தாம் நம்பிக்கெட்ட வரலாற்றையல்லவா ஞாபகப்படுத்திக் கொள்கின்றார்கள். தமது முன்னோர் செய்த தவறினைச் செய்யேன் எனக்கூறி நேசக்கரம் நீட்ட முற்பட்டவர், இப்போது பாதியில் நீட்டிய கையையே பற்றிப் பிடியுங்கள் அதுபோதும் எனக்கூறினால், தமிழ் மக்கள் தயக்கம்கொள்வதில் தவறேது? ஏனென்றால் "நிலையின் இழிந்தக் கடையாக' மாறினால், "தலையின் இழிந்த மயிரனையர்" எனத் தாம் ஆகிவிடுவோம் என்பது அவர்களுக்கு இப்போது பட்டறிவல்லவா?.

**தமிழ்த் தலைவர்களை ஏமாற்றும் படலத்தை முதலில் தொடக்கி வைத்த சொலமன் பண்டாரநாயக்காவைத் தந்தையாக - தமிழ்ப் பகுதிகளில் முதல் இராணுவ அடக்குமுறைகளுக்கு வழிகோலிய சிறீமாவோ பண்டாரநாயக்காவைத் தாயாகக் கொண்ட சந்திரிகாவிடம் வேறென்ன நாம் எதிர்பார்க்க முடியும்?**

## அம்மையார் விருக்கும் எச்சரிக்கை நிலை

இதயபூர்வமான நேர்மையுடன் அரசியல் இலாபநட்டங்களுக்கு அப்பால், அணுகவேண்டிய தேசிய இனச்சிக்கலை இப்போது அவர் அணுகும்முறை, அவரது முன்னைய அரசியற்போக்கினை நோக்குவோர்க்கு ஒன்றும் ஆச்சரியத்தைத் தராது. பல நூற்றாண்டு காலமாக அடிமைச் சகதியில் புதைந்த இனம் விழிப்படைந்து, அதன் தேசிய ஆன்மா இதுவரை வடித்த குருதியைத் துடைத்தெறியக் கிளர்ந்தெழும்போது மரபுவழி அரசியல் வித்தைகளை, அழுத்தம் கொடுக்கும் வார்த்தைகளை, முரண்பாடான செயற்பாடு களைக் கையாண்டு அதனைத் தீர்க்க முடியும் என நம்புவது தனது அரசியல் நலன்கட்கு எவ்வித பாதிப்பையும் அவர் ஏற்படுத்த விரும்பவில்லை என்பதையே புலப்படுத்துகின்றது. இத்தகைய அவரது போக்கு அவர் சனாதிபதியாகப் பதவியேற்ற அன்றே புலனானது. "பெரும்பான்மை மக்களுக்கு எவ்வித பாதிப்பையும் கொண்டுவராத தீர்வு" என்றும் "கௌரவத்தோடுகூடிய சமாதானம்" போன்ற சொற்றொடர்களை அன்றிலிருந்தே அவர் பயன்படுத்தத் தொடங்கினார். இதன்பின் அவரது பாதுகாப்புப்பிரதி அமைச்சரோ புலிகள் வழிக்குவராவிட்டால், இராணுவத் தீர்வினையே நாடவேண்டி நேரிடும் எனும் பொன்மொழிகளை இன்றுவரை

உதிர்த்தவண்ணமேயிருக்கின்றார். இப்போது இறுதியாகப் பிரெஞ்சுமொழி படித்த சந்திரிகா அம்மையார் பிரான்சிய செய்தி இதழான புகழ்மிக்க 'லெமொண்ட்' டிற்கு செவ்வி கொடுக்கும்போதுகூறியது இதுதான்.

> ''கரந்துறை போராளிகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை விரும்பாத நிலையில், நான் போருக்குச் செல்வேன் எனக் கூறவரவில்லை. ஆனால் செவ்வனே நன்கு ஆயுதமயமாக்கப்பட்ட இராணுவத்தைக் கொண்டுள்ள உறுதியான நேர்மையான தொரு அரசு போரை நிச்சயமாக வெல்லும் என்பதை மட்டும் என்னால் கூற முடியும்."

இவ்வார்த்தைகள் விடுதலைப் புலிகளுக்கு அம்மையார் விடுத்த முதல் எச்சரிக்கை என்றே சிங்கள, ஆங்கிலச் செய்தியேடுகள் தலைப்பிட்டுப்பரபரப்பாகப்பிரசுரித்தன. முன்னர் சந்திரிகா அவர்கள் தனது கணவர் விஜயகுமாரதுங்காவோடு, தமிழ்க்குழுக்களோடு பேச்சுக்களை நடத்தத் தமிழ்நாடு சென்றிருந்தபோது 'விஜய்' தமிழ் மக்களின் இடர்கள் குறித்துப் பேசும்போது அவர் குறிப்பிட்ட எல்லையைத் தாண்டாது பேசுவதை மட்டுப்படுத்துவதையே தனது வேலையாக அம்மையார் மேற்கொண்டிருந்தார் என்பதும் பேச்சுக்கள் முடியும்போது சிறீலங்காவில் தமக்கு அரசியல் நன்மைகள் ஏற்படும் வகையிலான அறிக்கைகள் விடுமாறு அப்போதே வற்புறுத்தியவர் என்பதையும் இங்கே நினைவு கொள்ள முடியும். தமிழ்த் தலைவர்களை ஏமாற்றும் படலத்தை முதலில் தொடக்கிவைத்த சொலமன் பண்டாரநாயக்காவைத் தந்தையாகவும், தமிழ்ப் பகுதிகளில் முதல் இராணுவ அடக்குமுறைக்கு வழிகோலிய சிறீமாவோ பண்டாரநாயக்காவைத் தாயாகவும் கொண்ட அவரிடம் வேறென்ன நாம் எதிர்பார்க்க முடியும் எனக்கருதுவதிற் தவறென்ன இருக்கமுடியும்?

## பொறுமைக்குப்பதிலாகப் பொங்கும்நிலை

இதுவரையும் மூன்று கட்டங்களாக நடந்தேறிய அமைதிப் பேச்சுக்களைப் பார்க்குமிடத்து எவருக்கும் ஒரு உண்மை புலப்படும். முதலாவது பேச்சுவார்த்தையின் முடிவில் மாத்திரமே இருதரப்பினரும் ஒன்றாக இருந்து வெளியிட்ட கூட்டறிக்கை என்பது வெளியாகியது. இதன்பின்னான பேச்சுக்களின் முடிவில் கூட்டறிக்கை என்பதற்குப் பதிலாகக் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இரு தரப்பினரும் தனியான அறிக்கைகளைத் தத்தமது நிலைப்பாட்டிற்கேற்பவே வெளியிட்டனர். இவ்வேறுபட்ட நிலை மூன்றாங்கட்டப் பேச்சுக்களின்பின் வெகு தெளிவாகவே பிரதிபலித்தது. விடுதலைப் புலிகள் ஒரு தொடர்ச்சியான நிலைப்பாட்டைத் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தும் அதேவேளை சிறீலங்காத்தரப்போ காலத்திற்குக் காலம் வளைவதும் நெளிவதுமாகத் தடம்புரள்கின்றது. பேச்சு வார்த்தைகளில் ஒருமுகமும் கொழும்பில் இன்னொரு முகமுமாகக் காட்டிநிற்கின்றனர். மோதற்றவிர்ப்பு உடன்பாட்டின் பல்வேறு குறைகள் தொடர்பான புலிகளின் எழுத்திலிடப்பட்ட விளக்கங்களுக்குப் பதிலளிப்பதைத்தவிர்த்துத்தமது மேலாதிக்க நிலைப்பாட்டை வலியுறுத்துமாப்போல் பேச்சுவார்த்தையிற்பேசி, முடிவுக்குவரமுன்னர் தமது முடிவினை அரசு அறிவித்தலாக வெளியிடுகின்றது. ஒரு தரப்பு முடிவுகளை இருதரப்பு முடிவாக்கும் வித்தையிலும் ஈடுபடுகின்றனர். இதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. சந்திரிகா அம்மையாரின்

**பாலகுமாரன்**

ஆட்சி வழமைபோல் இன்னமும் பௌத்த, சிங்களப் பேரினவாதக் கருத்தியலின் அடிப்படையிலமைந்த தளத்தின் மீதே நிற்கின்றது. அரசின் முடிவுகள் பேரினவாத அரச இயந்திரத்தின் இயங்கு விதிகட்குட்பட்டே மாற்றமுற்று வெளிவருகின்றன.

எனவேதான் படிப்படியாக, நிதானமாக, பக்குவமாகத் தமிழ்மக்களிடையே உறுதியான நம்பிக்கையைக் கட்டி எழுப்பி நகரவேண்டிய பேச்சுவார்த்தை, ஒவ்வொரு கட்டமுடிவிலும் தேக்கநிலையை அடைகின்றது. ஆனால் இத்தேக்கநிலை பற்றிச் சற்றும் கவலைப்படாமல் காலம் தாழ்த்தினால், புலிகள் பலம்பெற்றுவிடுவர் என அலட்டியவண்ணம் இப்போது அவசரம் அவசரமாகத் தீர்வுத்திட்டம் ஒன்றினைத் தயாரிக்கும் பணி முற்றுப்பெற்றுவிட்டதாகக் கிரமமான அறிவிப்புக்களை விடுத்துச், சிங்களப் பேரினவாத சக்திகளுக்குச் சாமரம் வீசுகின்றார் அம்மையார். அனைத்துலக அரசியல் அறிந்தவர் எதற்கெடுத்தாலும் ஏ. என். சி க்கும் தென்னாபிரிக்க நிறவெறி அரசுக்கும் அரபாத்திற்கும் றபினுக்கும் இடையிலான பேச்சுக்களை மேற்கோள் காட்டுபவர், அப்பேச்சுக்கள் எவ்விதம் – எவ்வளவு காலம் நடைபெற்றன என்பதை அறியாரா? நான்காண்டுக்கு மேலாக நடைபெற்றது தென்னாபிரிக்கப் பேச்சுக்கள். ஓராண்டுக்கு மேலாக நடைபெற்றும் பெரும் இழுபறியில் இப்போது இன்னொரு ஆண்டாகப் பேச்சுக்கள் தொடரும்நிலை பாலத்தீனத்தில். போர்நிறுத்தம் அறிவித்து 7 மாதங்கள் கழிந்தும் இன்னமும் முறையான பேச்சுக்கள் ஐ. ஆர். ஏக்கும் பிரித்தானியாவுக்கும் தொடங்கவில்லை. பொறுமையாக அணுகவேண்டிய சிக்கலைப் பொங்கியநிலையில் அவர் அணுகுவதற்கு மிக முக்கியகாரணியுண்டு.

## காற்றுள்ளபோதுதூற்றும்நிலை

மாற்றமுறும் தற்போதைய புதிய உலக ஒழுங்கு எனும் சூழலிலே – பொருண்மிய நலன்கள், பிராந்திய மேலாதிக்கங்களின் நலன்களை இரண்டாமிடத்திற்குத் தள்ளிவிட்ட நிலையிலே – தமிழ் மக்களோடு தாம் நடத்தும் போருக்குத் தொடர்ந்து ஆதரவையோ, போருக்குச் செலவிடும் நிதிக்கான மாற்றீட்டையோ எவரும் தொடர்ந்து அளிக்கப்போவதில்லையென்பது சந்திரிகா அம்மையாருக்கும் அவரது அனைத்துலக அறிவுமிக்க ஆலோசகர்களுக்கும் ஒன்றும் தெரியாத விடயமல்ல. குடியரசுக் கட்சியினர் செல்வாக்கு மேலோங்கும் அமெரிக்க நிருவாகமோ தமது அமெரிக்க நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படாத இடங்களில் எவ்வகையிலும் (நிதியுதவி உட்பட) தலையிடுவதைப் பூரணமாக விரும்பாத நிலைக்குத் தள்ளப்படுகின்றது. தாம் ஊட்டி வளர்த்த அமைப்புக்களையே இடைநடுவிற் கைவிட்டு, அவ்வவ்நாட்டு அரசுகளில் கணிசமான பங்கேற்கும் வகையிலான செயற்பாடுகளையே ஐ. நா. விற்கு ஊடாக மேற்குலகம் மேற்கொள்வதை நிக்கராகுவா தொட்டு அங்கோலா, மொசாம்பிக் வரையிலான வரலாறுகள் காட்டுகின்றன. இப்போது மேற்குலகம் விரும்புவது தமது உலக வைப்பகம் (வங்கி), அனைத்துலக நாணய நிதியம் போன்ற நிதியுதவி அமைப்புக்களுக்கூடாக வழங்கப்படும் கடன்களைச் சம்பந்தப்பட்ட நாடுகள் தமது பொருண்மிய விரிவாக்கத்திற்குப் பயன்படுத்துவதையே. அப்போதுதான் அவர்கள் நலன்களும் மேலும் உறுதிப்படும். எனவேதான் கடந்த இரண்டு ஆண்டுகளாகச் சிறீலங்கா தொடர்பான உலக வைப்பகத்தின் வேறுபட்ட போக்கு, அதன் விளைவுகளை உணர்ந்த அம்மையார் தனது அனைத்துலகப் பொருண்மிய ஆலோசகரும் நண்பருமான லால் ஜெயவர்த்தனாவின் ஆலோசனைப்படி 'அமைதி' எனும் துறையிலே தனது முதலீட்டைச் செய்ய உத்தேசித்தார். இவர்கள் திட்டப்படி பேச்சுக்களைத் தொடர்ந்து போர் நிறுத்தப்பட்டால், அமைதிக்கான முதலீட்டின் பங்கிலாபம் பாரிய அளவில் கிடைப்பதோடு, உலக வைப்பகமும் மிகத்தாராளமாக மீதப்படுத்தப்படும் போருக்குச் செலவிடப்படும் பணத்தைவிட, இரட்டிப்பான உதவியைச் செய்யத் தயாராக உள்ளது. எனவே இப்போது இறுதியாகக் கிடைக்கும் கொழும்புச் செய்தி

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**விடுதலைப் புலிகளுக்கும், சந்திரிகா அரசிற்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் முன்னேற்றம் காணமுடியாத நிலையில் ஆட்டங் கண்டபோது, எம் மக்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைகளையே தட்டிக் கழித்து வந்த சந்திரிகாவின் பேரினவாதப் போக்கை வெளிப்படுத்த பேச்சுவார்த்தை முறிவடையும் தறுவாயில் எழுதப்பட்ட கட்டுரையே இது.**

# சந்திரிகாவின் சமாதானம்

சந்திரிகா அரசிற்கும் புலிகள் அரசிற்கும் இடையில் கடந்த மூன்றுமாத காலமாக நடைபெற்று வந்த அமைதிப் பேச்சுக்கள்,அஸ்த்தமிக்கும் நிலைக்குச் சென்றுவிட்டன. தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளுடன் நேரடி யாகச் சம்பந்தப்பட்டுள்ள பொருண்மியத் தடைநீக்கம், மீன்பிடித்தடை நீக்கம், பூநகரி முகாமை அகற்றி ஒரு பாதை திறப்பது என்பவற்றைச் சந்திரிகா அம்மையார் முழுமையாகவே நிராகரித்ததைத் தொடர்ந்து, அமைதிப் பேச்சுக்கள் தோல்வியுறும்நிலைக்குச்சென்றுள்ளன.

தமிழ் மக்களின் அத்தியாவசிய- அன்றாடத் தேவைகளான இவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால், "பார தூரமான இராணுவ விளைவுகள் ஏற்படும்" என்றும் எனவே, தேசிய பாதுகாப்பை அரசு விட்டுக் கொடுக்காது என்றும் காரணம்கூறி சந்திரிகாஅம்மையார்அவற்றைநிராகரித்துள்ளார்.9-3-95ஆம் திகதியிட்டு தலைவர் பிரபாகரனுக்கு வரைந்துள்ள மடலில், சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, இவ்விதம்

> ***ஒரு இராணுவ முகாம் - சில அத்தியாவசியப் பொருட்கள்- ஒரு மீன்பிடி உரிமை- போன்ற இச் சின்னஞ்சிறு விடயங்களை நிறைவேற்றினால் 'பென்னம் பெரும் விளைவுகள் ஏற்படும் என விளக்கமளிக்க முற்பட்டுள்ள சந்திரிகா அம்மையார், தாயக நிலம் பற்றிக் கதைக்கும் போது -தன்னாட்சி உரிமை பற்றிக் கதைக்கும் போது - சிங்கள தேசம் சமுத்திரத்துக்குள் மூழ்குகின்றது என்றல்லவா கூக்குரலிடப் போகின்றார்.***

வெளிப்படையாகக்கூறியுள்ளார்.

தமது அன்றாடப் பிரச்சனைகளையும் அத்தியாவசியத் தேவைகளையும் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள முனைவது என்பது, சிறிலங்காவின் தேசிய பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கக் கூடியது என்ற சந்திரிகா அரசின் கருத்தையே இதுகுறித்துக்காட்டுகிறது.

இன்னும் ஒரு வகையில் சொல்லப்போனால், வடக்கு- கிழக்குத் தமிழ் மக்களின் வாழ்வென்பது சிறிலங்காவின் தேசிய பாதுகாப்பிற்குக் குந்தகமானதென்று சந்திரிகா அரசு பிரகடனப்படுத்தியுள்ளதாகவே எடுத்துக்கொள்ள வேண்டி யுள்ளது. இவரின் அறிவிப்பிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியது என்னவெனில் உணவு, மருத்துவம், தொழில், பிரயாணம் போன்ற அடிப்படைத் தேவைகளை அரசு ஒருபோதும் தமிழ்மக்களுக்கு வழங்க மாட்டாது என்பதே. ஏனெனில் அவை பாரதூரமான இராணுவ விளைவுகளைக் கொடுக்கும் என்று அரசு எண்ணுகிறது.

சந்திரிகா அம்மையார் எடுத்துள்ள இந்த அரசியல் நிலைப்பாடு, "சிங்கள இனத்தின் பாதுகாப்பிற்குத் தமிழர்கள் அச்சுறுத்தலாக உள்ளார்கள்" என்ற பேரினவாதிகளின் இனவாத சித்தாந்தத்தை நியாயப்படுத்துவதாகவேஉள்ளது.

இதன்மூலம், இதுவரை காலமும் சந்திரிகா அம்மையார் அணிந்திருந்தமுற்போக்குமுலாம்பூசப்பட்டசமாதானமுகமூடி கழன்று, அவரின் பேரினவாத முகத்தை உலகுக்குக் காட்டிவிட்டது. இராணுவ அணுகுமுறைதான் தமிழர் இனப்பிரச்சனைத் தீர்வுக்குரிய மார்க்கம் என்பதைச் சந்திரிகா அம்மையார்சொல்லாமற்சொல்லியுள்ளார்.

பேச்சுவார்த்தையை அரசு காலங்கடத்திவந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இனப்பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வை வழங்கும் அரசின் நேர்மை மீது புலிகள் சந்தேகம் தெரிவித்தே வந்துள்ளனர். புலிகள் வைத்திருந்த சந்தேகம் முழு உண்மை என்பதை, சந்திரிகா அம்மையார் இப்போது நேரடியாகவே நிரூபித்துள்ளார்.இதுவரைநாளும்சிறிலங்காவை ஆட்சிசெய்த அனைத்து ஆட்சியாளர்கள் போலவே சந்திரிகா குமாரதுங்காவும், தமிழின விரோத உணர்வுகொண்ட ஒரு பேரினவாதிதான் என்பதைத் தமிழ்மக்களும் அறிந்து கொண்டனர். இதை சந்தேகத்திற்கு இடமின்றி தமிழ்மக்கள் அறிய உதவிய சந்திரிகா அம்மையார், தலைவர் பிரபாகரனுக்கு எழுதியஇறுதிக்கடிதத்திற்குகோடிநன்றிகள்.

இராணுவத் தலைமையின் அழுத்தத்திலிருந்து தப்புவதற்காக வேறு வழியின்றி சந்திரிகா அம்மையார், இவ்விதம் கடுமையான நிலைப்பாட்டை எடுத்துள்ளார் என சில தென்னிலங்கைப் பிரமுகர்கள் நியாயங்கூற முனைகின்றனர். இது சிறுபிள்ளைத்தனமான ஒரு நியாயம் என்பதுடன், இந்த நியாயப்படுத்தலின் பின்னால் பேரினவாத சித்தாந்தத்தின் செல்வாக்கும்உள்ளதைஎவருமம்றுக்கமுடியாது.

இராணுவத்தளபதிகளை கடுமையாக விமர்ச்சித்து, முப்படைத் தளபதியைப் பதவியிலிருந்து விரட்டி, முன்னால் தளபதிகள்மீது விசாரணைக்கென ஆணைக்குழுக்களை நியமித்துத் தனது அதிகாரங்களைக் காட்டிவந்த சந்திரிகா அம்மையார், தமிழரின் அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்க்க முயலும்போது மட்டும் இராணுவத்தைக் கண்டு அஞ்சுகிறார் என்று சொல்வதை, யார்தான்நம்புவார்.

அத்துடன், போரை நிறுத்தி இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பது, சந்திரிகா அம்மையாரின் தனிப்பட்ட கொள்கை அல்லவே! சிங்கள மக்கள் கொடுத்த தேர்தல் ஆணையல்லவா அது! அந்த மக்கள் ஆணைக்கு அவர் என்ன பதில் சொல்லப்போகின்றார்?

ஒரு இராணுவ முகாம், சில அத்தியாவசியப் பொருட்கள், ஒரு மீன்பிடி உரிமை- போன்ற இந்தச் சின்னஞ்சிறு விடையங்களை நிறைவேற்றினால், "பென்னம்பெரும் விளைவுகள்" ஏற்படும் என விளக்கமளிக்க முற்பட்டுள்ள சந்திரிகா அம்மையார், தாயக நிலம்பற்றிக் கதைக்கும்போது- தேசியம் பற்றிக் கதைக்கும்போது- தன்னாட்சி உரிமைபற்றிக் கதை க்கும்போது- சிங்களதேசம் சமுத்திரத்திற்குள் மூழ்குகின்றது என்றல்லவா

> **தமிழரின் மொழி உரிமை மீது அவரது தந்தையார் கைவைத்தது போல -தமிழரின் கல்வி, வே லைவாய்ப்பு உரிமைகள் மீது அவரது தாயார் கைவைத்தது போல-தமிழர்களின் வாழ்வுரிமை மீது கைவைக்க சந்திரிகா அம்மையார் முடிவு செய்துள்ளார்.**

கூக்குரலிடப்போகின்றார்! உண்மை இப்படியிருக்க, சிறிய விடயமாகிய அன்றாடப் பிரச்சனைகளை விட்டுவிட்டு, பெரிய விடயமாகிய அடிப்படைப் பிரச்சனைகள் பற்றிக் கதைப்பதற்கு நாள் குறிக்குமாறு சந்திரிகா அம்மையார் கேட்டுள்ளாரே! சந்திரிகாவின் இந்தச் சாகச நாடகத்தை இரசித்துத் தலையாட்டுவதற்கு, முன்னைய தமிழ் அரசியல்வாதிகளைப் போலபுலிகளின்தலைமைஇல்லையே!

தமிழரின் மொழி உரிமைமீது அவரது தந்தையார் கைவைத்ததுபோல- தமிழரின் கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகள் மீது அவரது தாயார் கைவைத்ததுபோல- தமிழர்களின் வாழ்வுரிமைமீது கைவைக்க சந்திரிகா அம்மையார் முடிவுசெய்துள்ளார். அவரது தற்போதைய நிலைப்பாடுஇதனையேபுலப்படுத்திநிற்கின்றது.

---

> ***"யுத்தத்தின் சத்தங்களை நி-றுத்தி,ரத்தத்தின் வாடையையே போக்குவேன்".***
> ***"போரின் வேர்களை அறுத்து, அமைதியை அரங்கில் ஏற்றி, சகஜ வாழ்வைச் சமர்ப்பிப்பேன்"***

# சந்திரிகாவின் சாதகம்

இலங்கை மணித்தீவில் அத்தனை உள்ளங்களையும் தித்திப்பிலாழ்த்திய பெயர் அது. அரையாண்டு காலத்திற்கு முன்னால் ஆர்த்தெழுந்த பேரலை ஒன்றின் பெயர் அது. பொங்கிப் பிரவாகித்து தீவு முழுவதையுமே அது தன்னுள் அமிழ்த்தியது. யுத்தத்தின் சத்தங்களை நிறுத்தி, ரத்தத்தின் வாடையையே போக்குவேன் எனக்கேட்ட அசரீரியின் பின்னால்.... அந்தப்பெயர். போரின் வேர்களை அறுத்து,அமைதியை அரங்கில், ஏற்றி சகஜ வாழ்வைச் சமர்ப்பிப்பேன் என அந்தப் பெயர் உரக்க உரைத்தது. போரிற்கு உரமான பெருந்தலைவர்களின் படங்களோடு "இவர்களின் துணைவிகளினதும் எனதும் நிலை, இனி இந்தத் தீவின் பெண்குலம் அவலங்களைக் காணவிடேன்" என அது உறுதியளித்தது. வாக்குறுதிகளுக்கு உருகிப்போன தேசம், உலகம் வியக்கும் வாக்குகளை அளித்தது. சனங்களின் அதிபதியாகி சரித்திரத்தில் பதிந்தது அந்தப்பெயர்.

அந்தச் சுந்தரப் பெயர்தான் சந்திரிகா. அழகான பெயர், பெயருக்குரியதான அழகான முகம். நிமிர்ந்த, மிடுக்கான, எடுப்பான தோற்றம் கண்டவர்களைக் கவர்ந்தது. கேள்விப்பட்டவர்களையும்வசீகரித்தது.அன்னவள்அற்புதம் நிகழ்த்தப் போகிறாள் என்று தேசம் நம்பிக்கையில் திளைத்தது. சமாதானத் தென்றல் தங்களுக்குச் சாமரம் வீசும் நாளினுக்காக சிங்கள மக்கள் **வழிமேல் செவிவைத்து** காத்திருந்தார்கள்.

> ***சந்திரிகாவும் மந்திரிகளும் பேரினவாதத்தின் புத்திரர்களே- தமிழன் உணர்ந்து கொண்டான். பேச்சுவார்த்தை என்ப தென்றால் பேய்க்காட்டும் தந்திரமா? இனி அவன் ஏமாறான், ஏமாந்து போய் வீழான்,.. வீழ்ந்து கிடந்து அழான்.***

படித்தவனுக்கு மரியாதையும், கற்றவனுக்கு கௌரவமும் கொடுப்பது தமிழ்ச் சமூகம். சந்திரிகாப் பெருமாட்டியின் கல்விப் பேரழகில் அது தன்னை இழந்தது. உலகெலாம் சுற்றிப் பெற்ற உன்னதக் கல்வி, ஊருக்கு உத்தமம் செய்யப் போவதாக தமிழ்மண் உவகை கொண்டது. படித்தவள், பலவாறாகவும் சிந்திக்கூடியவள், நாட்டு நடப்புகளை நாற்பது ஆண்டுகளாய்ப் பார்த்தவள், அனுபவத்தால் ஆராய்ந்தவள், வன்முறையின் கோர வடுக்களைத் தானும் சுமப்பவள், படிப்பறிவிலும்-பட்டறிவிலும் புடம்போட்டுப் பக்குவப்பட்டவள். யாழ்ப்பாணத்துப் பெரியார்கள் கூடியிருந்து பேசிக்கொண்டார்கள்- "பொடிச்சிசெய்வாள்".

ஊருக்கு வெளியில் புளியடிக்குக் கீழ் குந்தியிருக்கும் முதிர்ந்த பழசு மட்டும் வேறுமாதிரி முணுமுணுத்தது. கேட்டவர்கள் சினந்தார்கள், எரிச்சல் பார்வை பார்த்தார்கள். அது சொல்லிக்கொண்டது-

**'கொழுக்கட்டையும் மோதகமும் போலத்தான், உருவம் தான்டா தம்பி வேறு, உள்வீடு எல்லாம் ஒண்டுதான்**

ஊரவர்கள் பழசுக்குப் பைத்தியம் என்றார்கள். பல்லு விழுந்த கொள்ளுக் கிழவர் தனக்குள் சிரித்துக்கொண்டார்.

ஆறு மாதங்கள் போயின........ ஆறே ஆறு மாதங்கள் சமாதானச் சாயம் கரைந்து, குள்ள நரியின் வேட்டைப்பற்கள் வெளியில் தெரிந்தது. தமிழன் விழித்துக்கொண்டான். சந்திரிகாவும் மந்திரிகளும் பேரினவாதத்தின் புத்திரர்களே- தமிழன் உணர்ந்துகொண்டான். பேச்சுவார்த்தை என்பதென்றால் பேய்க்காட்டும் தந்திரமா? இனி அவன் ஏமாறான், ஏமாந்துபோய் வீழான்,.. வீழ்ந்து கிடந்துஅழான்.

இது *"பிரபாகரனின்காலமாக்கும்!"*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலைக்களம்

போலிச் சாமியின் காவி வேட்டி
சாயம் கரைகிறது.
குரங்கு போட்டிருந்த மனித முகமூடி
கழன்று விழுகிறது.
சமாதானச் சங்கின் சுருதி கலைகிறது
மீண்டும்...
'கொத்திப் பேய்'
சொத்தி முருங்கில் ஏறுகிறது'.
இனிக் கத்தும்.
கல்லாலெறிந்து சண்டைக் கிழுக்கும்.
வெள்ளைக் கொடிக்கு.
கொள்ளைக் காரர்கள் குருதி பூசுகின்றனர்.
கொம்பு சீவிய "சிங்களக் காளைகள்"
சண்டைக்குத் தயாராகி விட்டனர்.
புலுமச் சிலந்திக்கும். நட்டுவக்காலிக்கும்.
பிறந்த புடையன் பாம்பின்..
நச்சுப்பற்கள் நமக்குத் தெரிகிறது.
சாந்த சொரூபத்தின்சுயரூபம்
"ட்ரகுலா" பற்களுடன் கூடிய கோரமுகம்.
"எல்லாம் முடிஞ்சது தன்னானே
இனித் திருக்கையும் நெய்யும் தின்னானே."
நல்ல பழமொழி. நமக்கும் பொருந்தும்.
கூத்துக்காரர் ஒப்பனையைக் கலைத்து
உண்மை முகத்தை உலகுக்குக் காட்டினர்.
நன்றி"
"ஒரு பொல்லாப்பும் இல்லை




எல்லாமும் எப்பவோ முடிஞ்ச அலுவல்"
"தேரடிச்சாமி" தீர்க்க தரசி
நாங்கள்.
ஆராத்தித் தட்டில் குங்குமம் கரைத்து
வாசலுக்கழைத்து வரவேற்பளித்தோம்.
வந்திறங்கிய விமானப் பல்லக்கில்
புழுதி படிந்தபோது கூட
முத்தத்தால்தானே ஒத்தியெடுத்தோம்.



உங்களுக்குப் பாதம் நோகுமென்று
பஞ்சினால் அல்லவா பாதை சமைத்தோம்.
தலைவனெழுதிய "சமாதான ஓலையை"
வெள்ளைப் புறாக்கள் எடுத்து விரைந்தன.
தங்கையிடம் தமிழீழமா கேட்டோம்.?
இல்லையே
ஒற்றையடிப் பாதை ஒன்றையே கேட்டோம்.
வயிற்றுப் பசிக்கு வலைவீசக் கேட்டோம்.
இறைத்துப் பயிர் செய்ய எரிபொருள் கேட்டோம்.
சலுகைகளைக் கூடத் தரமறுப்பவர்களிடம்
உரிமைகளை எப்படி எதிர்பார்க்கலாம்.
தெற்கில் தேர்தல் திருவிழாவின் போது
"சின்ன மேளம்" சிரித்துக் கொண்டது.
பக்க வாத்தியங்கள் "பல்லவி" வாசித்தன.
"சொர்ப்பன சுந்தரி"யின் நயன பாஷையை
இங்கும் சிலர் "அற்புதம்" என்றனர்.
வளையலோசையில் வசமிழந்தனர்.
பலருக்கு பழையது மறந்து போனது
இன்று....
உண்மை முகத்திலடிக்கும் போது.
அம்மாவும். அம்மம்மாவும்
சும்மா என்பது தெரியவந்தது.
புத்தனுக்கு 'அரச நிழலில்' ஞானம் விடிந்தது.

# மீண்டும் கொ

தமிழனுக்கு 'அனுபவ நிழலில்' அறிவு
இனி என்ன செய்வது?
எடுத்த காவடியை இறக்கியே தீர வே
போரென்றால் போரென்றான் "பழைய
பேச்சுவார்த்தை முறிந்தால்
போரென்றான் "புதிய கிறுக்கன்"
இது தமிழர் மீதான போர்ப் பிரகடன
தமிழனே! என்னடா செய்யப் போகிறா
கழற்றி வைத்த போருடையை
எடுத்து மாட்டு.......
வீர வாளுக்கு வேலை வந்து விட்ட
கசாப்புக்கடை மேசையிற்கூட
கருணை பிறக்கலாம்.
பேச்சுவார்த்தை மேசையில் மட்டும்
உரிமை கிடைக்காது.
இது புதிய வேதம்.
அனுபவம் தந்த ஆய்வின் முடிவு.
மட்டக்களப்பில் சுற்றி வளைப்பு.
தலைநகரில் தமிழர் கைது.
பொன்னாலைக் கடலில் போனவர் கை
வவுனியாவில் புதிய கெடுபிடி.

என்ன இது?
கையெழுத்திட்ட ஒப்பந்தம் என்னாச்சு?
கண்காணிப்புக் குழுவின் கண்களில்
கறுப்புத்துணியா கட்டியிருக்கிறது?
பெரிய அளவில் தொடர்கிறது தமிழர்
எப்படிப் பொறுக்கலாம்?
புலிகள் பேச்சுக்குப் போனதை
இழிவாகக் கருதியா இந்த எடுத்தெறிவ
'பலவீனப் பட்டதாலேதான் பணிவு'
என்று நினைத்தா இந்த உதாசீனம்?
பிரபாகரனின் கவச குண்டலத்தை
எந்தக் 'குந்தியும்' வந்து எடுத்துப் பே
ஆயுதப் போரில் அலுப்புத்தட்டி
தந்ததை. வாங்கித் தலைகுனிந்து கொ
பிரபாகரன் 'அரபாத்' இல்லையென்பை
அலரிமாளிகைக்கு அறிவித்துக் கொள்
கரும்புலியணியைக் கலைத்து விட்டே
அவர்களுக்கு
கனவிற் சொன்ன கடவுள் யார்?

www.tamilarangam.net

# திப்பேய் சொத்தி முருங்கில் ஏறுகிறது

ந்தது.

டும்.

வன்”

தை.

வில்லை.

றோம்.

மென்று

ஏறிமிதிக்கும் இளம்புலி வீரரை
வேறு வேலைக்கா விட்டுள்ளோம்?
மூச்சுக்காற்றே நெருப்பு மூட்டும்
பெண்கள் படையணி.
கண்ணுக்கு மைபூசியா காலத்தைக் கழிக்கிறது?
கடற்புலிகள் அரிசி எற்றிக் கொண்டு
அமெரிக்காவுக்கா போய்விட்டார்கள்?



இல்லையே.
போருக்குத் தயாராக
சீருடையிற்தானே திரிகின்றனர்.
தங்கைச்சி தப்புக்கணக்குப் போட்டுவிட்டாள்.
ரத்வத்தை குடிப்பதற்கு ரத்தமா தேவைப்படுகிறது?
அடப்பாவி மனுஷா!
முந்தியிருந்த மந்திரிகள் முணுமுணுப்பது
அனுருத்தவின் காதுகளை அடைவதில்லையா?

தங்கையே!
ஈழத்தமிழரை
உன் "அப்பன்" அடக்க நினைத்தபோது
காலி முகத்திடலில் சத்தியாக் கிரகம்.
தமிழரை
உன் "ஆத்தாள்" அழிக்கப் புறப்பட்டபோது
துப்பாக்கிப் போர் வேர்பிடித்தது.
இன்று உனக்கும் அந்த நினைப்புத்தானா?
எச்சரித்துக் கொள்கிறோம்.
புயலடிக்கும்.
பூகம்பம் வெடிக்கும்

மின்னல் வெட்டி முழக்கம் பிறக்கும்.
பொங்கிப் பிரவாகிக்கும் போராட்ட நதியின்
கரையெங்கும்
நீங்கள் சருகாய் ஒதுங்குவீர்.
சின்னக் காற்றுக்கே கிளை முறிந்துபோக
தமிழன்
உன் வீட்டுக் கிணற்றடியிலுள்ள ஈரப்பலா அல்ல.

இது வைரப்பனைகள் வளர்ந்துள்ள பூமி
புயலைப் பார்த்துப் பனைகள் புன்னகைக்குமே தவிர
தலையைக் கவிழ்ந்து சரிந்து விழமாட்டாது.
தங்கையே!
தமிழர் கரும்பனைகள் என்பதை
கண்ணில் படுமிடத்தில் குறித்துக்கொள்.
போர்களத்திலா சந்திக்க விரும்புகிறாய்?
என்ன செய்வது?
சத்தியத்துக்காக நாங்கள் கத்தியை எடுக்கின்றோம்.
தர்மத்துக்காக நாங்கள் தேதி குறிக்கின்றோம்
தலைமுறைக்காக நாங்கள்
விலை கொடுக்கப் புறப்படுகின்றோம்.
தர்மம் வெல்லும்.
சத்தியம் வெல்லும்.
சம்பவாமி யுகே! யுகே!



www.tamilarangam.net



# திருமலையில் இரண்டு பீரங்கிக் கப்பல்கள்...

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

பிரதேசத்துள், 19.04.95 அன்று அதிகாலைஒருமணிக்குஊடுருவித் தாக்கிய கடற்புலிகளின் 'விசேட நீரடி நீச்சல் குழுவினர்' இவ் இருபத்து எட்டு கோடி ரூபா பெறுமதியான இரண்டு கப்பல்களையும் கடலில் மூழ்கடித்தனர். 12 சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டு 27 படையினர் காயமடைந்த இத்தாக்குதலில் கடற்கரும்புலிகளான மேஜர் கதிரவன் (பரந்தன்), மேஜர் தணிகைமாறன்(கட்டைக்காடு), பெண் கடற்கரும்புலிகளான மேஜர் மதிசா(குச்சவெளி – திருகோணமலை), கப்டன் சாந்தா(புங்குடுதீவு) ஆகிய நால்வரும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

குண்டுத்தாக்குதல்சத்தம்பெரிதாகக் கேட்டதாகவும் அதனைத் தொடர்ந்து துறைமுகத்தில் தரித்து நின்ற ஏனைய கப்பல்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டு, துறைமுகப்பகுதி சிறீலங்கா இராணுவ, கடற்படையினரின் கூட்டு முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்ட தாகவும் செய்திகள்கூறுகின்றன.

1991 இல் சீனாவிடம் இருந்து சிறீலங்காக் கடற்படையினர் கொள்வனவு செய்த சங்காய்–3 வகை பீரங்கிக் கப்பலான பி. 320 இலக்கமிடப்பட்ட 'ரணகுரு' கப்பல் 134'.5", 17'.7", 5'.2" கொள்ளளவும்150தொன்எடையும்29 நொட் வேகமும் உடையது. 4 என்ஜின்களையுடைய 4800 குதிரைவலுச் சக்தி படைத்த இக்கப்பலில் 37 மி.மீ, 14.5 மி.மீ இரட்டை துப்பாக்கிகள் இவ்விரண்டு பொருத்தப்பட்டுள்ளன. 28 கடற்படையினர்பயணம்செய்யவல்ல இக்கப்பல், தாக்குதலின் பின்னர் பாதி கடலில் அமிழ்ந்தபடி மிதந்து கொண்டிருந்தது. இதன் பெறுமதி 15 கோடி ரூபாவாகும்.1971 இல் சீனாவிடம் இருந்து வாங்கப்பட்ட மற்றையகப்பலான 'சூரயா', சங்காய்–2 வகைபீரங்கிக்கப்பல்.127'.3",17.'7",5'.2" கொள்ளளவும் 29 நொட் வேகமும் 131 தொன் எடையும் உள்ளது. 37 மி.மீ, 25 மி.மீ இரட்டைத்துப்பாக்கிகள் இவ்விரண்டு பொருத்தப்பட்ட இப் பீரங்கிக் கப்பலில் 34 கடற்படையினர் பயணம்செய்யமுடியும். 2400 குதிரை வலுவுடைய இக்கப்பல் தாக்குதலில் முற்றாகமூழ்கிவிட்டது.

இவ்விரண்டு கப்பல்களும் ஆனையிறவு முகாம் மீது விடுதலைப்புலிகள்தொடுத்த ஆகாய, கடல் வெளித் தாக்குதலின் பொழுது, வெற்றிலைக்கேணிக்கு விரைந்து சிறீலங்கா படையினர்க்கு உதவியவை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தியகடற்கரும்புலிக்குழுவினர் புலோயன் விசேட நீரடி நீச்சல் குழுவினையும், அங்கயற்கண்ணி விசேட நீரடி நீச்சல் குழுவினையும் சேர்ந்தவர்களாவர். 1986 இல் காரைநகர் கடற்படை தளத்தில் நின்றகப்பல் மீது வெடிகுண்டு தாக்குதல் நடத்த முயன்று வீரச்சாவடைந்த புலோயன் பெயரில், 1994இல் 'புலோயன் விசேட நீரடி நீச்சல் குழு' தொடங்கப்பட்டது. கடந்த ஆண்டு காங்கேசன்துறை கடற்பரப்பில் சிறீலங்கா கப்பலை அழித்த அங்கயற்கண்ணி நினைவாக, 'அங்கயற்கண்ணி விசேட நீரடி நீச்சல் பிரிவு' தொடங்கப்பட்டது.

கப்பல்கள் தகர்ப்பின் போது வீரச்சாவைத் தழுவிய நான்கு கடற்கரும்புலிகளின் நினைவு ஊர்தி ஊர்வலம் வவுனியாவில் 26.04.95 வியாழக்கிழமை நடைபெற்றது. இவ்வேளையில் பெருந்திரளான மக்கள் வீரவணக்கம் செலுத்தினர் எனத் தமிழீழச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில், வீரச்சாவடைந்த கடற்கரும்புலிகளான மேஜர் கதிரவன், மேஜர் மதுசா ஆகியோரின் நினைவுக்கற்கள் நாட்டப்பட்ட போதும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் வன்னி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் நீகன் தலைமையில்நடைபெற்றஅஞ்சலிக் கூட்டத்தில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதிசூசை,தமிழீழஅரசியற்துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன், வன்னிமாவட்ட கரும்புலிகள் மகளிர் பிரிவுத் தளபதி மாதவி ஆகியோர் கலந்துஉரைநிகழ்த்தினர்.

# அராலித்துறையில்...

விடுதலைப்புலிகள் இடைமறித்துத் தாக்கியதில் மேலும் 17 படையினர் கொல்லப்பட்டனர்.
கைப்பற்றப்பட்ட பலவிதமான ஆயுதங்களுடன் விடுதலைப்புலிகள் தமதுமுகாமுக்குத்திரும்பினர்.

# மூன்று பிரிகேடியர்கள் மீது இராணுவ சதி விசாரணை

கடந்த பொதுத்தேர்தல் சமயத்தில் இராணுவச் சதிப்புரட்சி ஒன்றை மேற்கொள்ள இருந்தமை தொடர்பாக இராணுவத்தைச் சேர்ந்த மூன்று பிரிகேடியர்கள்விசாரிக்கப்படவுள்ளனர். இதேசமயம், முன்னாள் இராணுவத் தளபதி சிசிலிடமும் தற்போதைய இராணுவத் தளபதி ஜெரி டீ சில்வாவிடமும் மற்றும் இராணுவத் தலைமைஅதிகாரிலக்கிஅல்கமவிடமும் வாக்குமூலம் பெறப்பட்டதாகவும் தெரியவருகின்றது.
கடந்த பொதுத்தேர்தலின்போது இராணுவத்தளபதிலெப்.ஜெனரல்சிசில் வைத்தியரட்ணா மற்றும் இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம ஆகியோர் இராணுவச்சதி ஒன்றிற்குத் திட்டமிட்டதாகச் செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே. இச்சதியின்போது அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் கமில்டன் வனசிங்காவையும் இராணுவத் தளபதி ஜெரி டீ சில்வாவையும் கொல்லத்திட்டம் தீட்டப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.
இவ்ராணுவச்சதி குறித்து நடைபெறும் விசாரணை தொடர்பாகவே மூன்று பிரிகேடியர்கள் விசாரணை செய்யப்படவுள்ளனர்.

# 16 மணி நேரத்துள்....

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

நிறுவனத்தைச் சேர்ந்த 3 சிங்கள பத்திரிகையாளர்களுமாக மொத்தம் 52 பேர் பயணித்ததாகச் சிறீலங்கா அறிவித்துள்ளது.

**பலியானவர்களின்உடல்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைப்பு**

இரண்டாம் நாள் பலியாகிய 52 பேர்களினதும்உடல்கள்விடுதலைப் புலிகளினால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன. முன்னாள் விமானப் படைத்தளபதி கரிகுணத்திலகாவின் மகனே, வெடித்துச் சிதறிய விமானத்தின் விமான ஓட்டி எனவும் அறியப்படுகின்றது. இவ்விமானத் தாக்குதலை சர்வதேச செய்தி முகவர்களும்உறுதிசெய்துள்ளனர்.

**வடதமிழீழ வான்வெளி வெறிச்சோடியது**

இரண்டு பாரிய விமானங்களையும் நூற்றுக்கு மேற்பட்ட படையினரையும் இழந்த சிறீலங்கா அரசு, வடபகுதிக்கு விமானங்களை அனுப்பாமையினால் வடபகுதி வான்வெளியில்விமானங்கள்எதுவும் பறக்கவில்லை எனவும், வானம் வெறிச்சோடி காணப்பட்டதாகவும் தமிழீழச் செய்திகள் தெரிவிக்கின்றன. விமானம் விழுந்து நொருங்கிய பிரதேசத்தை தமிழீழ மக்கள் திரள்திரளாகச் சென்று பார்வையிட்டதாகவும் அறியப்படுகின்றது. விமானத் தாக்குதலுக்குப்பின், பலாலி முகாமில் இருந்து புத்தூர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் 3 பொதுமக்கள்காயமடைந்தனர்.

**சிறீலங்காவின் பாதுகாப்பு உயர்மட்டம் அவசரமாகக்கூடியது**

இவ்விரு விமான அழிப்புகளையும் அடுத்து சிறீலங்காவின் பாதுகாப்புக்கான உயர்மட்டம் அவசர அவசரமாகக் கூடியது. அம்மாநாட்டில் விமானத் தாக்குதல் சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட்டது. விடுதலைப் புலிகள் எந்த நாட்டிலிருந்து, எவ்வளவு ஏவுகணைகளைக் கொள்வனவு செய்திருக்கக் கூடுமென்ற விடயமே இம் மாநாட்டில் முக்கியத்துவம் பெற்றதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

**தமிழீழமெங்கும் மக்கள் மகிழ்ச்சிஆரவாரம்**

தமது உயிர்களைக் கண்மூடித்தனமாகப் பலியெடுத்துவரும் சிறீலங்கா விமானப்படையினருக்கு, விடுதலைப் புலிகள் தகுந்த தண்டனை வழங்க ஆரம்பித்துள்ள இவ்வரலாற்றுச் சாதனையை, தமிழீழமெங்கும் மக்கள் பெருமகிழ்ச்சிகொண்டு கூடி ஆரவாரித்து மகிழ்ந்துள்ளார்கள். நேற்று, சிறீலங்காக் கடற்படையினரின் வெறித்தனத்திற்கு எதிராக விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்: இன்று, சிறீலங்கா விமானங்களின் தாக்குதலுக்கு எதிராக விடுதலைப் புலிகளின்விமானஎதிர்ப்புஅணியினர்: நாளை....?

# அச்சுவேலியில்...

முதலாம்பக்கத்தொடர்ச்சி

டாங்கிகள்,கனரகவாகனங்கள்சகிதம் முன்னேறிய இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சுமார் நாலரை மணி நேரம் பெரும் மோதல்கள் நடந்தன. இவ்விராணுவ நகர்வின் போது, சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான "புக்காரா" விமானம் ஒன்றும், "உலங்குவானூர்தி" ஒன்றும் இராணுவத்திற்கு உதவியாகத் தாக்குதலில் ஈடுபட்டன. இருந்தும் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொக்க முடியாத இராணுவம் தொடர்ந்தும் முன்னேற முடியாத நிலையில் இழப்புக்களுடன் முகாமுக்குத் திரும்பியது. இந்நடவடிக்கையில் பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் ஈடுபட்டதோடு டாங்கிகளும், விமானங்களும் பொது மக்களின் குடியிருப்புக்களின் மீது குண்டு வீச்சுக்களை நடாத்தியுள்ளன. இராணுவ முகாம்களிலிருந்து ஏறிகணைவீச்சுக்களும்நடாத்தப்பட்டன.

இத்தரைநகர்வின் போது கதிரிப்பாய், அச்சுவேலிப் பகுதிகளில் மக்கள் குடியிருப்புகள் மீது விமானங்கள் மூலம் நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலால் பல கட்டடங்களும் வீடுகளும் சேதமடைந்தன. இது பற்றிய சேதவிபரங்கள் அறியப்படவில்லை. இத்தாக்குதலினால் கதிரிப்பாய், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி மேற்கு ஆகிய இடங்களில் வசித்து வந்த 5000 க்கு மேற்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறியுள்ளனர். இடம் பெயர்ந்த மக்கள் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி,மிசற்மருத்துவமனை,அரசமருத்துவமனை, அங்கிலிக்கன் பாடசாலை,தபால் கந்தோர், சனசமூக நிலையங்கள், வர்த்தக நிலையக்கட்டங்கள், வீதியோர மரநிழல்கள் ஆகிய இடங்களிலும், ஆவரங்கால் சிவன் கோயிலிலும் தஞ்சமடைந்துள்ளனர். காலை 10.30 மணியளவில் தாக்குதல் முடிவடைந்ததைத் தொடர்ந்து இடம் பெயர்ந்த பெரும்பாலான மக்கள் தமது சொந்த இடங்களுக்குத்திரும்பியுள்ளன்.
முன்னேற்ற முயற்சியின் தோல்வி காரணமாக பலாலி முகாமிலிருந்துமோதல் நடந்த பகுதியை நோக்கிப் பலத்த எறிகணைத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. படையினர்மேற்கொண்டஎறிகணை வீச்சுக்காளால் அச்சுவேலிப் பகுதிகளில் பொதுமக்களின் ஆறு வீடுகளும் கதிரிப்பாய் வீரபத்திரர் கோயிலும் சேதமடைந்துள்ளன.
படையினரின்இம்முன்னேற்றமுயற்சி மட்டுப்படுத்தப்பட்டதொன்று என்றே பாதுகாப்புஅமைச்சு அறிவித்தது.

# இராணுவ நலன் சார்ந்த...

திட்டமாகும்.

அடுத்து முக்கிய அம்சமாகவும் பெரும் சர்ச்சைக்குரியதாகவும் உள்ள விடயம் யாழ்–குடாநாட்டிற்கான பாதை திறப்பு விடயமாகும். இவ்விடயம் யாழ்–குடாநாட்டின் இராணுவ முற்றுகையுடனான தந்திரோபாயத்துடன் தொடர்புபட்டதாகும். இதில் அரசாங்கம் விட்டுக்கொடுப்பிற்குத் தயாராக இருக்கவில்லை.

இதனால்இவ்விடயத்தில்அரசாங்கம் புலிகளுக்கு எதிரான பிரசாரத்தில் முனைப்பாக உள்ளது. ஆனையிறவுப் பாதையும்பூநகரிப் பாதையும் போக்குவரத்திற்குத் திறந்துவிடப்பட்டுள்ளதாக அரசாங்கம் பிரசாரம் செய்யமுற்பட்டது.
இதில் இவ்வரசாங்கத்தின் சாதனைகள் என புதிதாக எதுவுமே இல்லை. கடந்த ஐ.தே.க அரசும் அதற்குத் தயாராகவே இருந்தது– இவ்வாறு பிரசாரமும் செய்தது– ஆனையிறவைத் திறந்துவிட எப்பொழுதும் தயாராக இருந்த அரசாங்கம்,பூநகரிகுறித்துப்பேசவும் தயாராகவேஇருந்தது.

ஆகையினால் பொ. ஐ. முன்னணி அரசாங்கம்ஆனையிறவுப்பாதையும் பூநகரிப்பாதையும் திறந்து விடப்பட்டுள்ளது எனப் பிரசாரம் செய்வதில் அர்த்தமில்லை. தமிழ் மக்களின் விருப்பத்திற்கேற்பவும் புலிகளின் கோரிக்கைக்கேற்பவும் பூநகரியில் இருந்து இராணுவ முகாம் அகற்ற அரசாங்கம் தயாராக இல்லை. மாறாக இராணுவத் தரப்பிற்கு இம்முகாம்கள் அகற்றப்படமாட்டாது என உறுதி அளித்துள்ளது. இதன் காரணமாக பாதை திறப்பு விவகாரத்தில் அரசாங்கம் தனது முடிவுகளை இராணுவநலன் சார்ந்ததாக எடுத்துக் கொண்டுள்ளது என்றேகூறலாம்.

அடுத்த அம்சமான கிழக்கில் புலிகள் ஆயுதங்களுடன்நடமாடுதல்என்பது குறித்தும் அரசாங்கம் தெளிவானதொரு முடிவையே கொண்டிருந்தது. கிழக்கில் புலிகளை ஆயுதங்களுடன் நடமாட அனுமதிப்பதில்லை என்ற இராணுவத்தின் முடிவானது அரசாங்கத்தின் தீர்மானமே.
இவ்வாறாக, விடுதலைப்புலிகள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை இராணுவ நலன் பேணும் வகையில் முன்வைக்கப்பட்டவை என தெளிவாக அவதானிக்கப்பட்டதன் விளைவே, விடுதலைப் புலிகளால் சமாதான முயற்சிகளுக்கான காலக்கெடு ஒன்றை அரசாங்கத்திற்கு முன் வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியதாக உணரக்கூடியதாக உள்ளது.

அதாவது இராணுவ நலனுடன் மட்டும்சிந்திக்கும்அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படுவதில் அர்த்தம் ஏதாவது உண்டா? என எழுந்த வினாவே

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறீலங்கா இராணுவ உயர்மட்ட மோதல்கள்
# “ஆட்டிகலவிலிருந்து ஜெரிடிசில்வா வரை”

இதுவரை காலமும் பாதுகாப்பு அமைச்சின் மாநாட்டு மண்டபத்தின் நான்கு சுவர்களுக்குள் மட்டுமிருந்த பல விடயங்கள் இன்று வெளிவரத் தொடங்கியுள்ளன. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்த ஜெனரல் சிறில் ரணதுங்காவின் ராஜினாமா தொட்டு ஜெனரல் கமில்டன் வனசிங்காவின் ராஜினாமா வரையில், உள்வீட்டு விவகாரமாயிருந்த பூசல்களும் அவற்றின் பின்னணிகளும் வெளிச்சத்துக்கு வரத்தொடங்கியுள்ளன.

ஆயுதக்கொள்வனவுகள், போரின் போக்கு, படையினரும் அரசியலும், புலிகள் மீதான தாக்குதல்களின் தீவிரம் என இன்னோரன்ன வகைகளில் ஐந்து தளபதிகள் கருத்து முரண்பாடு களுக்குள் மூழ்கிக்கிடந்தனர்.

சேபால ஆட்டிகல, சிறில் ரணதுங்கா, டென்சில் கொப்பேகடுவ, கமில்டன் வனசிங்கா, சிசில் வைத்தியரட்னா


ஜெரி டி சில்வா

ஆகிய இந்த இராணுவ உயர் தளபதிகள், வடக்கிலும் கிழக்கிலும் போர்க் களத்தின் தீவிரத்தைப் போன்றதொரு நிலையைக் கொழும்பின் உயர் இராணுவ நிலைகளில் உருவாக்கினர் என்றே அவதானிகள்கூறுகின்றனர்.

எப்போது கொழும்பிலிருந்து இடமாற்றஉத்தரவு,பதவியுயர்வுடன் வந்துசேரும்என்றேஇவர்கள்போர்க் களங்களிலிருந்து சிந்தித்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இத்தகைய சூழ்நிலையைத் தொடக்கிவைத்தவர்களில் சேபால ஆட்டிகல முதன்மையானவராவார். சேபால ஆட்டிக்கல இராணுவத் தளபதியாக இருந்தபோதே அக்கதிரைக்கு உரித்தானவராகத் தனது வாரிசாக சிறில் ரணதுங்காவை வளர்த்து வந்தமை இன்றும் சிறீலங்கா இராணுவ வட்டாரங்களில் நினைவு கூரப்படுகின்றது.

சேபால ஆட்டிகல பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த போது இராணுவத்தில் இருந்த குறிப்பிட்ட சிலரை பிரிகேடியர் தரத்திலிருந்து ஒருபடி மேலே உயர்த்திக் கூட்டுநடவடிக்கைக் குழு ஒன்றையும் தொடங்கிவைத்தார். வடக்கு – கிழக்கில் இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு மிகப்பெரும் பங்கொன்றை இக்கூட்டுப் படைக்குழு வகிக்கவும் தொடங்கியது. இதன் தலைவராகத் சிறில் ரணதுங்காவே நியமிக்கப்பட்டதும்கவனிக்கத்தக்கது.

கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் – படை நடவடிக்கைகளில் முதன்மை இடம்பெறத் தொடங்கியதும் – இராணுவ உயர் தளபதிகளின் பதவிப்போட்டியும் இதனை மையமாக வைத்தே வளரத் தொடங்கியது. கூட்டுப்படைத் தலைமையலுவலகத் தலைவராக இருப்பவர் முப்படைத் தளபதிகளையும் கட்டுப்படுத்தக்கூடியவராக மாற்றப்பட்ட வுடன், இந்நிலைமை இன்னும்இறுகவேசெய்தது.

இப்படியான அதிகார இழுபறி நிலையில் சேபால ஆட்டிகல பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார். அவருக்குப்பின் சிறில் ரணதுங்கா அப்பதவிக்கு வருவதற்குப் பெரிதாகத் தடைகளேதும் இருக்கவில்லை.

இந்திய இராணுவம் இங்குவரத் தொடங்கிய காலத்தில் கூட்டுப்படைத் தலைமையகம் கலைக்கப்பட்டே இருந்தது. தேவையானபோது, தேவையானவர்களுக்குப் பதவி வழங்குவதற்காகக் கூட்டுப்படைத்தலைமையகம் உருவாக்கப் பட்டும்பின் கலைக்கப்படுவதுமான வரலாறே சிறீலங்காப் படைத்துறை உயர்பீடத்தில் இன்றுவரைநிலவிவருகிறது.

இந்தவகையில் தெற்கில் ஜே. வி. பி. கிளர்ச்சி உச்சநிலையை அடைந்தபோது, கூட்டுப்படைத் தலைமையகம் மீண்டும் உருவாக்கப்பட்டது. உண்மையில் அவ்வாறுகூட்டுப்படைத்தலைமையகம் உருவாக்கப்பட்டமைக்கு வேறு ஒரு காரணமே கூறப்படுகின்றது. அதாவது தனக்கு நெருங்கியவரான சிசில் வைத்தியரட்னாவை இராணுவத் தளபதியாக்குவதற்காக அப்போது இராணுவத் தளபதியாகவிருந்த கமில்டன் வனசிங்கா கூட்டுப்படைத் தலைமை அதிகாரியாகப் பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்டார் என்றே அரசியல் வட்டாரங்கள் கூறிவந்தமைகுறிப்பிடத்தக்கது.

சிறீலங்கா இராணுவத் தளபதியாக இருப்பவர் கூட்டுப்படைத் தலைமை அதிகாரி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்றவாறு பதவியுயர்வு பெற்றுச்செல்லும் வழக்கம் உறுதியானதும் இக்காலத்தில்தான் என்று கூறப்படுகின்றது.

கொழும்பில் இவ்வாறு பதவி மாற்றங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது – வடக்கின் போர்க் களத்தில் டென்சில் கொப்பேக்கடுவ ஆர்வமுடையவராக இருந்ததனால், அவரது பெயர் இப்பதவிகளுக்கு மனுச்செய்யப்படாமல் இருந்தது. ஆனால், டென்சில் கொப்பேகடுவவின் கீழே பணிபுரிந்த பல அதிகாரிகள் அவரே இராணுவத் தளபதியாகுவதற்கு தகுதியானவர் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். இராணுவத்தின் கீழ் மட்டத்தில் பரவலாக டென்சில் ஆதரவைப் பெற்றிருந்தாலும் கொழும்பிலுள்ள உயர் இராணுவ அதிகாரிகளால் அவர் புறக்கணிக்கப்பட்டேவந்தார்.

1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வடபகுதி இராணுவத் தலைமைப் பதவியிலிருந்து டென்சில் நீக்கப்பட்டதும் இத்தகைய உயரதிகாரிகளினால் மேற்கொள்ள ப்பட்ட நடவடிக்கை களில் ஒன்றாகும். இவ்விடயம் டென்சில் கொப்பேகடுவ கொலை விசாரணையிலும் இடம்பெற்றதுகுறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் டென்சில் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாகவும் செய்திகள் வெளிவரத் தொடங்கின. இச்செய்தி வெகுவிரைவில் பிரேம தாசாவின் காதுகளிலும் விழுந்தது. இராணுவ உயர்மட்டத்திலும் டென்சிலின் வளர்ச்சி விரும்பப்படாமல் இருந்ததும் இதனால்தான் எனக் கருதப்படுகிறது.

அராலிக்கண்ணிவெடிச்சம்பவத்தில் டென்சில் கொப்பேகடுவ கொல்லப்பட்டதும் உயர் தளபதிகளுக்கிடையிலான மோதல் மீண்டும் கொழும்பை மையம்கொள்ளத் தொடங்கியது.

பாதுகாப்புஅமைச்சின் செயலாளராக இருந்த சிறில் ரணதுங்காவுக்கும் இராணுவத் தளபதியாகவிருந்த சிசில் வைத்தியரட்ணாவுக்கம் இடையிலான மோதல் கொழும்பின் படை வட்டாரங்களில் பகிரங்கமான இரகசியமாயிற்று. இராணுவத்தை வலுப்படுத்த இன்னும் 10,500 பேரை இராணுவத்தில் சேர்க்கவேண்டும் என சிசில் வைத்தியரட்ணா



பாதுகாப்பு அமைச்சிடம் கேட்டுக்கொண்டார்.

சிசில் வைத்தியரட்ணாவின் இக்கோரிக்கை அவசியமற்ற ஒன்று என சிறில் ரணதுங்கா தீர்மானித்தார். இதனால் இருவரிடையேயும்மோதல் இன்னும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. இந்தக் கட்டங்களில் எல்லாம் கூட்டுப்படைத் தலைமை அதிகாரியான கமில்டன் வனசிங்கா மௌனம்சாதித்துவந்தார்.

இவ்வாறு சிறில் ரணதுங்கா – சிசில் வைத்தியரட்ணா பூசல் கொழுந்துவிட்டு எரியும்போது, பிரேமதாசா கொலையானார். பிரேமதாசாவின் கொலையோடு சிசிலுக்கிருந்த ஆளும் உயர்பீட ஆதரவுமறைந்துபோனது.

மறுபக்கம் சிறில் ரணதுங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்து கொண்டார். ரணதுங்காவின் ராஜினாமாவைத் தொடர்ந்து வைஸ் அட்மிரல் வோல்டர் பெர்னாண்டோ பாதுகாப்பு அமைச்சின் செயலாளரானார்.

வோல்டர் பெர்னாண்டோவின் காலத்தில் 1993 யூலை 25 ஆம் நாள் புலிகள் மணலாற்றில் மண்கிண்டிமலை இராணுவமுகாம்மீதுநடத்திய தாக்குதல்அவருக்கும்நெருக்குதல் களைஉண்டாக்கியது.

இக்கட்டத்தில் சனாதிபதி டி. பி. விஜேதுங்கா முப்படைத் தளபதிகளைக்கொண்ட மாநாடு ஒன்றைக்கூட்டினார்.

இம்மாநாடு உயர்படைத்துறைத் தளபதிகளுக்கிடையிலான பூசலை இன்னும்அதிகரித்தது.

இராணுவத் தளபதியான சிசில் வைத்தியரட்ண மீது கடுமையான வார்த்தைகளை வீசினார் கமில்டன் வணசிங்க. மண்கிண்டிமலை தாக்குதலின் விளைவுகளின் பொறுப்பை ஒருவர் மற்றவர் மேல் சுமத்திக் கொண்டிருந்ததே இம்மாநாடு முழுமைக்கும் நடந்து கொண்டிருந்தது.

இந்த வாக்குவாதங்களினால் பொறுமை இழந்த டி.பி. விஜேதுங்கவின் கோபம் கமில்டன் வனசிங்கவின் மேல் திரும்பியது. கூட்டுப்படைத் தலைமையகம் கலைக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். வனசிங்க இதனைக் கடுமையாகஎதிர்த்தார்.

ஒன்றில் எனது கட்டளைகளை அமுலாக்க வேண்டும். இல்லை என்றால் நீங்கள் வீட்டுக்குப் போகத் தயாராகுங்கள் – மாநாட்டு மண்டபத்தைவிட்டுக் கோபத்தோடு வெளியேறிய டி.பி விஜேதுங்கவின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளே இவை.

மாநாட்டின் பின்னர் கூட்டுப்படைத் தலைமையகம் கலைக்கப்பட்டது. ஆனால் கமில்டன் படைத்துறையிலிருந்து விலக்கப்பட வில்லை.படைத்துறையின் சிரேஸ்ட அதிகாரி என்ற முறையில் சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சரோடு சம்பந்தப்பட்டவராகவேஅவர்இருந்தார்.

கூட்டுப்படைத் தலைமை கலைக்கப்பட்டவுடன், பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு(Defence Co-ordinating Committee) நிய மிக்கப்பட்டது. வோல்டர் பெணாண்டோதனதுபதவியைவிட்டு விலக்கம்செய்ததால் 06.09.93 தொடக்கம் கமில்டன் பாதுகாப்பு அமைச்சின்செயலாளரானார்.

சிறீலங்கா இராணுவத்தைப் பொறுத்தவரை – பின்பற்றப்படும் ஒரு மரபுக்கிணங்க ரணதுங்க பிரிட்டனுக்கு தூதுவராக நாடுகடத்தப்பட்டார். அதுவரை காலமும் பிரிட்டனில் தூதராக இருந்த சேபால ஆட்டிகல கொழும்புக்கு வரவழைக்கப்பட்டு சனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகராகநியமிக்கப்பட்டார்.

எயர்லங்கா நிறுவனத்தின் தலைவர் பதவியும் அவருக்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில் வடக்கு–கிழக்கில் சிறீலங்கா இராணுவத்தினர் தளர்ச்சியைப் போக்க– 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை திட்டமிடப்பட்டது.

சேபால ஆட்டிக்கல, கமில்டன் வனசிங்க இணைந்து தயாரித்த இத்திட்டத்தைச் செயற்படுத்த, சிசில் வைத்தியரட்ண தலைமை தாங்கி நடத்தினார்.

தொடக்கத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்ட இந்நடவடிக்கை படுதோல்வியில் முடிந்த விடயம் வெளிவந்தது. அதனைச் சுட்டிக்காட்டிய செய்தித்தாளர் இக்பால் அத்தாசுக்கு மலர்வளையமும் மரண



அச்சுறுத்தலும்தரப்பட்டது.

இதன்பின் சிசில் வைத்தியரட்ணாவின் நிலை மேலும் சிரமத்திற்குள்ளானது. பல தரப்பிலிருந்தும் அவருக்கு எதிராக எதிர்ப்புக்கள்கிளம்பின.

இந்த எதிர்ப்புக்கள் தணிய முன்பே பூநகரியில் – புலிகளால் மேற்கொள்ளப்பட்ட 'தவளைத் தாக்குதல்' சிசிலை பதவி விலகச் செய்தது.

இதன்பின் இராணுவத் தளபதி பதவியை ஜெரிடீ சில்வா ஏற்றார். வைத்தியரட்ணா தாய்லாந்தின் தூதுவராகநாடுகடத்தப்பட்டார்.

கமில்டன் வனசிங்காவின் நெருங்கிய நண்பரான ஜெரிடீசில்வாஇராணுவத் தளபதியாக பதவியேற்றதன் மூலம் உயர் இராணுவ தளபதிகளுக்கிடையிலான மோதல் தணிந்து போகும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அரசியல் களம் மாறிச் சென்றதால்கமில்டனின்மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் – அவரது பாதுகாப்பு அமைச்சு செயலாளர் என்ற பதவிக்கு ஆபத்தைத் தந்து கொண்டிருந்தது.

இராணுவத் தலைமை அதிகாரியாக இருந்த லக்கி அல்கமவுக்கும் கமில்டனுக்கும் இடையிலான பூசல் கொழும்பில் வேறொரு போர்க்களத்தைஏற்படுத்தியது.

லக்கி அல்கம அரசைக் கவிழ்க்க செய்த சதியில்,ஜெரி.டீசில்வாவுக்கும் கமில்டனுக்கும் குறி வைக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகின.

இதையடுத்து மீண்டும் உயர்தளபதிகள்போர்சூடுபிடித்தது. ஆயுதக் கொள்வனவு ஊழல்களால் இன்று கமில்டனும் வெளியேற்றப்பட்டுவிட்டார்.

ஆயினும் உயர்தளபதிகளுக்கிடையிலான மோதல் லக்கி அல்கமவிற்கும் ஜெரிக்கும் இடையில் தொடருவதை காணமுடிவதானது இராணுவத்தின் தொடர் நிகழ்ச்சியாகவே உயர்தளபதிகள் மோதல் இருப்பதை உறுதிப்படுத்துகிறது.

நன்றி:லங்காதீப
தொகுப்பு:நிமலராஜன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறு கதை

# பயன் தரு மாமரங்கள்

தமிழீழ வரலாற்றின் முக்கியத்துவம் வாய்ந்த பூநகரிச்சமர் தொடங்கிய மறுநாட்காலை இருளகலா அந்த வேளையில் வாகனம் ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. வாகனத்தின் உள்ளே... களத்தில் விழுப்புண் ஏற்ற போராளிகள் முதலுதவி அளிக்கப்பட்ட நிலையில் மேலதிக வைத்திய சேவையை நாடி, கொண்டு செல்லப்படுகின்றனர்.

அவர்களது முகங்களிலோ வேதனையின் சாயல் படர்ந்திருக்கிறது. அது அவர்களது உடலில் ஏற்பட்ட விழுப்புண்கள் தோற்றுவித்த வேதனையல்ல என்பதை அவர்களில் சிலரது வாய்மொழிகள் பறைசாற்றிக் கொண்டிருந்தன. அப்படியானால்... அவர்களது வேதனைக்குக் காரணம்?... களத்தை விட்டுப் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறோமே, எதிரியின் ஆயுதங்களை வாரி அள்ளும் போது கிடைக்கும் அந்த இன்ப ஸ்பரிசம் கிடைக்காமற் போயிற்றே என்ற ஆதங்கம் அவர்களுக்கு அதிக வேதனையைத்தந்துகொண்டிருக்கிறது.

வாகனம்வைத்தியசாலைமுன்றலில் நுழைந்ததுதான் தாமதம், அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த அனைவரது ஒத்துழைப்புடனும் துரித கதியில் உயிர்காக்கும் பணி அங்கு தொடர்கிறது. அவசர அவசரமாகச் சத்திர சிகிச்சைக்குரிய ஆயத்தங்கள் செய்யப்பட்டு நோயாளர்கள் சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு ஆனுப்பி வைக்கப்படுகிறார்கள். அங்கே அறுவைச் சிகிச்சை முடிந்ததும் உடனுக்குடன் நோயாளர் தங்கும் பகுதிக்கு மாற்றப்படுகிறார்கள். அப்படி மாற்றப்பட்ட நோயாளர்களில் ஒருவனாய் தாக்குதற் பிரிவு அணி ஒன்றின் பொறுப்பாளனானலியோ, பின் கழுத்தில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டு மயக்க நிலையில் கிடந்தான். இந்தப்பகுதிக்கு பொறுப்பானவர்கள் அடிக்கடி வந்து அவனது நாடித்துடிப்பு, இரத்த அமுக்கம் முதலியவற்றைப் பரிசீலிக்கிறார்கள். அவனைப் பராமரிப்பதற்கென அருகில் நின்றிருந்த ராஜன் அவனது அங்க அசைவுகளையே கவனித்தவாறிருந்தான்.

லியோவின் தலை சிறிது அசைவதைக் கண்ணுற்ற ராஜன் அவனது முகத்தை நோக்கிக் குனிந்தான். அவனது வாயிலிருந்து வார்த்தைகள் ஈனஸ்வரத்தில் வெளிப்பட்டன.

"என்ரைஎவ்.என்.சிளங்கை"

மயக்க நிலையிலும் தனது ஆயுதத்தைப்பற்றியே சிந்தித்திருக்கும்அந்த உன்னத இலட்சியவாதியைக் கண்டு ராஜனது மேனி ஒரு கணம் சிலிர்த்தது. அவனுக்கு ஆறுதல் தரும் நோக்கத்துடன் மெதுவாக அவனது தலையைத் தடவியவன்கூறினான்:

"மச்சான் லியோ! உன்ரை எவ். என். சியை நான்தான் எடுத்துப் பக்குவமாய் வைச்சிருக்கிறன். உன்ரை கழுத்தில சின்னக்காயம் பட்டுமருந்து கட்டியிருக்கினம். நீ தலையை அசைக்காமல் பேசாமல் படுத்திருஎன்ன?"

ராஜனின் வார்த்தைகள் லியோவிற்கு எரிச்சலை ஏற்படுத்தியது. மெதுவாகக்கண்களைத்திறந்து சூழலை அவதானித்தவன், தான் வைத்தியசாலைக் கட்டிலில் கிடப்பதை ஒரு நொடியில்புரிந்து கொண்டான்.

"சின்னக்காயமெண்டால்மருந்தைக் கட்டிப் போட்டு அடிபடவிடாமல் என்னை ஆர் இஞ்சை கொண்டந்தது?"

"மச்சான்! நீ மயங்கிப் போனாய் பேந்தென்னெண்டுஅடிபடுகிறது?"

லியோவின் எண்ணத்தில் சிறிது சிறிதாகமுன்னையநாளில்நடந்தகள நிகழ்வுகள் நிழலாகத் தோன்றி மறைந்தன.

"என்ரை பெடியங்கள் எல்லாம் பிரச்சினையில்லாமல் வந்திட்டாங்களே? ஆயுதங்களைக் 'கிளியர்' பண்ணிக் கொண்டிருந்தவங்கள். அப்பதான் எனக்குக் காயம் பட்டிருக்கவேணும்"

"ஓ... எல்லாரும் வந்திட்டினம். நீ அலட்டாமல் கொஞ்ச நேரம் படுத்திரு பாப்பம். வைத்தியர் உன்னைப் படுக்கையை விட்டு எழும்பக்கூடாதெண்டுசொன்னவர்"

தலையை நிமிர்த்தி எழும்ப முயன்றவனை ராஜன் தனது கைகளினால் அமர்த்திப் பிடித்துக் கொண்டான். கால்களை அசைத்துப் பார்த்த லியோ அவை இயங்க மறுத்த போது ஆத்திரத்துடன்கத்தினான்.

"டேய்! என்ரை காலை ஏன் கட்டி வைச்சிருக்கிறியள்"

தாதி ஒருவர் அருகே வந்தபோது லியோ அமைதியைத் தழுவிக் கொண்டான். அவனது கையில் ஊசி மருந்தை ஏற்றிவிட்டு தாதி அப்பால் போனதும், மீண்டும் லியோவின் புலம்பல் அந்த அறையை அதிரவைத்தது. சிறிது சிறிதாக அவனது புலம்பலின் தொனி குறைந்து சற்று நேரத்தில் அவன் நித்திரையில்மூழ்கிப்போனான்.

இரத்மலானை விமானத் தளத்தை நோக்கிப் பதிகிறது ஓர் உலங்கு வானூர்தி. தரையிறங்கிய வானூர்தியை நோக்கிச் சிப்பாய்கள் 'ஸ்ரெச்சர்' சகிதம் விரைகிறார்கள். மயங்கிய நிலையில் இருந்த பூநகரிக் கூட்டுப் படைத்தளத்தின் அதிகாரியை 'ஸ்ரெச்சர்' சுமந்து வருகிறது. அங்கு தயாராக இருந்த 'அம்புலன்ஸ்' வண்டியில் அவரை ஏற்றுகின்றனர். வேறும் சில காயமுற்ற சிப்பாய்களை ஏற்றிக்கொண்டு அந்த வண்டி ஒலி எழுப்பியவாறு மின்னல் வேகத்தில் பறக்கிறது.

முன்னரேகிடைத்த தகவலின்படி சிறீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் மருத்துவர்கள் 'அம்புலன்ஸ்' வருகைக்காகக் காத்திருந்தனர். வண்டி வந்ததும் அங்கே துரித கதியில் கருமங்கள் நடைபெறுகின்றன. அவசர அவசரமாக மருத்துவர்கள் அந்த அதிகாரியின் உடல் நிலையைப் பரிசோதித்துவிட்டு சத்திரசிகிச்சைக்கான ஆயத்தங்களில்ஈடுபடுகின்றார்கள்.

நரம்பியல் நிபுணரான வைத்தியர் சிவசங்கரன் வீட்டில் தொலைபேசி மணி கிணுகிணுக்கிறது. தனதுஒரே மகனின் பிறந்தநாள் விருந்தில் களிப்புற்றிருந்த சிவசங்கரன் தொலைபேசியைக் கையிலெடுக்கிறார். கடமையின் அழைப்பு அவரைஉசாராக்கிறது.

"ஐ வில் பி தெயர் பைவ் மினிற்ஸ். ஓ. கே!"

சொல்லியவாறே தொலைபேசியைக் கீழேவைக்கிறார். இத்தனைநேரமும் அவரை அவதானித்துக்கொண்டிருந்த அவரது மனைவியின் முகம் களையிழந்துபோகிறது. தந்தையின் கார் வீட்டின் எல்லையைத் தாண்டிப் போய்க் கொண்டிருப்பதை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த அவரது மகனை நண்பர்கள் சிலர் குறும்பு பேசி அங்கே கலகலப்பினை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள்.

சிறீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடத்தில் தொடர்ந்து மூன்று மணித்தியாலங்கள் அறுவைச் சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது. அங்கே வைத்தியர் சிவா முன்னின்று நெறிப்படுத்திச் சத்திர சிகிச்சையைக்கையாளுகின்றார்.

நீண்ட நேரப் பகீரதப் பிரயத்தனத்தின் பின்னர், வைத்தியர் சிவாவின் உதவியாளர்கள் அந்த அதிகாரியின் மண்டையை மூடிக்கட்டுப் போடுகிறார்கள். வைத்தியர்சிவாவின் முகத்தில் நம்பிக்கையின் ஒளி படருகிறது. அவரது வாய் முணுமுணுக்கிறது.

"கிறேட்சக்சஸ்"

கைகளைத் தண்ணீரில் கழுவிக் கொண்டவர் கையுறைகளைக் கழற்றிவிட்டுத் துடைத்துக் கொள்ளுகிறார். அவரை நோக்கி நீண்ட கைகளை பற்றிக் குலுக்கிறார்.

"வெல்டன்சிவா"

"மார்வலஸ்விக்ரறி"

"யூஆர்கிரேட்"

பாராட்டுக்கள் அவரை நெகிழ வைக்கின்றன. புகழ்ச்சியினால் ஏற்பட்ட பரவசம் அவரை மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்க வைக்கிறது.

யாழ் போதனா வைத்தியசாலை. வெளி நோயாளர் பிரிவு. கிளினிக் நடந்து கொண்டிருக்கிறது. இங்கு வரிசையாக போடப்பட்டிருந்த வாங்கு ஒன்றில் சிவசம்பு நெருங்கியவாறு அமர்ந்திருக்கிறார். இரத்த அழுத்த நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் அவரைப்பற்றிய மருத்துவக் குறிப்புக்கள் அடங்கிய அப்பியாசக் கொப்பி ஒன்று அவரது கையில் இருக்கிறது. ஒவ்வொருவராக நோயாளர்கள் வைத்தியரின் அறைக்குப் போய்த் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். தனது முறை வரும்வரையும் அவர் அங்கு காத்திருக்கிறார். அவரது பார்வைசட்டெனத்திரும்புகிறது.

சக்கர நாற்காலியில் வைத்து ஒரு இளைஞனைத் தள்ளிக் கொண்டு வருகின்றார்கள். அந்த இளைஞனையே வைத்த கண் வாங்காது அவர் பார்த்துக் கொண்டிருந்தார். நல்ல வாட்டசாட்டமான முகம் அரும்பு மீசை வேறு. திடகாத்திரமான தேகத்தையுடைய அவனது கால்களை ஒரு தரம் உன்னிப்பாக ஆராய்ந்தார். அதில் எதுவிதமான ஊனமிருப்பதாகத் தெரியவில்லை. அப்படியானால்... அவரது மனம் அவனைப் பற்றிய தகவல்களை அறியத்துடிக்கிறது.

அவரது ஆவலைப் புரிந்து கொண்டவராய் அவருக்கருகில் இருந்தவர்விளக்கினார்.

"எனக்கு உந்தப் பெடியனைக் கனநாளாய்த் தெரியும் பாருங்கோ. மட்டக்களப்புப் பெடியன். பூநகரிச் சண்டையில ஒரு எறிகணைத்துண்டு பெடியன்ரை பிடரியில பட்டதாம். அதுக்குப் பிறகுதான் பிள்ளையின்ரை கால் இயங்காமல் போயிட்டுதாம். ம்... நல்ல சூட்டிகையான பெடியன். கொஞ்ச நேரம் ஒரு இடத்தில நிக்கமாட்டான். ஓடிஓடித்திரிவான்.

சொன்னவர் தனது துயரத்தை ஒரு நீண்ட பெருமூச்சாக வெளிப்படுத்தினார்.

"அப்பிடியெண்டால்... கால் இனி இயங்காதோ"

விபரம் புரியாதவராய் சிவசம்பு அவரிடம்கேள்விதொடுத்தார்.

"இஞ்சை நரம்பியல் நிபுணர் ஒருத்தரும் இல்லைப் பாருங்கோ. இருந்திருந்தால் ஒருவேளை உடனேயே 'ஒப்பரேற்' பண்ணி ஏதும் செய்திருக்கலாமென்று நினைக்கிறன்"

நரம்பியல் நிபுணர் என்ற வார்த்தை அவரையறியாமலே அவரது இதயத்தில் புகுந்து அவரை ஒரு உலுப்பு உலுப்பிவிட்டது. அவர் தன்னை ஒருகணம் சுதாகரித்துக் கொள்ளமுற்பட்டபோது...

கீச்!கீச்!

ஒலி எழுப்பியவாறு சக்கர நாற்காலியை உருட்டிக்கொண்டு போனார்கள். அதே இளைஞன் சிரித்தவாறே தன்னுடன் கூட வருபவரிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். அவனது முகத்தைஊடுருவிஅதில்எதையோ தேட முற்பட்டார் சிவசம்பு. அதில் எதுவித சலனத்தையும் அவரால் அவதானிக்க முடியவில்லை. அவனது பார்வையில் ஒரு தீட்சண்யம் தோன்றுவதாக அவருக்குப்பட்டது. அவனது உருவம் போய்மறையும்வரை அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அன்று மாலை வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பிய பின் சிவசம்புவின் மனம் அன்று 'கிளினிக்கில்' சந்தித்த அந்த இளைஞனைப் பற்றிய சிந்தனையில் சிக்கித்தவித்துக் கொண்டிருந்தது. அவரது மனப் புழுக்கத்திற்கேற்ப உடலும் வெயிலின் புழுக்கத்தினால் தவித்தபோது, அவர் சாய்வு நாற்காலியை எடுத்து வந்து மாமரத்தின் கீழ் போட்டு, அதில் சாய்ந்து கொண்டார். அவரது சிந்தனைக் குதிரை தனது வாழ்க்கையின் வாலிபப் பருவத்தை இரைமீட்டு அசை போடத்துவங்கியது.

அப்போது அவருக்கு அந்த இளைஞனை ஒத்த வயதிருக்கும். அவருக்குத் தான், தனது எதிர்கால வாழ்க்கையைப் பற்றி எத்தனை இதமான கனவுகள். தன் முறைப்பெண்ணான சிவகாமியை மணந்து கொண்டதும், எட்டு ஆண்டுகளாகியும் குழந்தைப் பேறில்லாமையால் மனம் நொந்து விரதங்கள் பல அனுட்டித்து, அதன் பலனாக மகவொன்று பிறந்ததும், அந்தக் குழந்தைக்குச் சிவனது நாமத்தையே 'சிவசங்கரன்' என்று சூட்டியதும் குழந்தையின் வளர்ச்சியிலும், மழலை மொழியிலும் தானும் சிவகாமியும் மெய்மறந்து நின்றநாட்களும் அவனை வளர்த்து ஒரு வைத்தியனாகக் கண்டு இன்புற்றதுமாகக் காலத்தின் சுழற்சியில் இன்று தானும் சிவகாமியும் தனித்து விடப்பட்டு விட்டதாக ஒரு பிரமை அவருள் தோன்றியபோது...

'தொப்!'

சத்தங் கேட்டுத் திரும்பிப் பார்த்தார் அவர். அவரது வளர்ப்பு நாயான பப்பி குரைத்துக் கொண்டே வேலியருகில்ஓடி, வேலிக்குக்கீழால் அடுத்த வீட்டைப் பார்த்து உறுமியது. கீழே விழுந்த மாம்பழத்தை எடுப்பதற்காக வேலிக்கருகில் வந்த அடுத்த வீட்டுக்குழந்தைநாய்உறுமியதைக் கண்டு பயந்து "அம்மா!" என்று வீரிட்டலறியவாறுஓடியது.

இதனைக் கண்ணுற்ற சிவசம்புவின்

**காசிலிங்கம்**

மனத்தினுள் ஏதோ ஒன்று உறைத்தது. தான் பாடுபட்டு வளர்த்துவிட்டிருந்த அந்த மாமரம் தனதுகிளைகளில்பெரும்பகுதியை அடுத்த வளவிற்குள் பரப்பிவிட்டிருந்ததை முதன்முறையாக அவர் அவதானித்தார். வெளிச்ச வசதியைத் தேடி அடுத்த வளவிற்குள் கிளைகளைப் பரப்பியதுமல்லாமல், பயனையும் அதுதான் வேரூன்றி இருந்தமண்ணைமறந்துஅயலவர்களுக்கே அளித்துக் கொண்டிருப்பதை அவரது உணர்வு ஜீரணிக்கமறுத்தபோது...

இருதயத்தில் ஏற்பட்ட வலியினால் துடித்துப்போய்த்துவண்டுசரிந்தார் அவர்.

www.tamilarangam.net



# வடமராட்சியில் அன்னைபூபதி நினைவுநாள் கூட்டம்

## -யாழ். அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி உரை

வடமராட்சியில் அன்னை பூபதி நினைவுதினப்பொதுக்கூட்டத்தில்19ம் திகதி யாழ் அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பிரிதி ஆற்றியஉரையின்வருமாறு

சமாதானப் பேச்சில் அரசின் நிலைமாற்றமும் விடுதலைப்புலிகள் கடைப்பிடிக்கும்நிலைப்பாடும்

இன்றைய சூழ்நிலையை வைத்துப் பார்க்கும் போது நாங்கள் ஒரு தெளிவான முடிவுக்கு வரலாமென நினைக்கின்றோம். இன்று மக்களுடைய மனங்களில் சில கேள்விகள் எழும். சமாதானம் நிலைக்குமா? புலிகள் பேச்சைத் தொடர்வார்களா? அமைதி நிலைக்குமா? என்ற கேள்விகள் எமது மக்களிடையே தோன்றும். எங்களுடைய நிலைப்பாடு பற்றி உங்களுக்குத் தெளிவாகத் தெரியும் என்றுநான்நினைக்கின்றேன்.எப்போது எமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதோ அன்று முதல் சமாதானத்தையும் அமைதியையும் தான் நாம் வேண்டி நிற்கின்றோம். எங்களுடைய போராளிகள் வேண்டுவதும் நாங்கள் விரும்புவதும் நிரந்தர அமைதியைத்தான். எமக்கொரு நிரந்தர சுபீட்சம் வேண்டும். சமாதானக் குழுவினர் பலதடவை கொழும்பில் இருந்து வந்தனர். இங்கு வந்து எம்முடன் பேசியபோது நீங்கள் சமாதானத்துக்குப் பங்களிக்க வேண்டும். சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார்கள். நாங்கள் சமாதானத்திற்காகத்தான் நிற்கிறோம். சமாதானத்தை நிரந்தரமாக்க உதவியளிக்கின்றோம். அதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்திக்கொண்டு இருக்கின்றோம். ஆனால் அரசுதான் சமாதானத்தை இழுத்தடிக்கின்றது. அரசு நம்பிக்கையான வழியில் நடக்க மறுக்கின்றது. எனவே அரசின் பக்கம் போய் அரசே முதலில் சமாதான வழியைக் கொண்டு வாருங்கள், எங்களுடைய மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கக் கூடியஒரு நிலைவர அரசிற்கு அழுத்தங்களைக் கொடுங்கள் என்ற கருத்தை நாம் அவர்களிடம் முன் வைத்தோம். புலிகள் சமாதானத்தை மறுத்து நிற்பவர்களா? எமது கடந்த கால வரலாற்றினை எடுத்துப் பாருங்கள். இந்தக் கேள்விக்கான விடையை எதுவித சந்தேகமும் இன்றி தெரிந்து கொள்ளலாம். எமது நிலைப்பாடுகளில் ஒவ்வொரு சந்தப்பங்களிலும் ஒவ்வொரு கட்டத்திலும் நாங்கள் சமாதானத்தின் வழியில்தான் நிற்கின்றோம். ஆனால் எமது சுதந்திரத்தை குழிபறிக்க முற்பட்ட சமயங்களில்அதற்குபலியாகாமல்இந்த வரலாற்றைத்தொடர்கின்றோம்.

எமது போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டு இருக்கின்றோம். இது தான் எமது நிலைப்பாடு. 1994ம் ஆண்டின் நிறைவுகாலத்தில் இருந்து 1995ம் ஆண்டின் ஆரம்ப காலம்வரை பேச்சுக்களில்நாங்கள்கலந்து கொண்டு வந்தோம். ஆனால் எதிரிகள் பலவீனமான நிலையில் உள்ளனர். உங்களுக்குத் தெரியும் யாரும் பலவீனமாகநிலையில்சமாதானத்தைப் பேசும் சூழ்நிலை இருக்காது. ஆனால் அப்படியான நிலையிலும் சமாதானச் சூழல் தோன்ற வேண்டும், அந்த சமாதானச் சூழல் தோன்றுவதற்கான வழியை, தகுதியை நல்லெண்ண வெளிப்பாட்டில் நாங்கள் தெரியப்படுத்திக் கொண்டோம். அதன்படி அரசுக்கும் எமக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நடந்தது. வெளிப்படையாகப் பேசினோம். இந்தப் பேச்சுவார்த்தைகள் எதுவும் கடந்தகாலத்தைப்போல இரகசியமாக நடைபெறவில்லை. மாறாக வெளிப்படையாகத் திறந்த அடிப்படையில் பேச்சுக்கள் நடந்தன. கடிதங்களும் வெளிப்படையாகவே பரிமாறப்பட்டன. எனவே மக்களுக்கு எங்கள் நிலைப்பாடுகள் தெட்டத் தெளிவாகவே புரியும். அரசு அனுப்பிய நிகழ்ச்சி நிரல் முதலாம் கட்டப்பேச்சுவார்த்தையில் நாம் எந்த அடிப்படையில் கலந்து கொள்வது, எந்த விடயங்களை வைத்து கதைப்பது என சிந்தித்துக்கொண்டிருந்த பொழுது அரசு எமக்கு ஒரு நிகழ்ச்சி நிரல் அனுப்பிவைத்தது. அந்த நிகழ்ச்சி நிரலில் அன்றாட பிரச்சனைகளுக்கான தீர்வுகளை முதலில் பேசுவோம் என்ற விடயங்கள் குறிக்கப்பட்டிருந்தது. பொருண்மியத் தடைநீக்கம், போர்நிறுத்தம், கடல்வலையத் தடைநீக்கம், மீளக்குடியமர்ப்பு, புனர்அமைப்பு, அதன் தொடர்ச்சியான அத்தியாவசியப் பிரச்சனைகள் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே அதனை நாம் வரவேற்று முதலாம் கட்டமாக அன்றாடப் பிரச்சனைக்கானதீர்வு, இரண்டாம் கட்டமாக அடிப்படைப் பிரச்சனைக்கான தீர்வு என்ற வகையில் பேச்சுக்களில்கலந்து கொள்வது என்ற முடிவை எடுத்தோம். அந்த அடிப்படையில் முதலாம் கட்டப்பேச்சு நடந்தது. ஆனால்மக்களின்அன்றாடப் பிரச்சனைகளுக்கு முழுமையான தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை. இரண்டாம் கட்டப்பேச்சிலே தாக்குதல்நிறுத்த உடன்பாடு காணப்பட்டது. அதற்கு அடுத்த கட்டமாக கடல்வலையத்தடையை நீக்கும் திட்டம் என்ற முடிவுக்கு இரண்டு தரப்பினரும் வந்து அதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் அடுத்த நாள் அவர்களது வெகுசனதொடர்பு சாதனங்களிலும், செய்தித்தாள்களிலும்,கடலில்இரவில் மீன்பிடிக்க முடியாதென்றும், அதுகுறிப்பாக நான்கு கிலோமீட்டர் மட்டுமே மீன்பிடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. முதல் நாள் ஒத்துக்கொண்டு கைச்சாத்திடப்பட்ட விடயம் அடுத்த நாளே அவர்களால் மீறப்பட்டது.

மூன்றாம்கட்டப்பேச்சுக்களில் பூநகரிப் பாதைத்திறப்பு என்ற முக்கியமான விடயத்தை நாங்கள் வலியுறுத்தினோம். எங்களுக்கும் எமது மக்களுக்கும்நம்பிக்கை பிறக்க வேண்டும்.எமதுமக்களின்மனங்களில் உள்ளபயங்கள் நீங்க வேண்டும்.எமது மக்களின் வாழ்வில் இன்னல்கள் குறையவேண்டும்.அதனூடாகஎமது மக்களின் அபிலாசைகள் தீர்க்கப்படவேண்டும். அதன் மூலமாக அமைதி தோன்றவேண்டும். எனவே இந்தவிடயத்தில் பாதைதிறப்பு மிகமுக்கியமானது. அதை நாம் வலியுறுத்தினோம். ஆனால் பாதைதிறப்பு என்ற விடயத்தை அரசு முற்றாகவே மறுத்துவிட்டது. நிராகரித்தது.

நாலாம் கட்டப்பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்கான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று நாம் அரச பகுதியினர்க்கு அழுத்தம் கொடுத்தோம். இங்குவந்த சமாதானப் பிரதிநிதிகளிடம் இதனை வலியுறுத்திக்கோரினோம். ஆனால் அரசு நாலாம்கட்டப்பேச்சுவார்த்தையை இழுத்தடித்தது ஏன்? முதல் கட்டப்பேச்சுவார்த்தையின் போது வடக்குகிழக்குபுனரமைப்புஎன்றுநாம் வரைந்த திட்டம், வடக்கு- கிழக்குப் புனரமைப்பு செய்யப்பட்டால் எமது மக்களின் பொருண்மியச்சுமை இறங்கும்என்றும்நாம்குறிப்பிட்டோம். அவர்கள் 4000 கோடி ரூபாய்க்கான திட்டம் ஒன்றை முன்வைத்தார்கள். ஆனால் அதைவிட பலமடங்குகோடி ரூபாய் அழிவுகள் இங்கு ஏற்பட்டுள்ளன. எனவே இதில் மாற்றம் வேண்டும்என்ற அடிப்படையில் 31500 கோடி ரூபாய்த்திட்டம் ஒன்றை வரைந்து அவர்களிடம் கொடுத்தோம். முதலாம்கட்ட பேச்சுவார்த்தையில் வடகிழக்கு புனரமைப்பு என்றார்கள். இரண்டாம்கட்டப்பேச்சுவார்த்தையில் வடகிழக்கு அல்ல, வடக்கு மட்டும் புனரமைப்பு என்றார்கள்.பிறகு வடக்கு அல்ல யாழ். மாவட்டம் மட்டும்தான் என்றனர்.தாம்நாலாங் கட்டப்பேச்சுக்கு வராமலேயேஅரசு ஒரு கடிதம்அனுப்பி வைத்தது. யாழ் மாவட்டத்தைவிட யாழ் மாநகரப் பகுதி மட்டுமே புனரமைக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. யாழ். மாநகரப் பகுதியில் என்ன புனரமைப்பு. மருத்துவமனையில்சிகிச்சைபிரிவு, மருத்துவமனையின் துணைக்கட்டடத்தைப் பூர்த்தி செய்வது, வீதிகளைச் செப்பனிடுவது. இவைதான் முக்கியமான புனரமைப்பு வேலைகளா? ஏன் அவர்கள் விரைவாக அந்தக் கடிதத்தை அனுப்பினார்கள்? ஏன் மாநகரச்சபைப் பகுதியைமட்டும்புனரமைப்பதுஎன்று முடிவுக்குவந்தார்கள்?

நாங்கள் பேச்சுவார்த்தைகள் விரைவாக்கப்பட வேண்டும் என்று சொல்கின்றோம். முக்கிய கட்டங்கள் சரிசெய்யப்பட வேண்டும் என்று அவர்களோடு அடிக்கடி தொடர்பு கொள்கின்றோம். நாலாங் கட்டப் பேச்சுவார்த்தைக்கான காலத்தைக் குறிக்காமல் அதில் பேசவேண்டிய விடயங்களைப் பற்றி கடிதம் அனுப்புகிறார்கள்.இவர்கள்ஏன்இப்படி நிற்கிறார்கள்.மார்ச்மாதத்திற்குள்4ஆம்

தொடர்ச்சி பக்கம் - 16

# வெலிக்கடையில் பொலிசாரிடமிருந்து

# ஆயுதப் பறிப்பு

சிறிலங்காவில்வெலிகடையில்அத்துல் கோட்டே சந்தியில் கால்நடையாக ரோந்து சென்று கொண்டிருந்த 3 பொலிசார்மீது மோட்டார் காரில் வந்த சிலர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு அவர்கள்வசமிருந்த ரி56 ரைபிள் ஒன்றையும் இரு துப்பாக்கிகளையும் பறித்துச் சென்றனர். இச்சம்பவத்தின் போது 4 பொதுமக்களும் காயமடைந்து சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கொழும்பு கோட்டை முதலிகே மாவத்தையில் உள்ள செலான் வங்கிக் கிளையில் இரு மோட்டார்சைக்கிள்களில் வந்திறங்கிய நால்வர் வங்கி முகாமையாளரையும் அறுவர்களையும் வாடிக்கையாளர்களையும் துப்பாக்கி முனையில் ஒரு அறைக்குள் தள்ளிப்பூட்டிவிட்டு 66 இலட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர். இச் சம்பவம் கடந்தமாதம் 30ம் திகதி நண்பகல்1.30மணிக்குசனநடமாட்டம் மிகுந்தஇப்பகுதியில்நிகழ்ந்துள்ளது.

# பிரான்ஸ் மருத்துவர்கள் சேவையைத் தொடர...

பிரான்ஸ் மருத்துவர்களின் சேவையைத் தொடர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.சிறீ லங்காவில் கடமையாற்றிய பிரான்ஸ் நாட்டு மருத்துவர்கள்தாம்தமதுநாட்டுக்குத் திரும்பிப் போகப்போவதாக தெரிவித்துள்ளனர்

சிறிலங்காவில்நிலைமைவழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகக் கூறி, பிரான்சின் எம்.எஸ்.எப் (MSF) வைத்தியர்களை வடக்கு கிழக்கில் இருந்து திரும்பியழைக்க எம்.எஸ்.எப் சர்வதேச நிறுவனம் முடிவு செய்துள்ளது. இது குறித்து ஆராயவென மட்டக்களப்புக்குச் சென்ற எம்.எஸ்.எப் அதிகாரிகள் மொனிக்டோல், பிரஸ்கோயஸ் டயஸ் ஆகிய இருவரிடமும் சேவையை நிறுத்தவேண்டாமெனவும் மோதல் தவிர்ப்பு ஏற்பட்டாலும் வழமையான நிலையில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லையெனவும் சிறிலங்காவின் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் உட்படப பல பிரமுகர்கள்வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வடமராட்சியில் அன்னைபூபதி...

கட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெறவில்லைமாறாகஇந்தஏப்ரல் மாத்தில்தான் அதுவும் நாம் கொடுத்த அழுத்தத்தினாலும் எமது முயற்சியாலும் தான் பேச்சுவார்த்தை நடந்தது. மார்ச் மாத நடுப்பகுதியிலோ இறுதியிலோ பேச்சுவார்த்தை நடக்கும் என்று இதற்கு முன் எப்போதாவது அறிவித்ததா? அவர்களது முறைகளிலோ தொடர்பு சாதனங்களிலோ இதுபற்றி தெளிவாக்கப்பட்டிருந்ததா? ஆனால் ஒரு விடயம். அங்குநாசூக்காகச்சொல்லப்படுகிறது. பேச்சுவார்த்தை நடக்கும் அல்லது இந்த நாளில் நடக்கலாம். இப்படிப் பேச்சுக்கள் அடிபடுகின்றன. அப்படி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மார்ச் 3ஆம் நாள் பேச்சுக்கள் நடக்குமென சொல்லப்படுகிறது என்று வெறும் செய்திகளே வந்துள்ளன. ஏன் இப்படி? அரசு ஆணித்தரமாக மனத் திறந்து செயல்பட்டிருக்குமானால் எமக்கும் எமது மக்களுக்கும் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டுமென விரும்பினால் அரசு ஏன் இப்படி நடந்து கொள்கின்றது? காலக்கெடு பற்றி சிந்திக்க வேண்டும். இந்தக் கட்டத்தில்தான் நாம் ஒரு காலக்கெடு விதித்தோம். இது ஏன்? அரசுநாலாங்கட்டப்பேச்சுக்கானநாளை தெரிவிக்காமல் இழுத்தடிக்கின்றது. இதனுடைய பின்னணியும், மர்மமும் என்ன? ஏப்ரல் மாதத்தில் இப்பொழுது நடைபெறும் சார்க்கு மாநாடு அதற்கு முன் நடைபெற உள்ள இலங்கைக்கு நிதிவழங்கும்நிதிநிறுவனங்களுக்கான மாநாடு ஆகியவை அவை. இக்கட்டங்களில் இலங்கை சனாதிபதியோ அவரின் அமைச்சர்களோ கலந்து கொள்ள வேண்டும். அப்படி அவர்கள் கலந்து கொள்ளும்போது இங்கு அமைதி நிலவுகின்றது. அதன் அடிப்படையில் எமக்கும் புலிகளுக்கும் இடையில் உடன்பாடு இருக்கிறது. புனரமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன. இது தொடர்பாக சாத்திய விளக்கக் கூறுகளும் அறிக்கைகளும் இவையெனவும், இவற்றை நடத்துவதற்கு பெருமளவான நிதியும் வேண்டும்எனவும்கூறமுடியும்.

**திறைசேரியைநிறைக்கத்திட்டம்**

இவ்வாறான கோரிக்கைகளை விடுத்து பெருந்தொகைப்பணத்தைப் பெற்று திறைசேரியை நிறைத்து தம்மை பலப்படுத்துவதுதான் அரசின் திட்டம். உண்மை அடிப்படையில் எமக்கு சரியான நம்பிக்கையை தராத பட்சத்தில் நாம் எமது ஆதரவை அரசுக்கு நல்கினால் அரசு அதனைப் பயன்படுத்தி தன்னைப் பலப்படுத்தி திறைசேரியை பலப்படுத்தும். பொருண்மிய வீழ்ச்சிக்குள் முடங்கிக் கிடக்கும் அரசு அதிலிருந்து தன்னை மீழ்வித்துக் கொண்டு பலமான நிலையில் எங்கள் மீது ஒரு போரைத் திணிக்கும். அப்படியான ஒரு போர் நடந்தால் கடந்த காலத்தைவிட மிகக் கொடுமையானபோராகஇருக்கும். அப்படியான நிலையில் எமது மக்களுக்கும், சொத்துக்களுக்கும் சுதந்திரப் போராட்டத்திற்கும் உருவாகும் நிலைபற்றி பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அதனால்தான் நாங்கள் காலக்கெடுவை வைக்கின்றோம். எமது மக்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடாது. சொத்துக்கள்இழக்கக்கூடாது.எமது சுதந்திரம் பின்தள்ளப்படக்கூடாது. இதனடிப்படையிலேயே காலக்கெடு விதிக்கப்பட்டது. காலக்கெடுவை முன்வைப்பதால் எமது நான்கு கோரிக்கைகளை அரசு செயல்படுத்த முயற்சி எடுக்கும். அதனால் அமைதி தோன்றும். மக்களின் வாழ்க்கை முன்னேற்றமடையும். சீரடையும். தொடர்ச்சியாக போரை நடத்த முடியாது. ஆனால் இவற்றிக்கான நடவடிக்கைகளை எடுக்காமல் அரசு மீண்டும் போரைத் தொடுத்தால் பொருண்மிய வீழ்ச்சிக்குள் இருக்கும் அரசால் தொடர்ச்சியாக போரை நடத்த முடியாது. மூன்று அல்லது 4 மாதங்களுக்கோ அல்லது ஓராண்டுக்கோ தான் அவர்களால் தொடர்ச்சியாக போரைநடத்த முடியும். எனவே இந்த நிலையில் நாம் வேகமாக நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாக அரசை முடக்கி எமது மக்களின் அழிவைத் தடுக்கலாம். எமது சுதந்திரத்திற்கான நிலையை விரைவாகப் பெறலாம். இது இரண்டாம்கட்டம்.

மூன்றாம் கட்டம் அனைத்துலக நிதிநிறுவனங்களுக்கு இந்தப் பிரச்சனைகளை முன்வைத்து வடக்கு-கிழக்குப் புனரமைப்பு என்ற பெயரிலேயே அவற்றிடம் இருந்து அவர்கள் பெற இருக்கும் பாரிய தொகை நிதிகளை பெறவிடாமல் அரசுக்கொரு தட்டுப்பாடு நிலையை ஏற்படுத்துவது. அனைத்துலக ரீதியில் அரசுக்கு ஒரு அழுத்தத்தை ஏற்படுத்துவதும் எமது போராட்டத்திற்கான நியாயபூர்வமான கோரிக்கைகளை முன்வைப்பதும்எமது அடுத்த கட்டப் போர் தொடங்க வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்யவில்லை. நாம்போர்ப்பிரியர்கள்அல்ல.ஆனால்நாம் மக்களைப் பெரும் அழிவினில் கொண்டு போய் விடக்கூடாது. இதில் நாம்மிகக்கவனமாகஇருக்கின்றோம். தாக்குதல் நிறுத்தம் அமுலுக்கு வந்ததின் பின்னர் கூட 130 மீறல்கள் இடம்பெற்றுள்ளன. எமது போராளிகளின் படகு இயந்திரக் கோளாறினால் இயங்க மறுத்ததால் கரையில் ஒதுங்கியபோது அவர்களைச் சுற்றி வளைத்த படையினர் எமது35போராளிகளின்ஆயுதங்களைப் பறித்தனர். எமது போராளிகளைப் பணயம் வைத்தார்கள். ஆனால் எமது போராளிகள் கைநீட்டவில்லை. கைகட்டப்பட்ட நிலையில் இருந்தார்கள். மன்னாரிலே எமது ஆதரவாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். ஏன், எந்த அடிப்படையிலே நடந்தது என்று கேட்டபோது, அவர்களைத் தேடுகிறோம் என்று பொய்ச்சாட்சி சொன்னார்கள். மட்டக்களப்பில் எமது போராளி ஒருவர் பொலிசாரின் சித்திரவதை தாங்கமுடியாமல் நஞ்சருந்தினார். தாக்குதல் தவிர்ப்பு உடன்படிக்கை அமுலில் உள்ளதால் நான் உங்களுக்கு அடிக்கமாட்டேன். எமது தலைவரின் உத்தரவு என்று கூறியபோது அவர்கள் இன்னும் பலமாகத் தாக்கினார்கள். ஒப்பந்தத்தை எப்போதோ முறித்திருக்கலாம். போர் தொடக்கி இருக்கலாம். எமது மக்களின் சுகத்தோடு அவர்களின் பொருண்மிய மேம்பாடோடு இந்த சுதந்திரத்தைப்பெறவேண்டும்எனநாம் விரும்புகின்றோம். பேச்சுக்கு முன்பிருந்தே நாம் நிரந்திரப் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி வருகின்றோம். இந்த நிமித்தத்தில் தான்பேச்சுக்கள் தொடர வேண்டும். இந்த நிலையில்தான் பேச்சுக்கள் முறியாமல் இருக்கும். தொடர்ந்து பேசலாம். ஆனால் அரசோ போர்நிறுத்த நிலைக்கு வராமல் தாக்குதல் நிறுத்தத்தில் நின்றது. நிரந்தர போர் நிறுத்தம் ஏற்பட்டால் படைக்கு ஆட்கள் சேர்க்க முடியாது. பயிற்சிகள் செய்ய முடியாது. ஆயுதங்கள் கொள்வனவு செய்ய முடியாது. படைகளைநகர்த்தமுடியாது.ஆனால் தாக்குதல் தவிர்ப்பு என்றால் இவையாவும் செய்யலாம் என்பது அரசின்தந்திரம்.தாக்குதல்மட்டும்தான் தவிர்ப்பு. உண்மையில் அரசு சமாதானத்தை விரும்பியிருந்தால் ஏனொரு நிரந்தர போர்நிறுத்தத்தை ஏற்படுத்த முடியாது? எமது தலைவர் எத்தனையோ சந்தர்ப்பங்களில் மனம் திறந்து இதுபற்றி எமது நிலைப்பாட்டைச் சொன்னார். நிரந்தர அமைதியை ஏற்படுத்துவது நிரந்தர போர்நிறுத்தம்.எனவேஒருநிரந்தரபோர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டுமென்றுகோரிக்கைவிட்டோம்.ஆனால் அரசு இத்தாக்குதல் தவிர்ப்பைத் தான் செய்ய ஒப்புக்கொண்டது. ஏன் இந்த தாக்குதல் தவிர்ப்பு? 94-95 ஆம் ஆண்டு இறுதி - தொடக்க காலகட்டங்களில் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அரசு தழும்பிக் கொண்டு இருந்தது. இந்த நேரத்தில் எமது போரும் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. நாங்கள் போன வேகத்தில் போய்க் கொண்டிருந்தால் இந்த அரசினால் ஒன்றுமே செய்யமுடியாது. எனவே இந்த நிலையில் இருந்து மீள்வதற்காகவேதான் அரசு சமாதானம் என்று ஒரு தாமதத்தைப் போட்டது. நாங்களும் அதனை சரியாகப் புரிந்து கொண்டோம். ஆனாலும் அவ்வரசுக்குஎமதுநிலைப்பாடுகளை தெளிவுபடுத்தவும், எமது மக்களுக்கு இருக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகளை நாங்கள் எடுத்தோம். விட்டுக் கொடுத்தோம். சமாதானத்திற்கு பட்டுச்சேலை விரித்தோம். பேச்சுக்களுக்காக நிபந்தனைகளை விட்டுக் கொடுத்தோம். எவையெல்லாவற்றையும் விட்டுக்கொடுக்க விரும்பாமல் இருந்தோமோ அதனையெல்லாம் விட்டுக் கொடுத்தோம். அது எதை எதை விட்டுக் கொடுக்க முடியாது என்ற முடிவோடு இருந்ததோ அதே முடிவில்தான் அது எப்பொழுதும் இருந்தது.இருந்தநிலையில்இருந்து கொண்டு அரசு சமாதானம் பேச விளைந்தது. போர்க் கைதிகளையும் எம்மிடம் சிறைபிடிக்கப்பட்டவர்களையும், வாசலில் விட்டும் அழைத்துச் செல்ல அரசு கவனம் செலுத்தவில்லை. முதலாவது காலக்கெடு 28 ஆம் நாள் மார்ச் முடிவடையும்நிலையில் 24 ஆம் நாள் ஒரு பதிலை அனுப்பியது.எரிபொருள், பொருண்மியத்தடை, கடல்வலயத் தடைகள் நீக்குவதாகக் கூறியது. பொருண்மியத்தடைகள், எரிபொருள் என்பது முக்கியமாக வருகின்றது. எமது தலைவர் ஏமாறுபவர் அல்ல. அரசு இழுத்தடித்துக் கொண்டுபோய் எம்மை சரிப்படுத்த முயல்வது எங்களுக்கு நன்கு தெரியும். இதனால் இரண்டாவது காலக்கெடுவை விதித்தோம். இந்த 19 ஆம் நாள்வரை அரசுக்கு இரண்டாவது காலக்கெடு சம்பந்தமான கால அவகாசத்தை வழங்கினோம். எனவே 24 ஆம் நாள் தடைநீக்க அறிவிப்பை விடுத்த அரசு இம்மாதம் கூட அதை நிகழ்த்தவில்லை. தடைநீக்கம் பற்றிய அறிவிப்பு உத்தியோக பூர்வமாக அரசினால் அறிவிக்கப்படவில்லை. வர்த்தமானியிலோ, உத்தியோக பூர்வ அரசு சாதனங்களிலோ இது பற்றிய அறிவிப்பு வெளியிடப்படவில்லை. அரசு அறிவிப்பு செய்தது. எல்லாமே நடைமுறைப் படுத்தப்படவில்லை. அதற்கான பணிப்புக்கள் விடப்படவில்லை.

அதேசமயம் அனைத்துலக ரீதியில் திட்டமிடப்பட்ட முறையில் அரசு பொய்ப்பிரசாரத்தை மேற்கொள்கின்றது. தென்தமிழீழ மக்கள் போர்க் காலத்தைவிட இந்தச் சமாதான காலத்தில் மிகவும் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். அதேசமயத்தில் குடாநாட்டின் இராணுவநிலைகளும் அகற்றப்படவில்லை. இன்று சமாதானம் நின்று மூன்றாம் கட்ட ஈழப்போர் பிறந்திருக்கின்ற ஒரு நாள். சமாதான சூழ்நிலை முழுமையாக குலைந்துவிட்டது. ஏனெனில் பலவீனமாக இருந்த அரசு தற்போது தன்னைப் பலப்படுத்திவிட்டது. பலமான நிலையில் இருந்த எங்களை இந்த சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி பலவீனமாக்குகின்றது. இது சமாதான சூழ்நிலைக்கு குந்தகமாகும். எம்மையும் எமது மக்களையும் பலவீனப்படுத்தி அழிவைச் சந்திக்க வைப்பது அரசின் போக்கு. இதனை நாம் அனுமதிக்க முடியாது.

# வல்வெட்டித்துறைக் கடலில் கடற்படை தாக்குதல்

வல்வெட்டித்துறை கடலில் சிறிலங்கா கடற் படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலால் மூன்றுமீனவர்கள். இக்கடற் பகுதிலில் தரித்து நின்று ரோந்து சென்ற 'டோறா' படகிலிருந்தே பீரங்கித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. 23-04-95 ஞாயிறு மாலை 4.30 மணியளவில் நடந்த இவ்வெறியாட்டத்தில் மீனவர்கள் சென்ற படகும் மூழ்கடிக்கப்பட்டது. இதில் நான்கு பிள்ளைகளின் தந்தையான அப்புலிங்கம் தேவலிங்கம் (51) மாணிக்கம் கண்ணன் (26), சுப்பிரமணியம் லோகிதநாதன் (22) என்பவர்களே சிலங்காக் கடற் படையின் பயங்கரவாதத்துக்குப் பலியான அப்பாவிகளாவர்.

பலியான மீனவர்களின் உடல்களைத் தேடிக்கண்டு பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த மீனவர்களும் உலங்குவானூர்தியின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். பலாலியிலிருந்துவந்த உலங்குவானூர்தி ஒன்றிலிருந்தே மீனவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பியோகம் செய்யப்பட்டது.

19-04-95 புதன் கிழமையன்றும் சிலங்காக் கடற்படையினர, வல்வெட்டித்துறைக் கடற்பரப்பில் மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம்செய்துள்ளனர்.

காலை 5.30 மணியளவில் நடந்த இச்சம்பவத்தில் மீனவர்களின் படகும் இயந்திரமும் கடும்சேதத்திற்குள்ளாகின. மீனவர்கள் கடலில் குதித்துத் தப்பித்துக் கொண்டனர். அதே வேளை, காரைநகர் வலந்தனைப் பகுதியிருந்து பொன்னாலை கடற் பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீதும் சிறிலங்காப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

21-04-95 வெள்ளிக் கிழமையன்று வடமராட்சிக் கிழக்கு கடற்பகுதியில் ரோந்து சென்ற கடற் படையினர் மீனவர்கள் மீது அகோரமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இத்தாக்குதலில் 3 டோறாப்படகுகள்உட்பட 4படகுகள் ஒரே நேரத்தில் தாக்குதலை நடாத்தியுள்ளன. வெற்றிலைக்கேணியில் நடந்த இத்தாக்குதலினாலும் மீனவர்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆட்சியாளர்கள் மாறினர் ஆட்சி மாறவில்லை;

# சிறீலங்காவில் நீலயானைகளின் ஆட்சி

சனாதிபதி சந்திரிகா குமார துங்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியை 'நீலயானைகளின் ஆட்சி' என சிங்கள வார இதழ் ஒன்று பொருத்தமாக விமர்சித்துள்ளது. ஆட்சிப் போர்வை மாறியுள்ளதே ஒழிய ஆட்சியாளர்களின் சிந்தனையும் செயற்பாடும் மாறவில்லை என்பதைக் குறிக்கும் முகமாகக் கூறப்பட்ட இவ் வடைமொழி, சந்திரிகா குமாரதுங்காவின் கடந்த



மாதங்களின் ஆட்சியை அவதானிப்பவர்கள் எவரும் மறுக்க முடியாது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபொழுது முன்னர் ஐ.தே.க விட்டுச்சென்ற பிரச்சினைகளும், அதன் தொடராக எழுந்த நெருக்கடிகளும் பெரும் சவாலாக அரசின் முன் எழுந்தன. இதை உடன் சமாளிக்கமுடியாது திணறிய அரசு பிரச்சினைகளைத் தீர்க்கக் கால அவகாசம் கோரியது.

ஆனால், அரசிற்குக் கால அவகாசம் வழங்க எவரும் தயாராக இருக்கவில்லை. இதற்கு மக்களைக் குறைகூறிப் பயனில்லை. ஏனெனில் தேர்தல் வாக்குறுதிகளை அளிக்கும் போது, அவ்வாறு எதையும் கோரவில்லை. பதவி ஏற்றதும் பிரச்சினை தீர்க்கப்படும் என்றே வாக்குறுதியளித்தனர்.

ஆனால், கால அவகாசம் வழங்கப்பட்டதோ இல்லையோ: காலம் சென்று கொண்டு இருக்கின்றது என்பதும், பிரச்சினைகள் தீர்க்கப்படாதது மட்டுமல்ல, அரசு பிரச்சினைகளை அணுகும் விதம் முன்னைய ஐ.தே.க. வின் அணுகுமுறையிலிருந்து மாறுபட்டதாக இல்லை என்பதுமே இன்று முக்கிய விடயமாக உள்ளது.

> பொ.ஐ.முன்னணி அரசாங்கமானது, ஐ.தே.கவில் இருந்து பெரும் மாற்றம் எதையும் செய்துவிட விளைகின்றது என்று கூறிவிட முடியாது. ஏனெனில் இவர்களின் கொள்கையும், சிந்தனையும் மட்டுமல்ல,அவர்களின் வழியும் மாறவில்லை. ஆனால் சில யுக்திகள் மட்டுமே மாறியுள்ளன.

இதுவே பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியை 'நீல யானைகள் ஆட்சி' என வர்ணிக்கும் நிலையை உருவாக்கியுள்ளது.

தேர்தலின் முடிவானது ஆட்சி அதிகாரத்தை கை மாற்றியதே ஒழிய, ஆட்சி அமைப்பு முறையை மாற்றவில்லை என்பது முதலில் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில் ஆட்சியாளர்கள் எவ்வாறுதான் மாறினும் ஆட்சியமைப்பிற்குரிய பண்புகள் சில ஆட்சியாளர்கள் மீது கட்டுப்பாடுகளையும், செல்வாக்கையும் கொண்டு வந்துவிடும். இந்த வகையில் சனாதிபதி ஆட்சியமைப்பு முறையானது வழங்கும் நிறைவேற்று அதிகாரம், ஆட்சியாளர்களை ஒரு சர்வாதிகாரி என்ற நிலைக்கு ஆக்கிவிடுவது தவிர்க்க முடியாததாகிறது.

இதற்கு சனாதிபதி முறையை ஒழிப்பேன் என சூளுரைத்தவாறு பதவிக்கு வந்த சனாதிபதி சந்திரிகா கூட விதி விலக்காகவில்லை. அரசியல் அமைப்பு வழங்கும் அதிகாரத்தை அவர் முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றார் என்பதை, அவரது சில நடவடிக்கைகள் உணர்த்துவதாக உள்ளன.

இது குறித்து அண்மையில் யாழ் வந்த தென்னிலங்கை அரசியல்வாதி ஒருவர் பிரஸ்தாபிக்கையில், "முன்னாள் சனாதிபதி பிரேமதாசாவிற்குச் சந்திரிகா குறைந்தவரல்ல, அவரைப்போன்றே தன்னிச்சையான தீர்மானங்கள் பலவற்றை அவர் மேற்கொள்கிறார்" எனத் தனிப்பட்ட உரையாடல் ஒன்றின்போது தெரிவித்திருந்தார்.

இந்த வகையில் நிறைவேற்று அதிகாரம் என்பதை ஐ.தே.க. சனாதிபதிகள் போன்றே பொ.ஐ.மு ஆட்சியாளரும் பயன்படுத்துவதே நீல யானைகளின் ஆட்சியின் தொடக்கம் எனலாம்.

ஆனால் பொ.ஐ. முன்னணியின் கொள்கை ஐ.தே.க கொள்கையில் இருந்து பெரியளவில் மாறவில்லை என்பதன் வெளிப்பாடாகவே இதனைக் கொள்ளமுடியும். ஆனால் தற்பொழுது பொ.ஐ.முன்னணியின் கொள்கைகளில் முரண்பாடாகத் தெரிவது அது அளித்த தேர்தல் வாக்குறுதிகளே ஆகும்.

பொ.ஐ.மு. தேர்தலின் முன்பே திறந்த பொருண்மியக் கொள்கையை ஆதரிக்கும் எனப் பிரகடனப்படுத்தியிருந்தது. ஆனால் தேர்தல் வாக்குறுதிகளில், கையூட்டு, ஊழல், மோசடி என்பவற்றை ஒழிக்கப் போவதாக உறுதி கூறியிருந்தது. அது எப்படிச் சாத்தியமாகும் என அப்போது சிந்தித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் திறந்த பொருண்மியக் கொள்கையுடன் சிறிலங்காவிற்குள் கையூட்டு, ஊழல், மோசடி, சூதாட்டம், கடத்தல், பாதாள உலகம், கலாசாரச் சீரழிவு என்பனவும் சேர்ந்தே ஊடுருவின. இந்நிலையில் திறந்த பொருண்மியக் கொள்கையை மட்டும் எடுத்துக்கொண்டு எவ்வாறு அவற்றுடன் இணைந்து வந்த ஒட்டுண்ணிகளை நீக்குவது குறித்துப் பொ.ஐ. முன்னணி தெளிவான திட்டம் எதையும் கொண்டிருக்கவில்லை.

இதே போன்று பெருமளவு நிதியை இராணுவத்திற்கென ஒதுக்கும் அரசானது ஆயுதப்பேரம், கொள்வனவு என்பவற்றில் தரகுப்பணம் வழங்கப்படுவதையோ, அன்றி ஊழல்கள் நடைபெறுவதையோ தடுத்துவிடுவது பற்றிய திட்டமும்இருக்கவில்லை.

இந்நிலையில் புதிய அரசு இவ்விடயங்களில் தமது அறிவிப்புகளுக்கு ஏற்ப செயற்பட முடியவில்லை. மாறாகத் திறந்த பொருண்மியக் கொள்கையுடனும் ஆயுதக் கொள்வனவுடனும் அவற்றையும் சேர்த்தணைத்துக் கொள்ளும் நிலையே நடைமுறையில் உருவாகியது.

அதே சமயம் ஐ.தே.க.அரசியல்வாதிகளின் சிந்தனையிலிருந்து பொ.ஐ.முன்னணியும் மாறவில்லை என்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கிய அனுமதி ஒன்றே போதுமான உதாரணமாகும். பதவியேற்றவுடன் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் பயன்படுத்திய ஆடம்பர வாகனங்களை வரிசையில் நிறுத்தித் தொலைக்காட்சிச் செய்திக்குச், செய்தி காட்டிய புதிய அரசு தற்பொழுது தமது உறுப்பினர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதித்தது வேடிக்கையானதுதான். ஆகையினால் இதிலுள்ள விசேட அம்சமாகக் கூறக்கூடியது என்னவென்றால், அன்று பச்சை நிறத்தில் ஓடிய வாகனங்கள் இனி நீல நிறத்தில் ஓடும் என்பதே ஆகும்.

இந்நிலையில் பொ.ஐ.முன்னணியின் முதலாவது வரவு–செலவுத் திட்டம் பற்றிக் கருத்து வெளியிட்ட எதிர்த்தரப்பினர், குறிப்பாக ஐ.தே.க.வினர் "இக் கொள்கைத் திட்டம் ஐ.தே.க.வின் கொள்கைத் திட்டத்திலிருந்து எவ்வகையிலும் மாறுபட்டதில்லை" என்றனர். இதே போன்றே முன்னாள் சனாதிபதி ஜே.ஆருடன் இணைந்து சிறீலங்காவிற்கு திறந்த பொருண்மியக் கொள்கையை அறிமுகம் செய்து வைத்த முன்னாள் நிதியமைச்சர் றொனி டீ மெல் "நான் அறிமுகம்

> "ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்திய ஆடம்பர வாகனங்களை வரிசையில் நிறுத்தி, தொலைக்காட்சிக்குச் செய்தி காட்டிய பொ.ஐ.முன்னணி அரசு, தற்போது வாகனங்களை இறக்குமதி செய்யத் தமது பா. உறுப்பினர்களுக்கும் அனுமதியளித்துள்ளது. இது வேடிக்கையானது மட்டுமல்ல, அன்று பச்சை நிறத்தில் ஓடிய வாகனங்கள் இனி நீல நிறத்திலேயே ஓடும்"

செய்துவைத்த திறந்த பொருண்மியக் கொள்கையின் அடிப்படையிலேயே இந்தக் கொள்கைத் திட்டம் அமைந்திருப்பது குறித்து சந்தோசமடைகின்றேன்" எனத் தெரிவித்திருந்தார். ஆனால் ஐ.தே.க. வினதும் பொ.ஐ.முன்னணியினதும் வரவு–செலவுத் திட்டங்கள் உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் ஆலோசனையில் தயாரிக்கப்பட்டவை என்பது பொதுவான குற்றச்சாட்டாகும்.

இவ்வாறாக ஆட்சி அமைப்பும் பொருண்மியக் கொள்கையும் மாறாத நிலையில், அரசு தேர்தல் வாக்குறுதிகளின் அடிப்படையில் மேற்கொண்ட ஒருசில நடவடிக்கைகள் அரசிற்கு எதிர்பாராத நெருக்கடியையே தோற்றுவித்ததெனலாம். இதில் முக்கியமானதொரு அம்சமாக தென்னிலங்கையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் சர்வாதிகாரி போன்ற ஆட்சி முறைக்கும் திறந்த பொருண்மியக் கொள்கைக்கும் பாதுகாவலாக இருந்த அவசரகாலச்சட்ட விதிகள் நீக்கப்பட்டமையானது, அரசைப் பொறுத்துப் பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்தது. தம்மை ஆட்சியில் அமர்த்தியவர்கள் தமது உரிமைக்காகப் போராடுவார்கள் எனப் பொ.ஐ. முன்னணி அரசு எதிர்பார்க்காததே இந்நிலைக்குக் காரணமாகவும் அமைந்தது.

இந்நிலையில்தான் அரசு கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையில் சிக்கல்களைச் சந்திக்க வேண்டி வந்தது. ஐ.தே.கட்சி 17வருடங்களாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சிமுறைக்கும், திறந்த பொருண்மியக் கொள்கைக்கும் இசைவாக இயங்கிவந்த அரசஇயந்திரம் மாறுபட்ட விதத்தில் இயங்க மறுத்தது. அதேவேளை பொ.ஐ.முன்னணியும் அதற்கு முரண்பாடான கொள்கைகளை முனைப்பாகக் கொண்டிராமையால் அதனை எதிராக இயங்க வைக்கவும் பெரிய அக்கறை காட்டவில்லை.

இந்நிலையில் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்ட போதும். தென்னிலங்கையில் மீண்டும் இலக்கத்தகடில்லாத வாகனங்களும், ஆட்கடத்தல்களும், பாதாள உலக நடவடிக்கைகளும், செய்தியாளர்கள் மீதான தாக்குதல்களும், செய்திகள் மீதான மிரட்டல்களும் எழத் தொடங்கின. அரசதரப்பு இதை மறுத்த போதும் இதைமுன்னாள் சனாதிபதி பிரேமதாசா காலத்து மறுப்புப் போன்றே மக்கள் கருதவேண்டியுள்ளது.

இது மீண்டும் ஐ.தே.க யுகம் ஒன்றை நோக்கிச் சிறீலங்கா செல்வதாகவே ஊர்ஜிதம் செய்கிறது. இந்நிலை பொ.ஐ.மு. அரசு தமது வழியிலேயே செல்கிறது என ஐ.தே.க பெருமைப்படும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது. அதாவது பச்சை யானைக்குப்பதில் நீலயானை என்றரீதியில் நிறமாற்றம் மட்டுமே வெளிப்பட்டு நிற்கின்றது.



இவ்வாறானதொரு நிலையே, அரசின் முன்னுள்ள முக்கிய பிரச்சனைகளில் ஒன்றான இனப்பிரச்சனை விடயத்திலும் தென்படுவதாக உள்ளது. இனப்பிரச்சனைக்குப் பேச்சுவார்த்தை மூலமான அரசியற்தீர்வு எனப் பொ.ஐ.முன்னணி அறிவித்திருந்த போதும், அதில் முன்னேறிச் செல்வதில் அரசு முனைப்பாகச் செயற்படுவதாகத் தெரியவில்லை. விடுதலைப்புலிகளுடன் அரசு தொடங்கிய பேச்சுவார்த்தை எதிர்பார்த்தளவு வேகத்தில் அரசால் முன்னெடுக்கப்படவில்லை.

அவ்வாறானதொரு நிலை உருவாவதற்குச் சிறீலங்கா அரசியலில் இராணுவம் பெற்றுவிட்ட

தொடர்ச்சி பக்கம் - 4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விளையாட்டுக்களின் பல்வேறு பரிமாணங்கள்

## திருப்தியும் அதிருப்தியும்

விளையாட்டுக்கள், அதன் நன்மைகள், உளவியல், உடலியல் ரீதியான தேவைகள் என்பன பற்றிய கருத்துக்கள் நிறையவே வெளியிடப்படுவதும் போதிக்கப்படுவதும் சாதாரணமாக எங்கும்காணப்படுகின்றதொன்றுதான். விளையாட்டுக்கள் அவசியமானவை என்பதில் யாருக்கும் இரண்டாங் கருத்துக்கு இடமில்லை என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவையே. விளையாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள், ரசிகர்கள் ஆகியோர் உள்ளூர் விளையாட்டுக்களுடன் நேரடித் தொடர்புகொண்டவர்கள். அதே வேளை அனைத்துலக ரீதியில் தமக்குப் பிடித்தமான விளையாட்டுக்களை, அது தொடர்பான செய்திகளைப் பின்பற்றுபவர்கள். மேலும்விளையாட்டுக்கள்அனைத்துலகரீதியில் ஒரு பரிமாணமடைந்திருக்கும் வேளை, உள்ளூர் மட்டத்தில் எமது மண்ணிலும் ஏற்றங்களைக் கண்டுவருகின்றது.

அனைத்துலக ரீதியான விளையாட்டுக்கள், அதன் முன்னணி நாயகர்கள், நாயகிகள் அனைவரையும் நாம் அறிந்தவர்கள்அல்ல.ஆனால்உலகின் முதன்மையானபலவிளையாட்டுக்கள், அதன் முன்னணி வீரர்கள் பற்றி அறிந்துள்ளோம். எடுத்துக்காட்டாக உதைபந்தாட்டம், துடுப்பந்தாட்டம், கொக்கி, சதுரங்கம், குத்துச்சண்டை என்றவாறாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம்.ஆனால்அனைத்துலக விளையாட்டுக்களில் இன்னொரு பக்கம் உண்டு. அதாவது தொழில்சார் தன்மை கொண்டாடப்படும் நபர்கள் (Celebrities) என்பன. விளையாட்டுக் களங்களுக்கு அப்பால், இவை தனிப்பட்ட வாழ்விலும் நிறுவன அமைப்புக்களிலும் விளையாட்டின் மகத்துவத்திலும் கணிசமான பாதிப்பை ஏற்படுத்திவருவதை ரசிகர்கள் அவதானித்து வருகிறார்கள். போட்டி, பொறாமை, காழ்ப்பு, சுயநலம், ஏன் மரணபயம் என்பனகூட இதுதொடர்பாக அனைத்துலக விளையாட்டுக்களைஊடுருவிநிற்பது யாவரும்அறிந்ததே.

தொழில்சார் தன்மை என்பது இன்னொரு சர்வதேசவணிகமாகமாறி நிற்பதாகவிமர்சகர்கள்கருதுகிறார்கள். பொதுவாக சமூக நலத்துறைகளுக்குச் செலவிடத்தயங்கும் நிறுவனங்கள் பல மில்லியன் டொலர்களைத் தனிநபர்களுக்கு வாரி வழங்கிக் கொண்டிருப்பதைக் குறிப்பிடுகிறார்கள்.விற்பனைப்பொருட்களுக்கு அனைத்துலகச் சந்தையைப் பிடிக்கும் பாணியில் வீரர்களை, வீராங்கனைகளைப் பணத்துக்குப் பிடிக்கும் சம்பவங்கள் மிகச்சாதாரணமானவை. இவை குறிப்பாகப் பெரும் எடுப்பில் ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா தற்போது யப்பான் நாடுகளிலும் காணப்படும் ஒரு போக்காகும். எனவே தொழில்சார் தன்மையில் விளையாட்டுக்கள் வீரர்களின் முழுநேரத் தொழிலாக அமைந்துவிடுவதால், தமது உயர் திறனைப் பேணிக்கொள்ள போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், தமக்குச் சார்பாக நிலைமைகளை மாற்றக் கையூட்டுக் கொடுத்தல் என்பவற்றைச் சட்டத்துக்குப் புறம்பானவையாக இருந்தாலும் செய்வதற்கு முற்படுகிறார்கள். இதன் காரணமாகப் பல வீரர்கள், விளையாட்டுக்கள் அபகீர்த்திக் குள்ளாகுவது இன்றைய உலகில் சாதாரணமான காட்சியாக மாறிவிட்டது. அத்தோடு அதீத திறமையுடையவர்களாக இவர்கள் இருப்பதால், இவர்கள் தம்மை சாதாரண மானுடனுக்குச் சிறிது மேலாக (Super Human) என்றெண்ணிக்கொள்வதும் இதனால், ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலாவது உலக ரசிகர்களால் கசப்புடன் விமர்சிக்கப் படுவதும் தவிர்க்க முடியாததாகிவிட்டது. மேலும் பல மில்லியன் டொலர் விளையாட்டு ஒப்பந்தங்களைக் கூசாமல்முறிப்பதும்இதனால்நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுவதும் நிறுவனரீதியானநடவடிக்கைகளுக்கு உள்ளாகிவிடுவதும் சர்வ சாதாரணமாக நடைபெறுகின்றன. ரசிகர்களின்பார்வையில்இவ்வீரர்களின் விளையாட்டுக்கள் பற்றிய பிம்பம் பெரிதாக விழுந்துள்ளமையாலும், மறுபக்கம் சரிவரத் தெரிய வராமையாலும் இதுபற்றிய உண்மைகளைநாம்அறிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றோம். நாம் நேசிக்கின்ற எந்த அனைத்துலகப் புகழ்பெற்ற வீரனும் இதற்கு விதிவிலக்கல்ல.

இன்னொருபுறம் உலக ரசிகர்களால் விளையாட்டுத் திறமையுடன் சேர்ந்து அவர்களின் தோற்றம், தோற்றத்தை மேம்படுத்திக்கொள்ளும் பாங்கு ஆகியவற்றால் தமக்கு மேலதிக புகழையும் அதேவேளை தமக்கு ஆபத்தைத் தேடிக்கொள்கின்ற ஒரு போக்கும் கூட அனைத்துலக ரீதியில் காணப்படுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக டென்னிஸ்உலகில் ஆர்யன்ரீனாவைச் சேர்ந்த கப்ரியாலா சபாட்டினி, அமெரிக்காவைச் சேர்ந்த அன்ட்ரி அகாசி, பல குத்துச்சண்டை வீரர்கள் போன்ற ஒரு சிலரைக் குறிப்பிடலாம். இதன் காரணமாகத் தமது இல்லங்களுக்குப் பலத்த காவல்கள், தமக்கு மெய்ப்பாதுகாப்பாளர்கள் என்றவாறு தமக்குத்தாமே ஒரு சிறை வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ளும் துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகும் நிலையைக் காண்கிறோம். பல்வேறு அமைப்புக்களின் போட்டித்தன்மை, அதிதீவிர ரசிகர்கள், எதிரணி வீரர் மீதுகொள்ளும் பொறாமை, அதேவேளைஇவ்வீரர்களேஅறியாமல் பெருந்தொகைப் பந்தயப்பணங்கள் (இன்னொரு வகை வணிகம்) கட்டப்படுவது, தமது சாதக நிலைமையைக் கருத்திற்கொண்டு வீரர்களைஇல்லாதொழிக்கமுயற்சிகள் மேற்கொள்வதுஎன்பனஇவ்வீரர்களின் உயிருக்கே ஆபத்தாக முடிந்துவிடுகின்றன.

எமது மண்ணில் இத்தகைய போக்குகளுக்கு எவ்வகையிலும் இடமில்லை என்பது பெரிதும் மகிழ்ச்சிதரும் விடயம். வீரர்கள் தமது பொழுதுபோக்கு, மகிழ்ச்சி என்பவற்றிற்காகவும், ரசிகர்கள் தமக்குப் பிடித்தமான வீரர்கள், விளையாட்டுக்கள் மீதுகொண்ட நேசத்தாலும் விளையாட்டுடன் தொடர்புபடுகின்றார்கள். குறிப்பாகத் தொழில்சார் விளையாட்டுப்பாங்கு முற்றிலும் இங்கு காணப்படாததொன்று. இதனால் அனைத்துலகரீதியில்காணப்படுகின்ற முறைகேடுகள், ஆபத்துக்கள் இங்கு எவ்வாறும் எழ முடியாதது. ஆனால் (Celebrities) இங்கும் பல்வேறு விளையாட்டுக்களில் காணப்படுகின்றார்கள். இவர்களை ரசிகர்கள் தம் இதயம் நிறைந்த நட்சத்திரங்களாகப் போற்றுகிறார்கள். இவ்வகை வீரர்கள் தம் திறமையால் மட்டும் ரசிகர்கள் மனதில் இடம்பிடித்துக்கொண்டவர்கள் அல்ல. அதனால் தாம் பிடித்த இடத்தைத்தக்கவைத்துக்கொள்ளும் பாரிய பொறுப்பு இவர்களுக்கு உண்டு. ஏனெனில் விளையாட்டுத் திறமையோடு, தமது சொந்த வாழ்வின் தூய்மை, களங்களில் விளையாடும் நாகரிகமான முறைகள், ரசிகர்களை மதிக்குந் தன்மை, ஏனைய வீரரின் வீழ்ச்சியில்தாம்வெற்றிகாணக்கூடாது என்ற சிந்தனை போன்றவற்றையெல்லாம் வீரர்களின் திறமையுடன் இணைத்து நோக்கியே எமது ரசிகர்கள் வீரனைப் போற்றுகின்றார்கள். இவையெல்லாம் சேராதவிடத்துரசிகர்கள்இவர்களைத் துச்சமாக நினைத்துத் தூக்கி எறிந்துவிடுவார்கள். நாம் ஒரு பாரம்பரியமான பண்பின் அடிப்படையில் வாழும் சமூகம். இதனாற்றான் எம்மண்ணில் வளர்ந்து வரும் விளையாட்டுத்துறைகள் பல தடைகளின் மத்தியில் அண்மைக் காலத்தில் பெருவீச்சொன்றைக் காட்டிநிற்கமுடிந்திருக்கிறது.

எமது வளங்கள் இங்கிருந்து படிப்படியாக வெளியேறிக் கொண்டிருப்பது இன்னொரு துயரம். தனது எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்வது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உள்ள உரிமை. இதில் தலையிடுவதை யாரும் விரும்புவதில்லை. இதேவேளை விளையாட்டுக்களில் பிரகாசிக்கும் வீரர்கள் ஒருவகையிற் பொது வாழ்வுக்குள் வந்து விடுகிறார்கள். இந்நிலையிற் போற்றப்படும் வீரர்களில் ரசிகர்கள் ஒருவித உரிமையை எடுத்துக்கொள்வது தவிர்க்க முடியாததே. ஏனெனில் இவ்வீரனின் திறமைக்காக மட்டுமன்றி, அவனது திறமை அவனது துறையில் சமூகத்துக்குப்பயன்பட்டால்...? என்றதொரு வினாவையெழுப்பி அந்தவளம் சமூகத்துக்குப் பாய்ந்தோடவேண்டும் என்றுஆசைப்படுகிறார்கள். இந்நிலையில் இவ்வகை வளங்களின் இழப்பு, பெரும் மனச்சுமையை ஏற்படுத்துவதாக அமைகிறது. எது எவ்வாறாயினும்எமதுரசிகர்கள்எமது வீரர்களை நேசிக்கும் பாங்கும் கண்ணியப்படுத்தலும் உலகில் எந்தப் பாகத்திலும்கிடைத்துவிடாது. இந்தக் கௌரவம், உணர்வுடன் இணைந்தது.

ஆகவே விளையாட்டுப் பண்புகள் என்பவை வாழ்க்கையின் வழிகாட்டி என்று அனைவரும் மனதில் இருத்திக்கொள்ளவேண்டும் என்பதைரசிகர்கள்எதிர்பார்க்கிறார்கள். அனைத்துலக ரீதியாக விளையாட்டுக்கள், அதனோடு இணைந்து செயற்படுத்தும் பல்வேறு கட்டமைப்புக்கள் மிகவும் இறுக்கமானவை. அத்தோடு வலுவானவை. இந்நிலை ஓரளவிலாவது அனைத்துலக விளையாட்டுக்கள், சூதாட்டம் என்ற அவப்பெயரைப் பெறாது காத்துக்கொள்ள முடிந்திருக்கிறது. முற்றாக இவ்வமைப்புக்கள் இவற்றில் வெற்றி பெறாவிட்டாலும் ஓரளவிலாவது வெற்றிபெறக் காரணம் இவ்வமைப்புக்களின்தகுதிசார்உயர்நிலைத்தன்மையாகும். இத்தன்மையினாலேயே பல உலகப்பிரசித்திபெற்ற விளையாட்டுக்கள் ஒரு குடையின்கீழ் அனைத்துலகரீதியில்செயற்பட முடிந்திருக்கிறது. இவ்வுயர் தகமை எந்த மட்டத்திற்கும் எமது பிரதேச மட்டத்திற்கும் ஏற்புடையதொன்றாகும். நிறுவனங்களை அமைத்துக்கொள்வதோ செயற்படுவதோ சுதந்திரம். அது யாருக்காக இயங்குகின்றது என்ற வினா எழும்போது, விளையாட்டுச் சார்ந்த எந்த நிறுவனமும் ஏதோ ஒரு விளையாட்டுடன் தொடர்புடையதாகவே இருக்கும். மொத்தத்தில் அது மக்களுடன் தொடர்புடையது என்பது சொல்லித் தெரியவேண்டிய தொன்றல்ல. இங்குதான் உயர்தகமை என்பது அவசியமாகிறது. உயர்தகமை என்பதிற் பல விடயங்கள் அடங்கும். முதலாவது எடுத்த காரியங்களைத்துணிவாகச்செய்வது. அதற்கு அத்துறையில் ஆழ்ந்த புலமையும் ஆற்றலும் அனுபவமும் இருக்கவேண்டும். அடுத்தது மேற்கொண்ட காரியத்தைச்செய்வதற்குத் தேவையான அர்ப்பணிப்பு, அதோடு ஒரு விளையாட்டை ஒழுங்குபடுத்தும் போதோ, செயற்படுத்தும் போதோ, விளையாட்டைத் திடலில் (மைதானம்) நடத்தும்போதோ இது விடயங்கள் ஆயிரக்கணக்கான மக்கள் அறியாததல்ல் அவர்களால் செய்ய முடியாததும் அல்ல. மொத்தத்தில் அவர் ஏதும் அறியாத பாமரப் பார்வையாளர் அல்ல என்பதையும் நன்குணர்ந்துகொள்ள வேண்டும். எனவே ரசிகர்களைத் திருப்திப்படுத்தும் ஆற்றல் இல்லாத நிலையில் இவர்களின் தகுதி, நம்பகம் என்பன கேள்விக்குரியதாகும். எமது ரசிகர்கள் மிக நாகரிகமானவர்கள். இதனால் அவர்கள் தமக்குள் விவாதித்துக் கொள்கிறார்கள். விசனப்பட்டுக்கொள்கிறார்கள்.


இன்று அனைத்துலக ரீதியில் 'மின்னணுப் பொறிமுறை' மத்தியத்த முறைகள் வந்துவிட்டன. துடுப்பந்தாட்டத்தை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். இன்னொரு வகையில் ஆட்டங்கள் ஏதோ ஒரு முடிவுடன் முடிந்திருக்கலாம். அவைஅத்துடன் முடிவதில்லைஎன்பதற்கு1994உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நல்லதொரு எடுத்துக்காட்டு. அதாவது ஆட்டம் முடிந்தபின்னும் கூட தொலைக்காட்சி ஆய்வின்பின் வீரர்கள் தண்டிக்கப் பட்டுள்ளார்கள். மத்தியத்தர்கள் தகுதியற்றவர்களாக நிரூபிக்கப்பட்டு அடுத்த ஆட்டங்களுக்கு நீக்கப்பட்டுள்ளார்கள். கடந்த ஆசியப் போட்டிகளில் கலந்துகொண்டு

**தங்கப்பதக்கங்கள் பெற்ற பலர் தகுதி நீக்கம் செய்யப்பட்டு, எதிர்காலத்தில்விளையாடத் தடைவிதிக்கப் பட்டுள்ளார்கள். எம்மிடம் நிறுவன ரீதியாக அவ்வகை 'மின்னணுப் பொறி முறை' வசதிகள் இல்லாதிருக்கலாம். ஆனால் ரசிகர்கள் அவற்றைப் பகுத்தாயும், உணரும் திறன் மிகவும்கொண்டவர்கள். எனவே எந்தவொரு விளையாட்டிலும் தலைதூக்கும் தகுதியீனச் செயல் முறைகள், பச்சாதாபங்கள், அவர்களுக்கெதிராகச் செயற்படத்தயங்கும் நிறுவனங்கள்பற்றிய கணிப்பொன்றுமிகவும்கசப்பானதாக ரசிகர்கள் மத்தியில் காலா காலமாக நிலைத்துநிற்கும்.**

விளையாட்டுக்கள் திடலில் மட்டும் முடிந்து விடுவனவல்ல. துடுப்பந்தாட்டத்தின் ஆறு மணித்தியாலங்களோ, வலைப்பந்தாட்டத்தின் நாற்பது நிமிடங்களோ, உதைபந்தாட்டத்தின் அறுபது நிமிடங்களோ அந்த விளையாட்டின் முடிவல்ல. உண்மையில் அதன் பரிமாணம், அவ்வாட்டம் முடிந்தபின் பல்வேறு உணர்வலைகளாகக் கிளை பிரிந்து பரந்து செல்கின்றது. நாம் ஒரு போராட்டச்சமூகம்.நாம்செய்யும்எந்தக் காரியமும் சத்தியம், நீதியின் பாற்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டும்.இன்றேல் விளையாட்டுத் துறையின் மகிமைக்குக் களங்கம் ஏற்படுவது மட்டுமல்ல, விளையாட்டுத் தொடர்பானஅத்தனைபேருக்கும்ஒரு விரக்தி நிலையை உருவாக்கிவிடும். எனவே நாம் எல்லோரும் ஒன்றிணைந்து, இம்மண்ணின் விளையாட்டுத் துறையை மென்மேலும் வளப்படுத்த, எம்மாலான அனைத்தையும் சத்தியத்தின்பால் நின்றுசெய்யப்படுத்தவேண்டும்.

தமிழீழத்திலிருந்து
**வா.ஜெயரட்னம்**
(நிர்மலன்)





www.tamilarangam.net



# ஜேர்மனியில் அன்னைபூபதியின் ஏழாவது நினைவுநாள்



"காந்திஎன்ற பெயருக்கு கோட்சே என்ற அர்த்தத்தை உன் மரணத்தின் போது தான்தாயேஇந்தியாஎழுதிக்காட்டியது" போன்ற வார்த்தைகள் பிராத்தனையாக மண்டபத்தை நிறைத்தபோது மக்கள் அன்னைபூபதியின்நினைவில்ஆழ்ந்து அமைதிகாத்தனர்.

அன்னை பூபதி நினைவுப் போட்டி 1995இல் பங்குபற்றிய பரிசுக்குரிய போட்டியாளர்களுக்கு செஞ்சோலைப் பொறுப்பாளர் திரு. இராஜசுந்தரம் அவர்களும், விடுதலைப் புலிகளின் தென்மாநிலப் பொறுப்பாளர் சிறீரவி அவர்களும் சான்றிதழ் வழங்கினர். சிறுவர்களின் வில்லிசை, குழந்தைகள் நிகழ்ச்சி என்ற வகையில் பாராட்டைப் பெற்றது.

**மனிதத்தை விதைத்துவிட்டு மரண மான தாயேஅன்னைபூபதியே!**
**-ஜேர்மன் கலைபண்பாட்டுக் கழகப்பொறுப்பாளர்**

"அம்மா!பூபதித்தாயே!

பட்டினி கிடந்து பசித்த வயிற்றில் விடுதலையைக்கருக்கொண்டதாயே! பல்லாயிரம் ஈழவிடுதலை வீரர்கள் நெஞ்சில் நெருப்பைப் பிறப்பித்த பேரொளியே! மனிதனைக் கொல்ல ஆயிரம் ஆயுதங்களை வல்லரசுகள் கண்டுபிடித்த வண்ணமேயுள்ளன. ஆனால்!

அந்த ஆயுதங்களையும் மீறிய அபாரசக்தியை உன் ஆன்மா உண்டு பண்ணியது தாயே! இந்திய வல்லாதிக்கத்தின் ஆயுதக் குவியலின் மேல் நின்று எக்காளம் போட்டுச் சிரித்த எதிரி உன் ஆத்ம ஒளிபட்டுக் கருகிப் போனான்தாயே!

ஆயுதம் மட்டும் தான் பலம் என்று அவன்நம்பியது பொய்யாகிப்போயிற்று. உனது மூச்சு வேகத்தைக் குறைத்து உனது உயிர் ஊசலாடிய போது எதிரி இடறிக்கொண்டிருந்தான்.

உனது உயிர் பிரிந்ததும் அவனால் தமிழீழத்தில்நிலை கொள்ள முடியாமல் போயிற்று தாயே! உனது ஆத்மாவின் பலத்தைஎன்னவென்றுசொல்வது?

உண்மை புலிகளுக்குள் நிமிர்ந்த நிற்கிறது என்ற உண்மையை இடியோசை போல் சொல்ல நீ மௌனத்தைக் கருவியாக்கினாய். நீ மரணித்த போது, நீ சொல்லாத அந்த வார்த்தைகள் எதிரொலித்து நின்றன தாயே!

அதர்மத்தை எதிர்க்க யாருடைய அனுமதியும் தேவையில்லை என்று தேவனுடைய சன்னிதானத்தில் நின்று வழக்காடியவள்நீ!

என் கோரிக்கை என்னைப் போல் புனிதமானது என்று சொல்லாமல்ச் சொன்னசத்தியவடிவம்நீ!

தாயே! ஆசாபாசங்களைத் துறந்து ஆண்டவனோடு ஒன்றிவிடுவது தான் துறவி என்று நாங்கள் தவறாக கருதினோம் அன்று. ஒரு உயிர் அடிமைப்பட்டு அழியும் போது அதனைக்காப்பாற்றபற்றற்றநிலையில் போராடி மாள்வதுதான் உண்மைத் துறவு என்று நீ போதித்து விட்டாய் இன்று. நாங்கள் மலர்தூவி வாழ்த்தும் தெய்வங்களுள் ஒன்றாக நீயும் இதயங்களுள்வாசம்செய்கிறாய்தாயே!

இறுதிநாட்களில்நீமெலிதாகசுவாசித்த சுவாசம் புயலாக புலிகளோடு சேர்ந்து விளையாடும் வேகத்தைப் பார்! புதிய பரணிபடைக்கும் புலிகளுக்குள், தாயே!உன்அகிம்சைநெருப்புகனன்று நிற்கிறது.

குளிர்பதனப் பெட்டியுள் குளிர்கின்ற மின்சாரம் அடுப்பிலே அனல் கக்கவில்லையா! நீ குளிர்ந்து உன் உடல் விறைத்தபோது, தாயே! தமிழினம் கொதித்து முறைத்ததை நாடறியும்.

கிழக்கிலே சூரியன் உதிக்கும் வழக்கம் உள்ளவரை, தாயே!உன்னைத் தமிழினம் மறவாது. வடக்கில் திலீபன் ஒலித்த அகிம்சையை கிழக்கிலே விதைத்த விருட்சம் நீ தாயே! தென் தமிழீழத்தின் உணர்வை மேற்குலகுக்கு பறைசாற்றிய வீராங்கனைநீதாயே!

நான்கு திசைகளும் இன்று உன் புகழ் பாடும். மனிதத்தை விதைத்து விட்டு மரணமானதேவதைநீ.

மகாத்மா காந்தியின் அகிம்சை வழியை விளக்காகப் பிடித்துக் கொண்டு ஒளிவீசிய இந்தியா, உன்னையும், திலீபனையும் கொன்ற போது இருளில் மூழ்கிப்போயிற்றுதாயே!

தன்னை புத்திசாலியாக காட்ட முற்பட்ட பருந்து உன் தியாகத்தின் ஒளிபட்டு குருடாய்ப் போயிற்று. உன் மரணத்தின் நிழல் பட்டு கருகிப் போயிற்று.

காந்தி என்ற பெயருக்கு கோட்சே என்ற அர்த்தத்தை உன்மரணத்ததின்போது போயிற்று.

காந்திஎன்ற பெயருக்கு கோட்சே என்ற அர்த்தத்தை உன்மரணத்ததின்போது தான்இந்தியாஎழுதிக்காட்டியதுதாயே! அம்மா!

உன்னை நீயே கொடுத்த கொடையில் நாம்தாயகத்தைமீட்போம்உன்ஒளியில் நாங்கள்விடுலைகாண்போம்.

உன்வழியில்நாங்கள்புலிகளாவோம்! எம் விழியில் இனி உன் விடுதலை ஒளியேதானம்மா!"

இவ்வாறு அவர் அப்பிரார்த்தனையில் தெரிவித்தார்.

**பணப்பலத்திற்குஅப்பாற்பட்ட ஆயுதம்"உயிராயுதம்"**
**-விடுதலைப் புலிகளின் ஜேர்மன் தென்மாநிலப் பொறுப்பாளர**

"இனிமேல்ஏமாற்றத்திற்குஇடமில்லை என்பதை புலிகள் தெளிவாக தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளனர். இனி ஒருதடவையும் தமிழினம் ஏமாறத்தயாரில்லை.ஏமாற்றமுடியாது. பணபலத்திற்கும் அப்பாற்பட்ட உயிராயுதம் உலகில் எவராலும் வாங்கிவிடமுடியாத ஒன்று. இந்தத் தியாகம் சொற்களுக்குள் அடக்க முடியாதது. அங்கே எம் வீரர் சாதனை படைக்கும்இந்தக்காலகட்டத்தில்நாம் ஒருமித்து தமிழீழ விடுதலைக்கு உதவவேண்டும்"என்றார்.

தமிழர் கலைப்பண்பாட்டுக் கழக நடனக் கலைஞர்களின் நடனங்கள் உணர்வு பூர்வமான விடுதலையை வெளிப்படுத்தி பார்வையாளரை ஆட்கொண்டது. 'பதில்சொல்', 'காட்டிக்கொடுப்பவன்' ஆகிய இரு நடன தொகுப்புக்களும் சிறந்த கலைப்படைப்பாக பாராட்டப்பட்டது.

600க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி, விடுதலை உணர்வு நிறைந்த ஒரு விழாவாக, பார்வையாளர்கள் விடுதலை உணர்வில் மூழ்கி, அமைதியாய் நடந்துநிறைவுற்றது.

# இராணுவ நலன் சார்ந்த...

அரசாங்கத்திற்கு விதிக்கப்பட்ட காலக்கெடு எனக் கொள்ள வேண்டி உள்ளது.

இக்காலக்கெடுவிற்கு ஜனாதிபதி சந்திரிகா அளித்துள்ள பதிலே, இதுவரையில் அவர் இனப் பிரச்சனைக்குச் சமாதான தீர்வு காண்பதே தனது குறிக்கோள் எனச் செய்த பிரசாரத்திற்குப்பதில்அளிக்கப் போதுமானதாகவும், அவரின் உண்மையான நோக்கத்தை வெளிக் காட்டுவதாகவும்உள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த பிரபல சிங்களப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரும், அரசியல் விமர்சகரு மான ஒருவர், "ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஓர் இனவாதி. ஆனால், பிரேமதாச இனவாதி அல்ல, இனவாதத்தைஅரசியலுக்காகஅவர் பயன்படுத்தினார். ஆனால் சந்திரிகா அவர்கள் இருவரும் போன்றும் இல்லை"என்றார்.

ஆனால் அப்பத்திரிகை ஆசிரியரின் விமர்சனம், மதிப்பீடு எந்தளவிற்குச் சரியானது என்பதை மதிப்பீடு செய்வதற்கானதொரு அரசியற் சூழ்நிலை ஒன்று தற்பொழுது உருவாகியுள்ளது. இதில் சந்திரிகா, ஜே ஆர். போன்ற அல்லது பிரேமா போன்ற அல்லது தனக்கே உரித்தான தனித்துவமான பேரினவாத அம்ச ங்களைக் கொண்டவரா? அல்லது இவர்கள் அனைவரிலும் முற்றிலும் மாறான அதாவது பத்திரிகை ஆசிரியர் குறிப்பிட்டது போன்று தனித்துவமான சமாதானத்தை நாடிநிற்கும் ஒரு சிங்களத் தலைவரா? என்பதைக் கண்டு கொள்ளமுடியும்.

# உழுத்த மாளிகையின்..

உணர்த்திவிட்டது. அது பிராந்திய ச்சிக்கல் எனும் நிலைப்பாட்டைத் தாண்டி, உலகளாவிய அங்கீகார த்தைப் பெற்றுவிட்டது. அதனை வழிப்படுத்திய வரலாற்றினை, இயற்கையைத் தனது ஆசானாக க்கொண்ட தலைவன் அதே வரலாற்றின் இயங்கு விதிகளுக்கு ஏற்ப எல்லையற்ற இயற்கையின் சக்தியை உள்ளடக்கியவனாக மிளிரும்நிலை தோன்றிவிட்டது. எனவே இப்போது எம்மக்கள் மேலும் உறுதியைப் பெறவேண்டும். போரா ட்டத்திற்கு வலிமை சேர்க்க வேண்டும். வளமான வாழ்வினைக் கனவுகாணவேண்டும்.ஏனெனில், "உழுத்தமாளிகையின் இடுக்குகள் எங்கணும் ஆலம் விதைகள்" எனவே எம்மக்கள் "நம்பிக்கை யுடன் எழ"வேண்டும்.


## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யேர்மன் கிளை ஒழுங்கு செய்யும்

## நாடகப் போட்டி 1995


தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மன்கிளை 1995ம் ஆண்டிற்கான நாடகப் போட்டியொன்றை ஐரோப்பா அளவில் நடாத்த உள்ளது.

தமிழீழ விடுதலையை ஏற்கும் கலைஞர்,இந்தப் போட்டியில் பங்குபற்றலாம். தாய்மண் பற்றோடு, அந்நிய மண்ணில் வாழும் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கோடு இதனை நடாத்தப்படுகிறது.

**தொடர்புகளுக்கான முகவரி**

E.ANANDARAJAH
HOMPESCH STR - 16
41189 MONCHEN GLADBACH
GERMANY

www.tamilarangam.net



# மாயமான்

"மயக்குறு" வண்ணம் மயக்கும் வண்ணம்
மயக்குவது அந்தச் சூர்பனகை யெண்ணம்
தயக்குறு நடையும் தாவித் தாவித்
தலைவனை வேறு தனிவழி இழுக்க
நயக்குறு மொழியும் நாவில் தேனும்
நலமாய்க் கொண்டு நயம்படப்பேசி
வியக்குறு வண்ணம் விதமாயுரைத்து
வந்தது அந்த மாய மானும்



அண்ணலும் நோக்கினான் அவளது போக்கினை
ஆகா! என்னையும் மாயமான் பின்னே
உண்மையென்றெண்ணித் தொடர்ந்த இராமனாய்
என்னையும் எண்ணினாய் பேதையே! பேதமை
கண்ணனாய் இராமனாய்ப் "பிரபாவதாரம்"
பிழைகளையிங்கே கொள்ளவுங் கூடுமோ?
'பெண்ணென மனத்திடை பெருந்தகை' நினையா
தெடடா பாணம் தொடடா போரை!

நாயன்மார்கட்டு சிவகுமாரன்


L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark.
Tel/Fax: 97-155299

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica, U.S.A
T/F: 718-657-9463

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963 , F: 384 0683

T.C.C
Glomminge Grand - 29
16362 Spanga, Sweden
Tel: 08-7612943




Printed by Observer Group Newspapers